கல்கி



KALKI 1.11.1959

30 காசு

பல் முளைக்கும் பிராயமா?

வேதனையின்றி இலகுவாகப் பல் முளைக்க உதவுவது பிரமிட் பிராண்ட் கிளிஸரின்





பல் முளைக்கும் பிரச்னையா? புண்பட்ட ஈறுகளா? மென்மையான துணியொன்றை உங்கள் விரல்மீது சுற்றிக்கொண்டு பிரமிட் கிளிஸரினில் நனைத்தெடுத்து குழந்தையின் ஈறுகள்மீது இலேசாகத் தேய்த்திடுங்கள். அது சட்டென்று குணமளிப்பதுடன், சிறுவர்கள் ரசிக்கும் இனிய சுவையுள்ளது. மருத்துவத்திற்காகவும், அழகுசாதனங்களுக்காகவும், பருவகாலங்களுக்காகவும் பயன்படும் சுத்தமான பிரமிட் கிளிஸிரினுக்குப் பற்பல வீட்டு உபயோகங்களும் உண்டு.

இலவசம் துண்டுப் பிரசுரம்! இக்கூப்பனைப் பூர்த்தி செய்து "இந்துஸ்தான் லீவர் லிமிடெட், தபால் பெட்டி நம்பர் 409, பம்பாய்" என்ற விலாசத்திற்கு அனுப்புங்கள்.

பிரமிட் கிளிஸரினின் வீட்டு உபயோகங்களை விவரிக்கும் இலவசத் துண்டுப் பிரசுரம் ஒன்றை அனுப்பவும்.

என் பெயரும் விலாசமும்	நான் கிளிஸரின் வாங்கிய மருந்துக் கடையின் பெயரும் விலாசமும்
....	....
....	....
....	....

KWM

விநியோகஸ்தர்கள்: ஐ.ஸி.ஐ.(இ)ப்ரை.லிட்., பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை PYG 13-50TM

கல்கி

பொருளடக்கம்

நவம்பர் 1, 1959

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



இலங்கையில் கிடைக்குமிடம் : **AVRA Ltd., Colombo**

ரேடியோ ஸிலோன் :—41.72 மீட்டரில் "ரெமி நகைச்சுவை நாடகம்"
வெள்ளிக்கிழமைதோறும் மாலை 6-30 லிருந்து 6-45 வரை



மலர் 19 இதழ் 14	தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்	விகாரி௵ ஐப்பசி 15௳

ஐ. நா. வில் திபெத் விஷயம்

சிலர், பிறருக்குக் கஷ்டம் வந்தால், வெகு சுலபமாகத் தர்ம நியாயமான பரிகாரங்களையும் நடவடிக்கைகளையும் சொல்லுவார்கள். ஆனால் தங்களுக்கே ஒரு கஷ்டம் வந்தால் அப்போது அந்த மேதாவிலாசமும் நியாய உணர்ச்சியும் பயன் படுவ தில்லை. இன்று இந்தியாவின் நிலைமை இப்படித்தான் இருக்கிறது.

நமது பிரதமர் நேருஜியின் வெளி நாட்டுக் கொள்கை தர்ம நியாயத்தின்மீது எழுப்பப்பட்ட கொள்கை. இதை நாம் பன்முறையும் வரவேற்றிருக்கிறோம். இந்தக் கொள்கை விளக்கமாக நேருஜி நிகழ்த்திய பிரசங்கங்களெல்லாம் நல்ல பிரசங்கங்கள் தான். சில ஆண்டுகளுக்கு முன், நேருஜி, அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது அங்கு பிரதிநிதிகள் சபையில் நமது நடுநிலைமைக் கொள்கையைப் பற்றி வெகு நன்றாக விளக்கிப் பேசினார்:

“ஒரு நாட்டு மக்களின் சுதந்திரத்துக்கு ஆபத்து விளையும்போதும், நியாயத்துக்குப் பங்கம் ஏற்படும்போதும், அநீதமான ஆக்கிரமிப்பு நிகழும்போதும், எங்களால் ‘நடுநிலைமை வகிக்கிறோம்’ என்று சொல்லிக்கொண்டு சும்மா இருக்க முடியாது; இருக்கவும் மாட்டோம்” என்றார்.

இந்தக் கொள்கையை மிகவும் பாராட்டினோம். இந்தக் கொள்கையை அப்படியே கடைப்பிடிக்கவும் செய்தோம்—பிற நாடுகள் பாதிக்கப்பட்டபோது. சூயஸ்மீது பிரிட்டன் படையெடுத்தது தவறு என்று இந்தியா எவ்வளவு காரசாரமாகத் தாக்கியது!

ஆனால் இன்று நம் நாட்டுத் தலைவாசலில் அக்கிரமம் நடக்கிறது; அமெரிக்காவில் நேருஜி வர்ணித்த அத்தனை அநீதிகளும் திபெத்தில் நடைபெற்றிருக்கின்றன; திபெத் மக்களின் சுதந்திர வாழ்வுக்கு ஆபத்து ஏற்பட்டது; நீதிக்குப் பங்கம் விளைந்தது; ஆக்கிரமிப்பே நடந்திருக்கிறது. திபெத்தின் தலைவர் தலாய்லாமாவும் 12,000 அகதிகளும் இந்தியாவில் சரணடைந்திருக்கின்றனர். இருப்பினும், திபெத்தில் சீனா இழைத்த கொடுமையை ஐ. நா. சபையில் விசாரிக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை இந்தியா ஒத்துழையாமை முறையில் எதிர்த்து விட்டது.

திபெத்தின் தலைவர் தலாய் லாமா ஐ. நா. சபையில் எழுப்ப விரும்பிய குரலைச் செவி கொடுத்துக் கேட்கக் கூடாது என்று பொருள்பட நம் பிரதிநிதி திரு வி. கே. கிருஷ்ண மேனன் நடந்துகொண்டார். அயர்லாந்தும், மலாயாவும் திபெத் விஷயமாகக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னபோது, இந்தியா இவ் விஷயத்தை விவாதத்துக்கே கொண்டு வரக் கூடாது என்று பேசிவிட்டது.

சூயஸ் விஷயத்தின்போது கடைப்பிடித்த கொள்கையைச் சீன விஷயத்தில் இந்தியாவினால் கடைப்பிடிக்க முடியவில்லை. நமது நடுநிலைமைக் கொள்கையின் தர்மத்தை இழந்து விட்டோம். பிறருடைய விவகாரத்தில் தர்மத்தைக் கடைப்பிடிக்கத் தயங்காத நாம், நமக்குச் சமீபத்திலும் நம்முடைய மக்களின் உள்ளத்தை மிகவும் துயரப்படுத்தும் அளவிலும் சங்கடம் வந்தபோது அந்தத் தர்ம நியாயத்தைக் கடைப்பிடிக்க முடியவில்லை.

நாம், இந்த விவகாரத்தில் பங்கெடுத்துக் கொள்ளாததினால், சீனாவின் ஆக்கிரமிப்புக்கும் அநீதிக்கும் உடந்தையாக இருக்கிறோம் என்றுதான் பொருள் ஏற்பட்டது. தலாய் லாமா இந்த நாட்டை விட்டு வெளியேறினால் நம்மைவிடச் சந்தோஷப்படுபவர்கள் யாருமில்லை என்பதைத்தான் காட்டிக் கொண்டோம். இது நமது நாட்டின் பண்புக்கு முற்றும் விரோதம்.

நாம் இந்த விவாதத்தில் இவ்வளவு அசட்டுத் தனமாக நடந்து கொண்டதற்குக் காரணம் அறிய முடியவேயில்லை.

சீனு ஐ. நா. சபையில் இடம் பெறுதபோது, அதை அச்சபையில் எப்படிக் கண்டிப்பது என்று காரணம் காட்டலாம்.

தர்மம் நியாயம் என்பது மிக நுட்பமான தோர் விஷயம். தர்மமும் நியாயமும் எல்லாச் சமயத்திலும் ஒரே மாதிரி யிருப்ப தில்லை. அது மிகவும் நுட்பமானது !

வாலியை ராமன் மறைந்திருந்து கொல்ல வேண்டியதாயிற்று ; துரியோதனனைப் பீமன் யுத்தமுறையைப் புறக்கணித்துத்தான் கொல்லவேண்டி யிருந்தது. இதைத்தான் கண்ணனும், அர்ஜுனனுக்குக் குருக்ஷேத் திரத்தில் தேர்த் தட்டில் நின்று உபதேசிக்க வேண்டியிருந்தது. 'இவ்வளவு பேரைக் கொல்வதா ? சுற்றத்தாரையும் குருவையும் கொன்று நாம் அடையும் பயன்தான் என்ன ?' என்று அர்ஜுனன் அங்கலாய்க்கும்போது, கண்ணன் அம்பு எய்து போர் நிகழ்த்துவது க்ஷத்திரியன் கடமை என்றார் ; அதுதான் உன் தர்மம் என்று எடுத்துரைத்தார்.

திபெத் விவாதத்தை இந்தியா வரவேற்றிருக்க வேண்டும். அத்துடன் இவ்வளவு கடுமையான அக்கிரமத்தைச் செய்த சீனுவை நேரில் வைத்துக் கொண்டு பேச வாய்ப்பில்லாமல், ஐ. நா. சபையை விட்டு வெளியே சீனுவை வைத்திருப்பது தவறு என்றும் சொல்லியிருந்தால் அந்த வார்த்தைக்கு வேகமும் மதிப்பும் இருந்திருக்கும் !

நமது தவறான நடவடிக்கையினால் சீனுவின் நேசமாகிலும் வளர்ந்ததா ? இல்லை ; அதற்கு மாறாக, ஐ. நா. சபையில் இத்தகைய நடவடிக்கை எடுத்துக் கொண்ட அன்றே சீனு நமது எல்லைப் பகுதியில் நுழைந்து எல்லைக் காவலர்கள் பதினேழு பேரைச் சுட்டுக் கொன்றிருக்கிறது. நாம் பயங்கொள்ளிகள், என்ன செய்தாலும் ஆட்சேபிக்க மாட்டோம் என்று சீனு நினைத்து வருகிறது.;

காங்கிரஸ் பிரசாரமும், ராஜாஜியும்

'முதன் முதலில் கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்தது ராஜாஜிதான். இது மனிதனின் தனி உரிமையில் புகுந்ததாகாதா ? வட்டிக்குக் கடன் கொடுப்பது ஒருவனின் நியாயமான உரிமையல்லவா ? இதில் குறுக்கிட்டுக் கடன் நிவாரணச் சட்டம் செய்த ராஜாஜியே இன்று தனி மனிதனின் சுதந்திரம் பறிக்கப்படுகிறது என்கிறாரே!' இப்படிக் கேட்கிறார்கள் காங்கிரஸ் தோழர்கள்.

ராஜாஜி 1936ல் சென்னை சர்க்கார் பிரதம மந்திரி பதவியை ஏற்றபோது நாட்டு நிலைமை எப்படி யிருந்தது என்பதை மனத்தில் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். நகரங்களில் ஒரு ரூபாய்க்கு ஐந்து படி, அல்லது ஆறு படி அரிசி விற்று வந்த காலம். நகரத்தில் இந்த நிலை யென்றால் கிராமத்தில் இதைவிட அதிகமாகவே கிடைக்கும். ஏழு படி கூடக் கிடைக்கும். இதன் பொருள் என்ன ? விவசாயப் பொருளுக்கு நாட்டில் நல்ல வியாபாரமின்றி விவசாயக் குடிமக்கள் கஷ்டப்பட்டனர். எவ்வளவு விளைவித்து விற்றாலும், அவர்களுடைய அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாமலும் வாங்கிய கடனை அடைக்க முடியாமலும் அவதியுற்றனர். கிராமக் குடியானவர்கள் நெல்லை விற்றுக் கிஸ்தி கட்டவும், வாங்கிய கடன்மீது வட்டி செலுத்தவுமே அவர்கள் வருமானம் போதும் போதாமல் இருந்தது ! இந்த நிலையில் ராஜாஜி செய்த சட்டம், அசலுக்கு இரு மடங்கு வட்டி செலுத்தப் பட்டிருந்தால், கடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்பதுதான் !

இதனால் ஏழை விவசாயிக்குக் கடன் சுமையிலிருந்து விடுதலை அளித்தார். கடன் கொடுத்தவருக்கும் அநீதி இழைக்கப்படவில்லை. இருபாலருக்கும் நடு நிலைமையிலிருந்து நியாயம் வழங்கினார் ராஜாஜி. ஒருவர் சொத்தைப் பறித்து இன்னொருவருக்கு அவர் அளித்து விடவில்லை.

'ராஜாஜிதான் விற்பனை வரி முதலில் விதித்தார் ! அவரே இப்பொழுது வரித் திட்டத்தை எதிர்க்கிறாரே' என்பது மற்றொரு வாதம் !

அந்நாட்களில் கள்ளுக்கடைகளை ஏலத்துக்கு விற்று அரசாங்கம் பணம் சம்பாதித்து வந்தது. பின்னர் காங்கிரஸ் கொள்கைப்படி கள்ளுக்கடைகளை மூடி மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வந்ததால், அந்தக் கள்ளுக் கடையிலிருந்து வரும் வருமானம் சர்க்காருக்கு இல்லாமற் போய்விட்டது. அந்த வருமானத்தை இட்டு நிரப்பத்தான் ராஜாஜி விற்பனை வரி ஒரு ரூபாய்க்கு ஒரு தம்படி. (இன்றையக் கணக்குப்படி சொல்லப்போனால் அரை நயா பைசாதான்) வரி விதித்தார்.

மதுவிலக்கினால் ஏராளமான ஏழை மக்கள் கெட்டுப் போகாமல் பிழைப்பார்கள். இதற்காக மற்ற மக்கள் ஒரு ரூபாய்க்குத் தம்படி நஷ்டமுறுவது தவறல்ல என்று விதித்தார்.


ஆனால் இன்றைய வரித் திட்டங்களோ, மக்களுக்கு ஒரு பயனும் விளைவிக்காமல், ஒரு சில காங்கிரஸ்காரர்களுக்கும், கண்டிராக்டர்களுக்கும் பயன் கிடைக்க வழிகோலுகின்றன. அதுமட்டுமின்றி சர்க்கார் உத்தியோகவர்க்கம் பெருகத்தான் துணையாக இருக்கின்றன !

இதுதான் ராஜாஜி விதித்த விற்பனை வரிக்கும் இன்றையச் சர்க்கார் விதிக்கும் நேர், மறைமுக வரிகளுக்கும் உள்ள வித்தியாசம்.

* * *

ராஜாஜி 1952-ல் தஞ்சை நியாய வாரச் சட்டம் கொண்டு வந்தார் அல்லவா ? முதன் முதலில் ராஜாஜிதான் பண்ணையாள், சொந்தக்காரர் உறவில் குறுக்கிட்டது. இப்பொழுது அவரே நில உடைமையில் நுழைவதை எதிர்க்கிறார் என்பது மற்றொரு குற்றச்சாட்டு.

1952-ல் ராஜாஜி முதன்மந்திரியானபோது, தஞ்சையில் கம்யூனிஸ்ட் ஆதிக்கம் அபரிமித


கிருஷ்ண மேனன் ஐ.நா. சபையில் திபெத் மீது நிகழ்ந்த விவாதத்தில் வோட்டுரிமையை உபயோகப் படுத்தவில்லை.
சூ என் லாய்
மாசேதுங்
திபெத்
52ல் நியாயவாரச் சட்டம் கொண்டு வந்து ஒற்றுமையை நிலை நாட்டினார்.
இதுதான்
விவசாயி
நிலச் சொந்தக்காரர்
இப்பொழுது கொண்டு வரும் நிலச் சட்டங்கள்.....!
விவசாயி
நிலச் சொந்தக்காரர்

மாக இருந்தது. தினம் அங்கே களத்தில், வயல் வரப்புகளில் கலவரங்கள் நடந்த வண்ணம் இருந்தன. நாட்டில் பஞ்ச நிலைமை நிலவும் போது, உணவு உற்பத்தித் தொழிலில் ஈடுபட வேண்டிய மக்கள் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டிருந்தனர். மிராசுதாருக்கும் குடியானவருக்கும் கடும் மனஸ்தாபங்கள் ஏற்பட்டிருந்தன. இந்த இடைஞ்சலான நிலைமைக்குப் பரிகாரமாகத் தஞ்சை ஜில்லாவுக்கு மட்டும் நியாய வாரச் சட்டம் கொண்டுவந்தார். நிலத்தில் உழுது சாகுபடி செய்பவனுக்கு நாற்பது பங்கு என்று சட்டம் செய்தார். அதில் எதிர்பார்த்த பலன் கிட்டியது. மிராசுதார் பண்ணையாள் சண்டை ஓய்ந்தது. இரு பாலரிடையும் சுமுகமான உறவு நிலை ஏற்பட்டது. உணவு உற்பத்தியில் மக்கள் ஈடுபட்டனர். கம்யூனிஸ்ட்டுகளின் குழப்படி ஆதிக்கம் ஒழிந்தது.

ராஜாஜிக்குப் பின் வந்த காங்கிரஸ் மந்திரி சபையினர் பண்ணையாட்களுக்கும் மிராசுதார்களுக்கும் சுமுகமான உறவை ஏற்படுத்துவதற்குப் பதில் விரோதத்தையும், துவேஷத்தையும் கிளப்பவும்; வோட்டுக்களைப் பெறவும் அறுபது - நாற்பது என்று கொண்டுவந்தனர். இதற்குப் பிறகு நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் கொடுப்பதாகத் துராசையை வளர்த்தனர். அதைத் தீர்க்க முடியாது என்று தெரியவே, கூட்டுறவுப் பண்ணை என்று சொல்லிக் கூட்டுப் பண்ணை ஏற்படுத்தி நிலச் சொந்தக்காரர்களையும், குடியானவர்களையும் அடிமைப்படுத்தும் அர்த்தமற்ற திட்டத்தில் ஆழ்ந்திருக்கின்றனர்!

இன்னும் பல உதாரணங்கள் உண்டு.

மொத்தத்தில் ராஜாஜி கஷ்ட நிலைமையைச் சமாளிக்க ஒரு சீர்திருத்தம் கொண்டு வருகிறார். மற்றக் காங்கிரஸ்காரர்கள், ஒரு காரணமுமின்றி, சிந்தனையுமின்றிச் சமுதாயத்துக்கு நிரந்தரமான தீங்கு விளைவிக்கும் காரியத்தை 'நாங்களும் சீர்திருத்தம் செய்கிறோம்' என்ற பெருமைக்காகச் செய்கிறார்கள்!

இருந்தாலும் 'ராஜாஜி சென்ற வழியில்தானே நாமும் செல்கிறோம்' என்கின்றனர் காங்கிரஸ்காரர்கள்.

இதற்கு ராஜாஜி ஓர் அழகிய உதாரணம் சொல்லுகிறார். குடத்தில் கயிறுகட்டி, கிணற்றில் விட்டு நீர் மொள்ளச் சொல்லிக் கொடுத்தால் கிணற்றிலேயே விழுவேன் என்று சொல்லுவதற்கு அது காரணம் ஆகுமா?

எந்தக் காரியத்துக்கும், ஓர் அளவு அல்லது வரம்பு உண்டு; வரம்பு மிஞ்சிய எந்தக் காரியமும் தீதுதான். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்தானல்லவா? விஷத்துக்கு ஆட்சேபணை சொன்னால் விதண்டாவாதம் செய்கின்றனர்.

மணம் கமழும் தீபாவளி மலர்

இவ் வருஷத்திய தீபாவளி மலர் சென்ற வருஷத்து மலரையும் மிஞ்சிவிடக் கூடிய வகையில் மிகச் சிறப்பாக அமைந்திருப்பதை நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். வண்ண ஓவியங்களுக்கும் எண்ணக் குவியல்களுக்கும் ஓர் அளவில்லை.

மலர் அட்டையிலேயே, மண்ணுலகத்தவருடன் போட்டியிட்டுக் கொண்டு தேவ தம்பதிகள் வரும் அற்புதக் காட்சியைக் காண்கிறோம்.

உள்ளே காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் (பெரியவாளும் புதுப் பெரியவாளும்) அருள் கனியும் வதனத்துடன் காட்சியளிக்கிறார்கள். அவர்களை வணங்கிவிட்டு உள்ளே சென்றால், ஒரே சித்திர மயம்.

ஆவுடையார் கோயிலிலிருந்து நமது ஓவியர் சில்பி பெயர்த்தெடுத்து எழுதி வந்த சிற்ப சித்திரங்கள் கண்ணைக் கவருகின்றன.

பாரதியாரின் 'கண்ணன் என் காதலன்' பாட்டுக்கு ஓவியர் ராஜம் வரைந்துள்ள அழகிய மூவர்ணச் சித்திரங்கள் எதிரில் நின்று பேசுகின்றன.

ஓவியர்கள் லதா, விஜயா, கல்பனா முதலியவர்களும் தங்கள் தங்கள் கை வண்ணத்தை அற்புதமாக வெளியிட்டிருக்கிறார்கள்.

வடநாட்டுப் பெரும் கலைஞர் ஓவியர் கனு தேசாயின் சித்திரத்துக்கும் குறைவில்லை. ஹாஸ்யச் சித்திரங்களை சாமா வழங்கி யிருக்கிறார். கார்ட்டூன் சைத்ரிகர் விஜி இவ்வருஷத் தீபாவளிக்கு உலகத் தலைவர்களுக்குச் சில அரிய பரிசுகள் வழங்குகிறார். வண்ணச் சித்திரங்கள் இப்படி என்றால் எண்ணச் சித்திரங்கள் அவற்றை மிஞ்சிவிடக் கூடியனவாக இருக்கின்றன. ராஜாஜி வழங்கியிருக்கும் 'வாத்தியாருடைய சுய சரிதை' உள்ளத்தைத் தொடும் கதை.

நமது நாடு செல்வத்தால் பெருமையடையவில்லை. யந்திர விஞ்ஞான சாஸ்திரத்தால் பெருமை யடையவில்லை. நமது பெருமையெல்லாம் நமது மதங்களும் சமயங்களும் அளித்த பெருமை. 'ஹிந்து மதஸாரம்' என்னும் தலைப்பில் தமிழ் நாட்டின் தவப் புதல்வர் ராஜாஜி தந்தருளியிருக்கும் கட்டுரை என்றும் நிலைத்து நிற்கக்கூடிய கட்டுரை. நமது உப ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், யாழ்ப்பாணம் திரு க. நடேச பிள்ளை, திரு பாஸ்கரத் தொண்டைமான், திரு ப. கோதண்டராமன், திரு கி. வா. ஜகந்நாதன், திரு த. நா. குமாரஸ்வாமி, மயிலை திரு சீனி. வேங்கடசாமி முதலிய அறிஞர்களின் கட்டுரைகளும்; திருவாளர்கள் ஆர். கே. நாராயணன், அகிலன், பேராசிரியர் அ. சீநிவாசராகவன், க. சந்தானம், தி. ஜானகிராமன், ஆர்வி, மாயாவி, எஸ். ரங்கநாயகி, ஜெயகாந்தன், சுபஸ்ரீ, பூவை எஸ். ஆறுமுகம், பூர்ணம் விசுவநாதன், நா. பார்த்தசாரதி முதலிய பிரபல கதாசிரியர்களின் கதைகளும் வெளியாகி யிருக்கின்றன. இவை தவிர பல இளம் கவிஞர்களின் பாடல்களும் இடம் பெற்றிருக்கின்றன! இவ்வளவு அரிய இலக்கிய விருந்தை இவ்வருஷம் நம் நேயர்களுக்கு அளிக்க முடிந்ததைப் பற்றி மகிழ்கிறோம்!

தீரர் ஸி. பி. வாழ்க!

இந்த இதழ் அட்டையில் டாக்டர் ஸி. பி. ராமசுவாமி அய்யர் அவர்கள் உருவப் படத்தைப் பிரசுரிப்பதில் பெருமகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகிறோம்.

பாரத நாடு தந்த அரும் தவப் புதல்வர்களில் டாக்டர் ஸி. பி.யும் ஒருவர்.

அரசியலில் டாக்டர் பெஸண்ட் அம்மையாருடன் ஹோம்ரூல் இயக்கத்தில் சேர்ந்து முன்னணியில் நின்று தொண்டாற்றியவர். காந்திமகானின் ஒத்துழையாமை இயக்கம் வந்த பின்னர்தான் அவர் அரசியலில் மாறுபட்ட எண்ணம் கொண்டார். அவர் அரசியலிலிருந்து விலகினாலும், அவர் தேசத்துக்கு நிரந்தரமான தொண்டு புரிவதில் சிறிதும் பின்வாங்கவில்லை.

அன்னிய ஆட்சிக் காலத்தில் அவர் பல்வேறு பதவிகள் வகித்தபோது, தமிழ் மக்களுக்கு நிரந்தரமாகப் பயன் அளிக்கும் சேவைகளைப் புரிந்தார்.

மேட்டூர் அணையும், பைகாரா மின்சாரத் திட்டமும் டாக்டர் ஸி. பி. அளித்தவை.

திருவிதாங்கூர் திவானாக இருந்தபோது, முதன்முதலில் ஹரிஜனங்களுக்கு ஆலயத்தைத் திறந்து வைத்தார். அதுவும் கடும் வைதிகக் கோட்டையாக விளங்கும் திருவிதாங்கூர் ஆலயத்தைத் திறந்து வைத்து மகாத்மாஜியின் பெரு வியப்புக்குப் பாத்திரரானார்.

திருவிதாங்கூரைத் தொழில் மயமாக்கியவர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர்தான்.

அறிவும், ஆற்றலும், அஞ்சாநெஞ்சமும் படைத்த தீரர் டாக்டர் ஸி. பி. பலப் பல உன்னதமான · பதவிகளை வகித்து: இன்று நிம்மதியாக நாட்டு நடப்புகளைக் கவனித்துக் கொண்டு, இலக்கியத்துடன் உறவாடுவதிலும், மொழிகள் பற்றிய ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருக்கிறார். கிடைத்த வேலையைத் திறம்பட நிர்வகித்தாற்போல் கிடைத்த ஓய்வையும் திறமையாக அனுபவித்து வருகிறார்.

டாக்டர் ஸி. பி. அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து அவ்வப்போது தமிழர்களுக்கும் பாரத மக்களுக்கும் வழிகாட்டி வரவேண்டும் என்பதே தமிழர்களின் பிரார்த்தனை.

ஆகாசவெடி!

"கணவன் பிடிக்காவிட்டால் அவனை விட்டு ஓடிப் போக மனைவிக்கு உரிமை உண்டு."

—அமிர்தசரஸ் மாஜிஸ்திரேட் ஒருவர்

"ஓடிப்போய் மாமியார் மாமனாரை அழைத்து வர உரிமை உண்டா?" என்று ஒரு கணவன் கேட்கிறார்.

✱

"கோலார் தங்கச் சுரங்கத்தில் ஏழாயிரம் அடி ஆழத்தில் ஆயுத பூஜை கொண்டாடப் பட்டது."

— செய்தி

ஆழ்ந்த பக்திக்குச் சான்று இதைவிட வேறு என்ன இருக்க முடியும்?

✱

"கொசுக்கள் பட்டாளம் படையெடுப்பதாகக் கூறுகிறார்கள். பட்டாளம் எங்கேயாவது பறக்குமா?"

—சென்னை நகரசபையில் ஒரு கேள்வி

ஒரு வேளை பாரசூட் மூலம் இறங்குகிறதோ என்னவோ?

"சென்னை ராஜ்யத்தில் சில ஆறுகளில் முதலைகளை வளர்க்க அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது."

— செய்தி

முதலைகளின் நலனைக் கருதி அவை எங்கு வளர்க்கப்படும் என்பதைச் சொல்லாமல் இருந்துவிடப் போகிறார்கள்!

✱

"பொய்யை வெளிப்படுத்தும் ஒரு நூதனக் கருவியை உபயோகிக்கச் சென்னை போலீஸ் இலாகா திட்டம் வகுத்திருக்கிறது."—செய்தி


பொய்யை வெளிப்படுத்தும் அந்தக் கருவி இந்தச் செய்தியை வெளியிட்டதோ என்று நம்புகிறோம்.

✱

"உடல் பருமனைக் குறைக்க நினைத்தால் சர்க்கரையை உபயோகிக்காதீர்கள்!"

—இந்திய உணவு மந்திரி

சர்க்கரைக்காக அலைந்து இளைக்கச் செய்வது இதற்காகத்தானா?



அப்பு : கேளும் நண்பரே, கோவிந்தசாமி! வாழ்க்கையில் முன்னுக்கு வரவேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு!

கோவி : என்ன வழி அது?

அப்பு : நேரம் தவறாமல் கம கமவென்று சூடாகக் காப்பி சாப்பிட வேண்டும்!

கோவி : சொல்லுவது சுலபம்; ஆனால் இதற்கு மணி தவறாமல் பால் கிடைக்க வேண்டாமா?

அப்பு : ஏன் கிடைக்காமல் போகிறது? சென்னை அயன்புரம் பால் சப்ளை சங்கத்தினிடம் ஏற்பாடு செய்து கொண்டால் போகிறது. ஆனால்; தேவைக்குத் தக்கபடி அவர்களால் இப்போது பால்சப்ளை செய்ய முடியவில்லையென்று அன்று டீ பார்ட்டியில் கூறினார்கள்.

கோவி : டீ பார்ட்டியா? எங்கே? எங்கே? எனக்குச் சொல்லவே இல்லையே...நீர்?

அப்பு : ஆமாம்! நான்கு தினங்களுக்கு முன்னால் அந்தப் பால் சப்ளை சங்கத்தின் சார்பாக உட்லண்ட்ஸ் ஹோட்டலில், தேநீர் விருந்து நடந்தது. சங்கத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாயிருந்த காலஞ்சென்ற டாக்டர் எம். ஆர். குருஸ்வாமி முதலியார் அவர்களுடைய உருவப் படத்தையும், முன்னாள் சென்னை ராஜ்யக் கூட்டுறவு ரிஜிஸ்டிரார் ஸ்ரீ பழனியப்ப முதலியார் அவர்களுடைய படத்தையும் திறந்து வைத்தார்கள். இதையொட்டித்தான் தேநீர் விருந்து நடந்தது. பிரசங்கங்களும் நிகழ்ந்தன. சென்னைவாசிகளுக்குக் கூடிய சீக்கிரமே அதிகமாகப் பால் கிடைக்கச் செய்வதாகச் சங்கக் காரியதரிசி வாக்களித்திருக்கிறார்.

கோவி : டீ பார்ட்டிக்கு உம்முடன் யார் வந்திருந்தார்கள்?

அப்பு : குப்பு வந்திருந்தான். இதோ அவனைக் கூப்பிடுகிறேன்...டேய் குப்பு... எங்கேடா தொலைஞ்சு போனே...?

குப்பு : எங்கேயும் தொலைந்துவிட மாட்டேனுங்க; அதுவும் தீபாவளி சமயத்திலே.... என்னமோ கெடுபிடி பண்ணுறீங்களே?

அப்பு : கெடுபிடி பண்ணினால் என்ன மோசம் போய்விடப் போகிறது? உலகமே இப்போ கெடுபிடி யுத்தத்திலேதானேடா காலந் தள்ளுது...!

கோவி : இதற்காகக் குப்புவை நீங்கள் கெடுபிடி செய்வது நியாயமில்லை. குப்புவைக் காரணமில்லாமல் நீங்கள் கோபித்துக்கொண்டால் ஐ. நா. சபையில் 'திபெத்' வந்தபோது இந்தியா ஒதுங்கி நின்றதுபோல் நான் ஒதுங்கி நிற்கமாட்டேன்.

அப்பு : பேஷ்! பேஷ்! இன்று நீர் 'பேப்பர்' பார்த்தீரா? நானும் படித்தேன். திபெத்தில் சீனா செய்யும் கெடுபிடிகளைக் கண்டிக்க வேண்டியது போக, இந்தியா ஒதுங்கிக் கொண்டது ரொம்ப மோசம்...

கோவி : எனக்கு முன்னேயே தெரியும். என்றையத் தேதியில் சீனா மக்குமகன் எல்லைக் கோட்டைத் தாண்டிற்றோ அன்றே....

அப்பு : யார் அவன்? மக்கு மகன்...?

குப்பு : மாணிக்கஞ் செட்டியார் கடையில் வேலை பார்க்கிறானே மக்கு, அவன் மகன் போலிருக்கிறது...!

அப்பு : போலிருக்கிறது — தோன்றுகிறது என்று சொல்லாதே! மக்கு மகனைத் தெரியுமா, தெரியாதா உனக்கு?

குப்பு : அவனை நான் பார்த்ததில்லே.

அப்பு : நேரில் பார்க்காமல் யாரையும் மக்கு மகன் என்று சொல்லக் கூடாது. தெரிந்ததா?

குப்பு: சரிங்க, மக்குமகன் என்று யாரையும் நான் சொல்லவில்லே. கோவிந்தசாமிதான்...

கோவி : நானும் மக்கு மகன் அல்ல. நீயும் மக்குமகன் அல்ல. குப்புவும் அல்ல. மக்கு மகன் என்ற இந்தியா எல்லைக் கோட்டைத் தான் குறிப்பிட்டேன். அந்தக் கோட்டினால் வந்திருக்கும் கேட்டை இப்போது நினைத்தால்—அதைப் போட்டவன் மக்கு மகன் அல்ல; எமகாதக மகன் என்றுதான் கூற வேண்டும்.

அப்பு: அடேடே! மக்குமகன் கோட்டைக் கூறுகிறீரோ? சில பேப்பர் போஸ்டர்களிலே மக்கு மகான் என்றும் போடுகிறார்கள், இல்லையாடா குப்பு?

குப்பு : இல்லே; மக்கு மோகன் என்றுதான் போடுறாங்க.

கோவி : போகட்டும். எல்லைத் தொல்லைகள் எந்நாட்டுக்கும் உண்டு. கொசுக்கடித் தொல்லைகளுக்குச் சமமாக மதித்து அவற்றைத் தள்ளவேண்டும்.

அப்பு : கொசுக்கடியைப் பற்றி மட்டும் அவ்வளவு இலேசாகச் சொல்லி விடாதீர்!

கோவி : இதைப் பற்றிச் சென்னை நகர சபையில்கூட ஒரு அங்கத்தினர் கேள்விகளை எழுப்பி, கொசுப் பட்டாளங்களை ஒழிக்கும்படி முறையிட்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். சென்னையில் கொசுக்கள் அளவுக்கு மீறிப் பெருகி விட்டன. கொசு வலைகளுக்கு நல்ல வியாபாரம். ஆனால், இதை வாங்கிக் கட்டிக்கொள்ள எல்லோருக்கும் சாத்தியமா?

அப்பு : சென்னைக் கொசுக்களுக்குக் கொசு வலை தேவையே இல்லை. பறவைகள்போல் அவை அவ்வளவு பெரிதாயிருப்பதால் ஜன்னல்களுக்கு நெருக்கமாகக் கம்பிகள் போட்டு விட்டாலே போதும்!

—'கொக்கி'


தீபாவளி
வெளியீடு
('கல்கி'யில் வெளியான தொடர்கதை)
பார்த்திபன் ப்ரொடக்ஷன்ஸ் அளிக்கும்
அருணா பிலிம்ஸ்
அபலை அஞ்சுகம்
தயாரிப்பு & டைரக்ஷன்: R.M. கிருஷ்ணசாமி
மூலக்கதை
கி.ரா. கோபாலன்
திரைக்கதை - வசனம்
A.L. நாராயணன்
சங்கீதம்....
K.V. மஹாதேவன்
பாடல்கள்
உடுமலை நாராயணகவி - தஞ்சை ராமய்யாதாஸ் - கவிஞர் கண்ணதாசன் - A. மருதகாசி

மரம் பேசுகிறது



தென்னந்தோப்பில் ஒரு மரம்.

மரம் : அப்பா, கிழவா! வெய்யிலில் எங்கே நடந்து போகிறாய்? என் நிழலில் சற்று உட்கார்ந்து இளைப்பாறேன்? நீயும் நானும் கொஞ்சம் பேசலாம். நானும் பழைய மரம், நீயும் கிழவன்.

கிழவன் தோப்பில் உட்காருகிறான்.

கிழவன் : தென்ன மரங்களே, நீங்கள் சுகமா? முன் இங்கே இன்னும் பல தோப்புக்கள்-பெரிய தோப்புக்கள் இருந்தனவே, அவையெல்லாம் என்னவாயிற்று? இல்லை, நான் வழிதப்பி வேறு இடம் வந்தேனா? நான் கண்டியில் பல காலம் மகனுடன் இருந்து நேற்றுத்தான் திரும்பி வந்தேன்.

மரம் : தென்னந்தோப்புக்களைப் பற்றியா கேட்கிறாய்? அதை என்னவென்று சொல்லுவேன். எல்லாம் வெட்டி வெட்டித் தள்ளி விட்டார்கள். தோப்பு இருந்த இடமெல்லாம் செங்கலும் சுண்ணாம்பும் சிமெண்டும் கொண்டுவந்து மோட்டார் கிடங்குகளும் வீடுகளும் கட்டி விட்டார்கள். செவேலென்று இருந்த பாதைகள் எல்லாம் கறுப்புத் தார் ஆகிவிட்டது.

கிழவன் : மயிலாப்பூரிலும் திருவல்லிக்கேணியிலும் போய்ப் பார்த்தேன். அங்கிருந்த மாட விடுகளெல்லாம் கடைகளாகியிருப்பதைப் பார்த்தேன். வீட்டுக்காரர்களெல்லாம் புழக்கடையில் குடியிருக்கிறார்களாம்.

மரம் : வீட்டுக்காரர்களல்ல, கிழவா! வாடகைக்கு வந்திருப்பவர்கள். அதோ பார்! ஒருவன் யமன்போல் வருகிறான். இந்தத் தோப்பை அளக்கப் போகிறான். எங்களையும் வெட்டித் தள்ளிப் போடப் போகிறார்கள்.

[ஒரு காக்கை வந்து மரத்தின் மீது உட்காருகிறது.]

காக்கை : கா்வ்! க்ராவ்! என்ன அந்தக் கிழவனிடம் புகார் சொல்லுகிறாய்?

மரம் : ஒன்றுமில்லை, காக்காய்த் தம்பீ, நாளைக்கு எங்கே உட்காரப் போகிறாய்?

காக்கை : ஏன், உன்பேரில்தான் உட்காருவேன். நீதான் என் பழைய நண்பன்.

மரம் : என்னை வெட்டித் தள்ளிப் போடப் போகிறார்கள்.

காக்கை : இப்படி ஒவ்வொரு தோப்பும் வெட்டிவிட்டால் அப்புறம் தேங்காய்க்கு என்ன செய்யப் போகிறார்கள்?

மரம் : வேறே ஊரிலிருந்து வருவிக்கப் போகிறார்கள். தவிர இவர்களுக்குத் தேங்காய் என்னத்துக்கு?

கிழவன் : நான் பார்த்தேன். மயிலாப்பூரில் கோயிலை இடித்துக் கடைகள் வரிசையாகக் கட்டி விட்டிருக்கிறார்கள்.

காக்கை : இல்லை, கிழவா! கோயிலை இன்னும் இடிக்கவில்லை. கோயில் கடைகளுக்குள்ளே மூடிக் கிடக்கிறது. பிராகாரம் எல்லாம் கடைகளால் மூடிப் போச்சு, அவ்வளவுதான்.

கிழவன் : என்னத்துக்கு, இத்தனை கடைகள்?

காக்கை : கோயிலுக்கு வருமானம் சம்பாதிக்கிறார்கள். பக்தி குறைகிறது; வருமானம் பெருகுகிறது. கடைகளிலுள்ள பண்டங்களுக்கும் விலை ஏறுகிறது. எச்சில் குப்பையில்கூட இப்போது ஒன்றும் நமக்குக் கிடைப்பதில்லை.

கிழவன் : ஊரெல்லாம் கடையாகி விட்டால் கடையில் வாங்குகிறவர்கள் யார்?

காக்கை : இதையெல்லாம் என்னை ஏன் கேட்கிறாய்? அதோ தம்பி வருகிறது. அதைக் கேள். எல்லாம் தெரிந்த காக்கை அது, கோட்டை புளிய மரத்துக் காக்கை.

இரண்டாவது காக்கை: அண்ணா! அண்ணா! ஒரு சமாசாரம்.

காக்கை : என்ன? என்ன? நல்லதா? கெட்டதா?



ராஜாஜி



புது காக்கை: ரொம்பக் கெட்டது. இன்று காலே பத்துமணி நம்முடைய புளிய மரத்தைப் பாவிகள் வந்து வெட்டிப் போட்டார்கள். விறகுக் கடைக்காரன் எல்லாத்தையும் வெட்டி வெட்டிப் பெரிய லாரியில் ஏற்றிக் கொண்டிருக்கிறான்.

காக்கை: இன்று காலே நான் பார்த்தேன், அப்படியே இருந்ததே!

புது காக்கை: ஆமாம், எல்லாம் பத்து மணியில் நடந்தது. இப்போது விறகுக்கு ரொம்பக் கிராக்கியாம். விறகு விற்பவர்கள்தான் புதுப்புது மாடி வீடு கட்டுகிறார்கள்.

காக்கை: புளிக்கு எங்கே போவார்கள், அப்புறம், மரங்கள் எல்லாம் இப்படி வெட்டிப் போட்டால்?

புது காக்கை: அது என்னவோ! புது மரங்களுக்குச் சர்க்கார் விதை நடுவார்களோ, என்னவோ!

மரம்: சிரிப்பாக இருக்கிறது! எத்தனே வருஷங்களாகும் புதுப் புளியமரம் வளர்ந்து காய் காய்க்க. தவிர இந்த ஆடுகள் அவற்றை வளர விடுமா?

கிழவன்: இந்த ஊர் எனக்குப் பிடிக்கவில்லே. நான் மறுபடியும் கண்டிக்குப் போகப் போகிறேன்.

புது காக்கை: உன்னே அங்கே விடமாட்டார்கள்.

கிழவன்: ஐயோ! என் மகன் அங்கே தானே இருக்கிறான்.

காக்கை: இருக்கலாம். அழாதே, கிழவா! மகனுக்கும் தகப்பனுக்கும் என்ன சம்பந்தம்? நம்மைப் பார்த்துக் கற்றுக் கொள். என் தாய் எங்கே? என் தகப்பன் எங்கே?

மரம்: நீ பறவை, எங்கு வேண்டுமானலும் பறந்து போவாய். மரங்கள் என்ன செய்வது? வெட்ட வருகிறவனேத் தடுக்கக்கூட முடியாது. ஓடித் தப்பவும் முடியாது. கீழே விழுந்து உலர்வதுதான் கதி. வெட்டுகிறவன் மேலே விழுந்து, நசுக்கி விடலாம்போல் தோன்றுகிறது. ஆனல் கயிறுபோட்டு இழுத்துக் கட்டி விடுகிறார்கள் இந்த அரக்கர்கள்.

காக்கை: அழாதே, மரமே! அடுத்த ஜன்மத்தில் நீ மனிதனுகப் பிறப்பாய்.

மரம்: வேண்டாம், வேண்டாம்! அந்தப் பாவ ஜென்மம் எங்களுக்கு வேண்டாம்.

புது காக்கை: எங்களேப்போல் பறவையாகப் பிறக்க இஷ்டமா?

மரம்: அதுவே மேல்.

உணவுக்குப் பஞ்சமா? உண்மைக்குப் பஞ்சமா?

"உணவு உற்பத்தி 1958-59ம் ஆண்டில் மிதமிஞ்சிப் பெருகியிருக்கிறது. 730 லக்ஷம் டன் தான்யங்கள் உற்பத்தி ஆகியிருக்கின்றன. இவ்வளவு பெரும் விளைவு நம் நாட்டில் இதுவரையில் கண்டதே இல்லை" என்று அரசாங்கம் அறிக்கை விடுவித்திருக்கிறது.

1 ஆளுக்கு ஒரு நாளைக்கு 1 lb. தேவை என்று வைத்துக் கொண்டாலும்

1 ,, ஒரு ஆண்டுக்கு 365 lb. தான் வேண்டியிருக்கும்.

ஆகவே 1 டன் (2240 lbs.) $\frac{2240}{365}$ = 6 மனிதனுக்குப் போதுமானது; சிறிது மிச்சம்கூட இருக்கும்.

இப்போது மிச்சப்படுவதைக் குழந்தைகளுக்காகப் பங்கிடு செய்து அதற்கென ஒரு நபர் அதிகமாகச் சேர்த்துக் கொண்டாலும் ஒரு டன் தானியம் ஏழு முழு நபர்களுக்குப் போதுமானது.

ஆகவே 730 லக்ஷம் டன் தானியம் விளைந்திருக்கிறதென்றால் அது 730 லக்ஷம் × 7 அல்லது 5110 லக்ஷம் மக்களுக்குச் சரிவரப் போதுமானது. இதுதான் கணக்கு.

1 lb. என்பது 16 அவுன்ஸ். இது அதிகப்படியான திட்டம். நகரவாசிகள் இவ்வளவு உட்கொள்ள முடியாது. இவ்வளவு தாராளமாகத் திட்டம் போட்டும், 5110 லக்ஷம் நபர்களுக்குப் போதுமான உணவு விளைந்திருப்பதாக அரசாங்கம் கூறுகிறது.

இந்தியாவின் ஜனத்தொகை 4000 லக்ஷத்தை எட்டவில்லை. ஆகவே அரசாங்கக் கணக்குப் பிரகாரம் இன்றைக்கு ஆயிரம் லக்ஷம் மனிதர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் நம்மிடம் உபரியாக இருக்கின்றன. அவற்றை நாம் ஏற்றுமதி செய்யும் நிலையில் இருக்கிறோம்!

பின் ஏன் கட்டுப்பாடுகள், விலைத் திட்டங்கள், இறக்குமதி? விலை மலிவல்லவா வேண்டும்? அரிசி விலை ஏன் ஏறுகிறது? அரசாங்கத்தின் கணக்கு முற்றிலும் பொய்யா, அல்லது தான்யங்கள் பதுங்கிக் கிடக்கின்றனவா?

இந்தக் கேள்விகளைக் கேட்கவும் ஆள் இல்லை, கேட்டால் பதில் அளிக்கவும் ஆள் இல்லை. ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இன்றைக்கு விளைவில் பஞ்சம் இல்லை. ஏறக்குறைய வேண்டியது விளைந்திருக்கிறது. சில இடங்களில் போதாமல் இருக்கலாம்; சில இடங்களில் அதிகப்படியாக இருக்கலாம். வியாபாரத்தை வியாபாரியிடம் விட்டால் வேண்டிய இடங்களுக்கு அவன் தானியத்தைக் கொண்டு செல்வான். அப்பொழுது வரவும் செலவும் ஒன்று கூடும். வியாபாரத்துக்கு விலங்கிட்டால் தானியம் ஆங்காங்கு தங்கிவிடும். கள்ள மார்க்கட் வளரும்; விலைகள் ஏறும். இதுதான் கல்யாணமாகியும் பிரும்மச்சாரி என்ற நிலை. ஏன் வியாபாரத்தைக் கட்டுப்பாடின்றி விடக்கூடாது? ஏன் நாட்டை உணவு மண்டலங்களாகப் பிரிக்க வேண்டும்? ஆகவே, இன்றைய நிலை வேண்டுமென்று வருவித்துக் கொண்ட மானிட முயற்சியின் தீப்பயனே இன்றி, இயற்கையின் மீது குற்றம் இல்லை; விவசாயியின் முயற்சியின் மீதும் குற்றம் இல்லை.

"வியாபாரத்தைக் கட்டுப்பாடின்றி வளரவிட வேண்டும்; அப்பொழுது விலை இறங்கும்; பொருள் பல இடங்களுக்கும் பரவும். அரசாங்கக் கட்டுப்பாடு, இருப்பதை இல்லாதது போல் செய்கிறது" என்பது சுதந்திரக் கட்சியின் கொள்கை.

என் நினைவுகள்

ஸர். ஸி. பி. ராமசாமி அய்யர்

தீபாவளி

தீபாவளி தென்னகத்தவர்களுக்கு மட்டுமல்ல, பாரத மக்கள் அனைவருக்குமே ஒரு நன்னாள். பல புராணக்கதைகளும், சம்பிரதாயங்களும் இப் புனித நாளுடன் இணைக்கப்பட்டு வழக்கில் உலவி வருகின்றன. ராவண வதம் முடிந்து அயோத்தியா பட்டணம் திரும்பிய ராமன் சீதையுடன் பட்டாபிஷேகம் செய்து கொண்டது இந்த நன்னாளில்தானாம். மகா விஷ்ணு வாமனாவதாரக் கோலத்துடன் பலிச் சக்கரவர்த்தியை சங்காரம் செய்ததும் இந்த நாளில்தான். விக்கிரம சகாப்தத்தின்படி விக்கிரமாதித்ய மன்னவன் மகுடம் தரித்ததும் இந்த நாளில்தான் என்று சில இடங்களில் நம்பிக்கை இருக்கிறது. வங்க நாட்டில் காளிதேவிக்கு உகந்த நாளென்று இந்தத் தினம் இன்றும் கொண்டாடப்படுகிறது. விக்கிரம சகாப்தப்படி புத்தாண்டு பிறப்பதும் இந்தத் தினத்தில்தான். புது வருஷ வாழ்த்துக்களும், புதுக்கணக்குகளும் குதூகலமும் இந் நன்னாளில் சாதாரணமாகக் காணப்படும் காட்சிகள்.



கல்லூரி மாணவன்
ஸி. பி. ராமஸ்வாமி

இந்த நாளில்தான், 1879-ம் ஆண்டில், தீபாவளியன்று நான் பிறந்தது. இந்தத் தீபாவளியுடன் 80 ஆண்டு நிறைவு பெறுகிறது. எண்பது வயது எய்திய ஒருவன் இம்மாதிரி ஒரு சந்தர்ப்பத்தில் தனது பழங்காலச் சம்பவங்கள் சிலவற்றைப் பற்றிக் கண்ணோட்டமாக நினைத்துப் பார்த்துச் சிந்திப்பது இயல்பு. கிழவர்களின் குணம் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். தனிச் சம்பவங்களைப் பற்றிச் சொல்வதற்கு முன் எனது வாழ்க்கையில் நான் பொதுவாக உணர்ந்த சில உண்மைகளைச் சுருக்கமாகக் கூறுவது முறையேயாகும்.

தற்செயல் நிகழ்ச்சிகள்

வாழ்க்கைச் சக்கரம், ஓயாமல் சுழன்று கொண்டேயிருக்கிறது. நன்மையும் தீமையும், ஏற்றமும் தாழ்வும், இருக்கவே செய்யும். தடைகளும் போராட்டங்களும் இருந்தால் அவைகளுக்கு ஈடாக நிறைவுகளும், அமைதியும் நிச்சயமாக இருக்கின்றன. "மனிதன் மட்டும் அற்பாயுளாக இராமல் நீடித்து வாழ்ந்தால் அவனுக்கு எப்போதாவது, எங்கேயாவது, ஏதோ ஆனந்தம்* கிடைத்தே ஆகவேண்டும்" என்று சீதாதேவி ஆஞ்சனேயரிடம் சொன்னபோது உலக உண்மையைத்தான் சொன்னாள். அதுமட்டுமல்ல; நம்முடைய சொந்தச் சாமர்த்தியத்தினால் அல்லது முயற்சியினால் நாம் சாதித்துவிட்டோமென்று பெருமையுடன் பேசிக் கொள்ளும் சாதனைகளெல்லாம், பெரும்பான்மை எதிர்பாராத, யதேச்சையாக நிகழ்ந்த சில சம்பவங்களின் விளைவுதான் என்பதை நாம் உணருவதே இல்லை. சிறிது சிந்தித்துப்பார்த்தால் விளங்கும். வாழ்க்கை என்னும் புத்தகத்தில் 'யதேச்சை சம்பவங்கள்' என்ற அத்தியாயம்தான் மிகவும் நீளமானது என்று ஜான் வில்க்ஸ் (John Wilks) என்னும் ஆசிரியர் கூறுகிறார். எவ்வளவு உண்மை! என்னென்னமோ லட்சியங்களை ஏற்படுத்திக் கொண்டு அவற்றை அடைய நாம் எவ்வளவுதான் முயன்றாலும், நமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்திதான் அதன் இச்சைப்படி எல்லாவற்றையும் முடித்து விடுகிறது. என் அனுபவத்தில் இது முற்றிலும் உண்மை.

தைரியமும் விசுவாசமும் வேண்டும்

வாழ்க்கையில் மற்றெல்லாவற்றையும் விட ஒருவன் முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டிய குணங்கள் இரண்டு—தைரியமும், விசுவாசமும். தனது கட்சி தோல்வியுற்றாலும், தான் ஆதரித்தவர்கள் செல்வாக்கு இழந்த போதிலும், எந்த மனிதனும் தான் கொண்ட விசுவாசத்திலிருந்து நழுவக் கூடாது. என் ஜீவிய காலம் நீடிக்க, நீடிக்க, இந்த உண்மை எனக்கு மேன் மேலும் உறுதியுடன் புலப்படுகிறது. கவி மில்டனின் இழந்த சுவர்க்கம் (Paradise Lost) என்னும் காவியத்தில் ஸிராப் அப்டீல் (Seraph Abdiel) என்று ஒரு பாத்திரம் வருகிறது. "உறுதி தளராது - உறுதி தளர அனுமதி கூடத் தராமல், அச்சம் சிறிதும் இல்லாது, தனது விசுவாசத்தைக் காத்தான்" என்று அவனைப்பற்றிக் கவி வர்ணிக்கிறார். என் மனத்தை முற்றிலும் கவர்ந்த பாத்திரம் இது.

பிற்காலத்தில் சென்னை நகர ஸிவில் கோர்ட் நீதிபதியாகப் பணியாற்றிய என் தந்தை திரு ஸி. ஆர். பட்டாபிராம அய்யர் கும்பகோணம் கல்லூரியில் படித்துப் பெருமை அடைந்த மாணவர்களில் ஒருவர். அந்தக் காலத்தில் புகழ் பெற்ற போதகாசிரியர்கள் போர்டரும், கோபாலராவும். அவர்களுடைய மேற்பார்வையில் தனது சீலத்தை உருவாக்கிக் கொண்டவர் என் தந்தை. ஆங்கில இலக்கியத்தில் அவருக்கு ஆசை அதிகம்.

*துன்புளது எனின் அன்றோ சுகம் உளது
— கம்பன்

பரவலாக எதையும் படித்து ரசிக்கும் தன்மை உள்ளவர். பிற்காலத்தில் அவர் ஒரு தீவிர ஹிந்துவாக மாறிவிட்டாலும் அந்தக் காலத்தில் மதப்பற்று அதிகமில்லாமல் ஒரு சம்சய வாதியாகவே இருந்தார். அவருடைய சகோதரியின் கணவர் புகழ்பெற்ற பேராசிரியர் திரு கே. சுந்தரராம அய்யரும் இப்படித்தான் முதலில் நிரீசுவரவாதியாக இருந்து, பிறகு சம்சய வாதியாக மாறிக் கடைசியில் திடமான வேதாந்தியாக மாறினர். இவ் விருவருடைய மனோ வளர்ச்சிகளும் ஏறக்குறைய ஒன்று போலவே இருந்தன. அந்தக் காலத்தில் அறிவாளிகள் எல்லோருமே இப்படித்தான் இருந்தனர். ஐரோப்பிய நாகரீகம் நம் மக்கள்மீது வேகமாக அலைமோதிய காலம் அது. எனது தந்தையின் தலைமுறையைச் சேர்ந்தவர்களெல்லோரும் ஆங்கில இலக்கியமும், ஆங்கிலேய தத்துவ ஞானமும் மிக முக்கியமானவை என்று கருதின காலம். இந்தச் சூழ்நிலையில் நான் கல்வி பயின்ற முதல் மொழி ஆங்கிலம் என்பதில் வியப்பு ஒன்றுமில்லை. ஆனால் ஆங்கிலத்துடன் எனக்குப் பிரஞ்சு மொழியும் பயிலுவித்தார் ஒரு பாதிரியார். மொழிப் பயிற்சியுடன் நிற்காமல், ஓவியக் கலையிலும் சிற்பக் கலையிலும், எனக்கு ஆர்வம் உண்டாக்கித் தந்தார். என் பிரஞ்சு வசன இலக்கியப் பித்துக்குக் காரணம் அந்தப் பாதிரியார்தான்.

கருத்துக்களின் அலைமோதல்

சென்ற நூற்றாண்டின் இறுதிக் காலம் பல்வேறு உயர் தத்துவங்களும், கருத்துக்களும் ஒன்றோடொன்று உறவாடி மோதிக்கொண்ட காலம். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர், சார்லஸ் டார்வின், ஜேம்ஸ் ஸ்டூவர்ட் மில் ஆகிய பெரும் மேதைகளின் வழித் தோன்றிய டின்டால் (Tyndall) ஹக்ஸ்லி (Huxley) இருவரும் பரிணாமவாத தத்துவத்தைத் தீவிரமாக ஆதரித்ததுடன், உலகத்தைப் பற்றிய புதிருக்கு விடையே காண முடியாது என்று ஸ்தாபித்தனர். இக் கருத்தில் சிக்கியவர் என் தந்தை. ஆனால் தத்துவத்துடன் ஷெல்லி, கோலரிட்ஜ், வோர்ட்ஸ்வர்த் போன்ற ஆங்கிலக் கவிகளையும் ஆர்வத்துடன் படித்து ரசித்துப் பழகியவர். 'ப்ரேலூட்' (Prelude) அல்லது முன்னுரை என்ற கவிதையிலிருந்து 400 அல்லது 500 வரிகள் ஒரு தப்பும் இல்லாமல் என் தந்தை ஒப்பிக்கக் கேட்டிருக்கிறேன். அம்மாதிரி கவிகளின் கருத்தில் ஊறி நானும் வளர்ந்தேன். டென்னிசன் கவிதைகளிலும் எனக்குப் பற்று உண்டு. அத்துடன், எனது வயதுக்குச் சற்று அதிகமாகவே, 'ஷோபன்ஹேர்' என்ற ஜெர்மானிய அறிஞரின் நூல்களையும் படிக்க எனக்குக் கற்பிக்கப் பட்டது. ''உலகம் வெறும் தோற்றம்தான்; மாயை; துறவறம் பூணுவதுதான் மனிதனுடைய முக்கியமான கடமை'' என்னும் வேதாந்தக் கொள்கையை அவர் ஆதரித்தார். இவருடைய கொள்கைக்கு மாறுபட்ட கருத்தை ஆதரித்து வெளியிட்டவர் ''இவ்வாறு ஜரதுஸ்ட்ரர் பேசினர்'' (Thus Spake Zaathushtra) என்னும் நூலை இயற்றிய ஜெர்மானிய அறிஞர் நீட்ஸ்ஷி (Neitzshe). ஒன்றுக்கொன்று முரணான கருத்துக் கொண்டிருந்தாலும் இக்கவிகளின் கவிதைகளையும், தத்துவ ஆசிரியர்களின் நூல்களையும் பகுதி பகுதியாக என்னை மனப்பாடம் செய்யும்படி என் தந்தை வற்புறுத்தினர். இவற்றின் விளைவாக என்னுடைய தத்துவஞான அறிவு ஒரு நிலை பெறாமல் அந்தரத்திலேயே நின்றது. ஆனால் மேனாட்டு இலக்கியத்திலும், ஸ்தாபனங்களிலும் என் ஆர்வம் வளர்ந்துகொண்டே சென்றது. என் கல்லூரிப் படிப்பு முற்றுப் பெறும் வரையில் என் மனோ வளர்ச்சி இந்நிலையிலேதான் இருந்தது.


மாணவனாக

கல்லூரிப் படிப்பு முடிந்ததும், அந்தக் காலத்தில் முதலில் திருவிதாங்கூரிலும், பின்னர் மைசூர் சமஸ்தானத்திலும் பிரதம நீதிபதியாகப் பணியாற்றிய திரு எ. ராமச்சந்திர அய்யர் ஊக்குவித்ததினால், இந்திய தத்துவ நூல்களை அதிகம் படிக்க ஆரம்பித்தேன். என் தந்தையின் ஆப்த நண்பரான அவரும் என் தந்தையைப் போலவே முதலில் சம்சயவாதியாக இருந்து பின்னர் வேதாந்தியாக மாறி, காலடி ஆலயத்தையும் ஆசிரமத்தையும் ஸ்தாபித்து, சிருங்கேரி சங்கராச்சாரியாரின் சீடராக ஆனார்.

வெஸ்லி கல்லூரியில் நான் படித்துக்கொண்டிருந்தபோது கூலிங் (Rev. Cooling) அவர்களின் தூண்டுதலின் பேரில் பைபிள் நூலைப் படிக்க முற்பட்டேன். அதில் ஓரளவுக்கு முன்னேற்றமும் அடைந்தேன். மேனாட்டுத் தத்துவத்திலும் கிறிஸ்தவ சமய நூல்களிலும் எனது திறமைக்காகப் பல பரிசுகளும் உதவிச் சம்பளமும் அளிக்கப்பட்டன. என் தந்தையாரின் அதிகாரம் என்மீது எவ்வளவு இருந்ததோ ஏறக்குறைய அதே அளவுக்கு அக்காலத்தில் மைசூர் திவானாக இருந்த ஸர் சேஷாத்ரி அய்யர், ஏற்கனவே குறிப்பிட்டுள்ள பிரதம நீதிபதி திரு எ. ராமச்சந்திர அய்யர் ஆகியோரின் அதிகாரமும் என் வாழ்க்கையை உருவாக்க எனக்குப் பயன்பட்டன. என் கல்லூரி விடுமுறைகளைப் பெரும்பாலும் ஸர் சேஷாத்திரி அய்யருடைய இல்லமாகிய குமார பார்க்கில்தான் கழித்தேன். அப்போது அவருடைய கண் பார்வை குறைந்திருந்தபடியால் அதிகமாக அவரால்

வழக்கறிஞராகத் தொழில் ஆரம்பித்த போது ஸி. பி. ராமஸ்வாமி அய்யர். சென்னையில் அந்தக் காலத்தில் ஓடிய இரண்டே மோட்டார்களில் இது ஒன்று.





டாக்டர் ஸி. பி. யும் அவரது மனைவியாரும்

படிக்க முடியவில்லை. அதற்காக, என்னைப் படிக்கச் செய்து கேட்டுக் கொண்டிருப்பார். இப்படி நான் படித்த நூல்கள் மில், டார்வின், ஹக்ஸ்லி, ஷோபன்ஹேர் முதலிய அறிஞர் களின் நூல்களும் ஆங்கிலக் கவிகளின் கவிதை களும். எட்வின் ஆர்னல்ட் இயற்றிய ஆசியா வின் ஜோதி (Light of Asia) என்னும் புத்தகத் திலும் பெரும் பகுதிகளை அடிக்கடி படிக்கச் செய்து ஸர் சேஷாத்ரி அய்யர், எ. ராமச் சந்திர அய்யர் இருவரும் கேட்பார்கள். அந் நூலில் விளக்கியுள்ள புத்தசமயக் கோட் பாடுகள் அன்று என்னைக் கவர்ந்தன. இன்றும் என்னிடம் நிலைபெற்று நிற்கின்றன. ஸர். சேஷாத்ரி அய்யரின் நல்லுறவு காரணமாக என்னையும் அறியாமல் அவரைப்போல் நானும் ஆக வேண்டும், மைசூரின் வளர்ச்சிக்கு அவர் தொழிற் முறையில் தொண்டாற்றியதுபோல் நானும் ஏதாவது செய்யவேண்டும் என்ற ஒரு ஆசையும் என்னை ஆட்கொண்டது.

சென்னை பிரஸிடென்ஸி கல்லூரியில் சேர்ந் ததும் ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம் தீவிரமாகப் படித்ததுடன் டென்னிஸ் விளையாட்டிலும் மும்முரமாக ஈடுபட்டேன். அப்போதுதான் பிரின்ஸிபல் ஸ்டுவர்ட்டின் கவனத்துக்கு நான் இலக்கானேன். அவரை ஒரு சம்சயவாதி என்றே சொல்ல வேண்டும். ஆனால் அவ ருடைய புத்தி கூர்மையும் பகுத்தறிவும் பிரமிக்கத் தக்கவை. அவருடைய நல்லுற விலும் அறிவு வாதத்திலும் என்னுடைய சம்சய நிலை உறுதியடைந்தது. மேனாட்டுப் பழக்கவழக்கங்கள், நடை, உடை, பாவனைகள், மனோபாவம் எல்லாமே என்னை ஆட்கொண் டன. அந்தக் காலத்திய தலைமுறையைச் சேர்ந்தவர்களின் மனோபாவமும் நடவடிக்கை களும் பொதுவாக இந்தச் சூழ்நிலையைத்தான் பிரதிபலித்தன.

முதல் விபத்து!

நீதிபதியாவதற்கு முன் என் தந்தை சிறப்பாகவே வக்கீல் தொழில் நடத்தினார். அத்தொழிலில் வெற்றி கண்ட அவர், நானும் அத்தொழிலில் பிரவேசிக்க வேண்டுமென்றே வற்புறுத்தினார். நான் மட்டும் சட்டப் படிப் பில் அதிக ஆர்வம் காட்டவில்லை. ஆங்கில இலக்கியப் பேராசிரியராகப் பணியாற்றவே என் மனம் நாடியது. ஒரு உதவி ஆசிரியர் பதவிக்கு மனுக்கூடப் போட்டு விட்டேன். ஆனால் என்னுடைய முயற்சிக்கு ஊக்கம் அளிக்க என் தந்தை மறுத்து விட்டார். கோகலேயின் இந்திய ஊழியர்கள் சங்க (Servants of India Society) த்தில் சேர ஆவல் கொண்டு பூனாவில் சில நாட்கள் அதற்காகவே தங்கினேன். கோகலே அவர்களுக்கு நான் முதன் முதலாக அறிமுகம் செய்யப்பட்டேன். என்னைச் சேர்த்துக் கொள்ள அவர் சம்மதம் தெரிவித்தார். அப்போது அவர் எனக்குப் புத்திமதியாகச் சொல்லியவற்றுள் ஒரு விஷயம் எனக்கு இன்றும் கவனமிருக்கிறது. எந்தச் சந்தர்ப்பமாக இருப்பினும் மேடைமீது நின்று பேச வேண்டுமானால் போதிய அளவு தயார் செய்து கொள்ளா மல் பேசக்கூடாது என்றார். வந்தனோபசாரம் சொல்ல வேண்டுமென்றாலும் கூட, என்ன சொல்ல வேண்டும், எப்படிச் சொல்லவேண்டு மென்று, கருத்து, நடை, சொற்கோவை எல்லாம் முன்கூட்டியே தயார் செய்து கொண்டுதான் அவர் பேசுவாராம். இந்தத் தம் பழக்கத்தையும் எனக்கு எடுத்துச் சொன் னார். கோகலேயுடன் நான் சேரத் தீர்மானித்த தைக் கேட்டு என் தந்தை அடைந்த துயரத் தைக்கண்டு சகியாமல் நான் என் எண்ணத்தை மாற்றிக் கொண்டு சட்டத் தொழிலுக்குத் திரும்பினேன். என் வாழ்க்கையில் நடந்த விபத்து வரிசைகளில் இதுதான் முதலாவது.

தொழில் ஆரம்பம்

திரு வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரிடம் 'அப்ரென்டிஸ்'ஸாக நான் தொழில் ஆரம் பித்தேன். அவர் வாதத்திறன் உயர்ந்தது. புகழ்பெற்ற கொடை வள்ளல். என் மனோ வளர்ச்சியை உருவாக்கியதில் அவருக்குப் பெரிய பங்கு உண்டு. 1903-ம் ஆண்டில் என் தந்தை காலமான பிறகு, நான் தனியாகத் தொழில் ஆரம்பித்தேன். ஸர் வி. பாஷ்யம் அய்யங்கார் எங்கள் குடும்ப நண்பர். அவரு டைய காரியாலயத்தில் ஜூனியராக நான் தொழில் நடத்துவது என்று முதலில் தீர்மா னம் செய்யப்பட்டது. ஆனால் இது நடைபெற வில்லை. எனவே, மற்றெவருடைய ஆதரவும் இல்லாமல் தனித்தே ஆரம்பித்தேன். என் னுடைய முதல் வருஷத்திய வருமானம் 104 ரூபாய். இரண்டாவது வருஷம் — எதிர் பாராமல் கிடைத்த ஒரு வருமானத்தையும் சேர்த்து, ரூ. 560. ஆனால் இதற்கு ஈடு செய் வதே போல் இந்தக் காலத்தில் இரண்டு பேர்


களின் நட்பு எனக்குக் கிடைத்தது. இவ்விருவரையும் நான் மறக்கவே முடியாது. யார்ட்லி நார்டன் ஒருவர், ஜே. எல். ரொஜேரியோ மற்றவர். நார்டன் ஆங்கிலத்திலும் பிரஞ்சு மொழியிலும் ஆழ்ந்த கல்விமான். சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வதில் சாதுர்யம் மிகுந்தவர். ஆனால் அவருடைய சோம்பேறித்தனத்துக்கு எல்லையே இல்லை. கேசுக் கட்டுகளைப் போதுமான அளவு படிக்க மாட்டார். எனினும் அவருடைய இயற்கைசாமர்த்தியத்தாலும் மனிதத்தன்மை பற்றி அவருக்கு இருந்த பிரமிக்க வைக்கும் அறிவினாலும், தம் தொழிலில் உன்னதமாக விளங்கினார். அவருடைய நூல் நிலையத்தில் நான் அடிக்கடி பொழுது போக்குவதுண்டு. ஆங்கில இலக்கிய நூல்களையும் பிரஞ்சு இலக்கியங்களையும் படிப்பேன். அவரிடமிருந்து பிரஞ்சு இலக்கியத்துடன், குதிரைகள், நாய்கள் மீதும் அன்பு செலுத்தக் கற்றுக் கொண்டேன். அவருடைய நகைச்சுவை மிக மிகத் தீவிரமானது. சில சமயங்களில் கொடூரமானதும் கூட. தொழில்முறையில் அடிக்கடி தாம் ஆஜராகும் உயர் கோர்ட்டின் நீதிபதிக்குத் தாம் ஒரு லத்தின் புலவர் என்ற அகம்பாவம் இருந்தது. ஆனால் இம்மொழியில் அவருடைய அறிவு சாமான்யமானதுதான் என்பது நார்டனுக்குத் தெரியும். ஒரு சமயம், கோர்ட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கையில், சர்வ தேசச் சட்டத்தில் தனி மனிதன் உரிமை பற்றிய ஒரு விஷயம் விவாதிக்கப்பட்டது. இது சம்பந்தமாக உலக அறிஞர்கள் என்று புகழ் பெற்ற க்ரோஷியஸ், (Grotius) ஃபூபெண்டார்ஃப் (Puffendorf) என்பவர்களை மேற்கோள் காட்டி நீதிபதி பேசினார். இவ்விருவரும் லத்தின் மொழியிலும் பிரஞ்சு மொழியிலும் எழுதியுள்ளனர். இதற்கு எதிராக, பிரஞ்சு ஆசிரியர் வால்ட்டேர் எழுதிய காண்டிட் (Candide) என்னும் நூலிலிருந்து முற்றிலும் சம்பந்தமில்லாத பெரும் பகுதிகளைப் பிரஞ்சு மொழியிலேயே சரமாரியாக நார்டன் பொழிந்து தள்ளினார். தன்னுடைய அறியாமையைக் காட்டிக்கொள்ள விரும்பாத நீதிபதி, நார்டன் சொன்னதையெல்லாம் புரிந்து கொண்டவர் போல் பலமாகத் தலை ஆட்டிக் கொண்டே இருந்து கடைசியில் நார்டனுக்குச் சாதகமாகத் தீர்ப்பும் அளித்து விட்டார்! வக்கீல் தொழிலில் வெற்றி பெறுவதற்குச் சட்டமும் மேற்கோள்களும் எவ்வளவு அவசியமோ, அதே அளவுக்குப் பல தரப்பட்ட விரிவான படிப்பும், வாழ்க்கை முறையில் மனிதத் தன்மை பற்றிய ஆழ்ந்த அறிவும் அவசியமானவை என்பதை அவர்தான் எனக்குத் தெளிவுபடுத்தினார். திரு ரோஜேரியோ வேறு ரகத்தைச் சேர்ந்தவர். கண்யமான நடத்தைக்கும் தொழில் நாணயத்துக்கும் ஒரு உருவகம் என்றே அவரைச் சொல்ல வேண்டும். இவ்விருவருடைய நல்லுறவும், அதேபோல் ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யருடைய பண்பும் என்னுடைய ஆரம்ப வாழ்க்கைப் பருவத்தில் என்னைப் பெரிதும் உருவாக்கின.



அகில இந்திய சாரணச் சங்கத்துக்குப் பிரதம கமிஷனராக இருந்தபோது டாக்டர் ஸி. பி.

எதிர்பாராச் சம்பவங்கள்

ஒருவனுடைய வாழ்க்கையில் பல எதிர்பாராத சம்பவங்கள் நிகழுகின்றன என்று சொன்னேன் அல்லவா? என்னுடைய மைத்துனர் குமாரஸ்வாமி சாஸ்திரியாருடன் சேர்ந்து நான் தொழில் நடத்துவதை என் தந்தை விரும்பவில்லை. திரு சாஸ்திரியார் பிற்காலத்தில் உயர் நீதிபதியாகப் பதவி வகித்தார். என் தொழில் முறையில் இதனால் பல அசந்தர்ப்பமான நிலைமைகள் ஏற்படக் கூடுமென்பதே என் தந்தையின் ஆட்சேபத்துக்குக் காரணம். ஆனால் திரு சாஸ்திரியாருக்கு நீரிழிவு உபாதையால் எல்லா வேலைகளையும் அவரால் தனித்துக் கவனிக்க முடியவில்லை. என்னை உதவிக்கு அழைத்தார். நானும் இணங்கினேன். சில ஆண்டுகளுக்குள்ளாகவே அவர் வக்கீல் தொழில் நடத்துவதை நிறுத்திக் கொண்டு ஸ்மால்காஸ் கோர்ட் நீதிபதியாகப் பதவி ஏற்றார். இதனால் 12 கேசுகளுக்கு மேல் கூட ஆஜராகாத எனக்குத் திடீரென்று ஒரு நாள் காலை 1907ம் ஆண்டில் திரு சாஸ்திரியார் பார்த்து வந்த முந்நூறுக்கு மேற்பட்ட கேஸ் கட்டுகள் குவிந்துவிட்டன. வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களெல்லாம் சென்னைத் தொழில் துறைப் பிரமுகர்களும் மிராசுதார்களும் தனவந்தர்களும். நிலைமை



டாக்டர் ஸி. பி; மகாகனம் சாஸ்திரியார்; வி. வி. ஸ்ரீநிவாச அய்யங்கார்

யைச் சமாளிக்க ஒரு ஜூனியர் வக்கீல் உதவியை நாடினேன். அவர் பெரும்பாலும் வெளியே சென்று விடுவார். ஆகவே எல்லா வழக்குகளிலும் வாதங்களை நானேதான் சற்றுத் தயக்கத்துடனே நடத்த வேண்டியிருந்தது. அதே சமயம் நார்ட்டன் குடும்பத்தில் ஏற்பட்ட சில தகராறுகள் காரணமாக அவரும் தொழிலில் கவனம் செலுத்த முடியவில்லை. அதே சமயத்தில் 'ஒரிஜினல்' பகுதியில் முன்னணியில் நின்ற மூன்று தலைவர்கள், உடல் நலம் குன்றியதாலோ, ஓய்வு எடுத்துக் கொண்டதாலோ, தொழில் நடத்த இயலாது போயினர். இப்படி நான் தொழில் நடத்த ஆரம்பித்த ஆறு அல்லது ஏழு ஆண்டுகளுக்குள்ளாகவே எதிர்பாரா விதத்தில் தொழிலில் 'முன்னணியில் நின்றவர்களில் நானும் ஒருவனாக ஆகிவிட்டேன். யதேச்சையாக நடந்த இந்தச் சம்பவங்களுடன் அக்காலத்தில் நீதிபதியாக இருந்த போட்டம் (Boddam), உயர் பிரதம நீதிபதிகளாக இருந்த ஸர் ஆர்னல்ட் ஒயிட், (Sir Arnold White), வாலிஸ் (Wallis) ஆகியோர் அளித்த ஊக்கமும் வி. வி. சீனிவாஸ அய்யங்கார், வி. மாசிலாமணி பிள்ளை போன்ற நண்பர்களின் நல்லுறவும் என் தொழில் முன்னேற்றத்துக்குப் பெரிதும் உதவின. என் தொழில் வளர்ச்சியில் முதல் தசையிலேயே எனக்கு உயர் நீதிபதி பதவி ஏற்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. அதை வேண்டாமென்று நிராகரித்துவிட்டேன். அப்போதிருந்த உயர் நீதிபதிக்கு நான் எழுதிய கடிதம் பிரசித்தமடைந்துவிட்டது. ''பிரதம நீதிபதி அவர்களே, ஒவ்வொரு நாளும் நான் முழுதும் மற்றவர்களின் பிதற்றல்களைக் கேட்டுக் கொண்டே காலங்கழிப்பதை விட, ஒரு நாளைக்குச் சில மணிகள் மட்டும் உளறுவது மேல் என்று நினைக்கிறேன். அதையே விரும்புகிறேன்'' என்று அந்தக் கடிதத்தில் நான் குறிப்பிட்டிருந்தேன்.



திருவிதாங்கூர் திவானாக இருந்தபோது பத்மநாப சுவாமி தேவாலயத்துக்குச் செல்லும் ஒரு தோற்றம்.

பெஸண்ட் அம்மையாரின் அறிமுகம்

ஜீ. நாராயணையா என்பவர், தம் புதல்வர்களான ஜே. கிருஷ்ணமூர்த்தியையும் அவனுடைய தம்பியையும் டாக்டர் பெஸண்ட் அவர்களின் பராமரிப்பில் விட்டிருந்ததை நீக்கித் தம் வசமே ஒப்பிக்க வேண்டுமென்று பெரிய வழக்கு ஒன்று 1912-ல் தொடங்கினார். எப்போதும் போல அப்போதும் தம் வழக்கை டாக்டர் பெஸண்ட் தாமே எடுத்து வாதாடினார். உலகப் புகழ் வாய்ந்த நாவன்மை கொண்ட அவருக்கு எதிராக நான் வழக்கை நடத்தினேன். நீதி மன்றத்தின் கட்டளைக்கு உட்பட மறுத்து, பெஸண்ட் அம்மையார் நீதி மன்றத்தை அவமதித்த குற்றத்துக்கு உள்ளானார். அதைப் பற்றி நடவடிக்கை எடுக்குமாறு என் கட்சிக்காரர் வேண்டியும் நான் நடவடிக்கை எடுக்க மறுத்தேன். வழக்கு முடிந்த பின்னர் பெஸண்ட் அம்மையார் தமது அரசியல் கல்வித்துறைப் பணிகளில் என்னையும் உடன்சேர்ந்து உழைக்குமாறு வேண்டிக் கொண்டார். இவ்வாறு பெஸண்ட் அம்மையார் மூலமாக 'ஹோம் ரூல்' இயக்கம், தேசியக் கல்வி இயக்கம் ஆகியவற்றோடு என்னுடைய தொடர்பு ஆரம்பமாயிற்று.

அப்போது சென்னைக் கவர்னராக இருந்த பெண்ட்லண்டு பிரபு (Pentland) பெஸண்ட் அம்மையாரைக் குறிப்பிட்ட எல்லைக்குள் இருக்குமாறு கட்டளையிட்டார். அந்தப் பிரபுவிடம் எதிர்ப்பு எனக்கு இப்படி ஆரம்பமாயிற்று. ஆனால் என்னுடைய இத்தகைய எதிர்க்கும் திறமையின் விளைவாக அவருக்கு என்னிடம் அன்பு வளர்வதாயிற்று. ஹோம்ரூல் இயக்கத்தில் நான் பங்கு கொண்டதின்விளைவாக, இந்தியாவின் சிறந்த தலைவர்கள் பலரோடு நட்பும் உறவும் கொள்ளும் பேறுபெற்றேன்.

சரோஜினிதேவி, மகமதலி ஜின்னா, பண்டித மோதிலால் நேரு, சர். தேஜ்பகதூர் சாப்ரு, ஹஸான் இமாம், மகமதாபாத் ராஜா, நரோத்தம், துவாரகாதாஸ் குடும்பத்தினர், உமர் சுபோனி, ஆகியோர் அத்தலைவர்களில் சிலராவர்.

மீண்டும் வக்கீலானேன்

இந்த அரசியல் இயக்கத்தின்வளர்ச்சிக்காலத்தில் இங்கிலாந்துக்கு நான் அடிக்கடி சென்று வந்தேன். இந்தியா மந்திரி மாண்டேகு அவர்களோடு சிறந்த நட்புரிமை கொண்டேன். அவருடைய யோசனையின் பேரில்தான் 1920-ம் ஆண்டு அப்பொழுது மிகுந்த சக்தி பெற்றிருந்த ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிட்டேன். அந்தத் தேர்தல் காலத்தில் நான் என் உடலுக்கு ஊறு விளைக்கப்படும் என்று பயமுறுத்தப் பட்டேன். ஒரு பொதுக் கூட்டத்தில் உடைந்த பாட்டில்களையும், செருப்புக்களையும் என்மீது எறிய முற்படுவதாக இருந்தது. நான் அவ்வாறு செய்பவர்களைச் சுட்டுத் தள்ளுவேன் என்று வீராவேசத்தோடு கூறினேன். கூட்டம் இனிதே நடந்தது. நானும் தேர்ந்தெடுக்கப் பட்டேன். ஆனால் எனது இந்தத் துணிவான நடத்தை, அந்தக் காலத்தில் ஒரு பெரிய விவாதத்தைக் கிளப்பியது.

தேர்தலுக்குப் பின் சென்னை கவர்னர் வில்லிங்டன் பிரபு எனக்கு 'வழக்குரைத்

துறை முதல்வர் (அட்வோகேட் ஜெனரல்) பதவி வழங்கினார். அதை நான் ஏற்றேன். ஆரம்பத்தில் வில்லிங்டன் பிரபுவோடு விரோத மனப்பான்மையில் எழுந்த தொடர்பு நட்புரிமையாக வளர்ந்து பிரிக்க முடியாத நெருக்கமாகப் பரிணமித்தது.



ஸ்ரீ சிருங்கேரி சங்கராச்சாரிய சுவாமிகள் காலடிக்கு விஜயம் செய்கிறார். டாக்டர் ஸி. பி. யும் உடன் செல்கிறார்.

'ராம்சே மாக்டானல்டு' இந்தியாவுக்கு வந்திருந்தபோது அவரைச் சந்தித்தேன். ஒருசமயம் உணவு அருந்த என் வீட்டுக்கு அவரை அழைத்தேன். அப்போது அவருக்கு அணிந்து கொள்ள ஒரு வேஷ்டி கொடுத்தேன். அதை உடுத்திக் கொண்டு அவர் தரையிலே 'கோணல் மாணலாக' உட்கார்ந்தார். ஆனால் அவர் பின்னர் பாராளு மன்றத்தில் கூறியபடி 'ஒரு நாள் அந்தணராக' என் வீட்டில் இருந்தார்.

என்னுடைய 'அட்வோகேட் ஜெனரல்' பதவிக் காலத்தில் வில்லிங்டன் பிரபு என்னிடம் குன்றாத அன்புடன் நிர்வாகக் குழுவின் அங்கத்தினர் பதவியை எனக்கு அளித்தார். அந்தப் பதவியை நான் ஏற்றுக் கொண்டேன்.

மேட்டூர், பைகாரா போன்ற மகத்தான நீர்த் தேக்க-மின்சாரத் திட்டங்களையும், பல தொழில் திட்டங்களையும், கொச்சி, விசாகப் பட்டினம், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களின் வளர்ச்சித் திட்டங்களையும் உருவாக்குவதற்கு உரிய வாய்ப்புக்கள் அப்போது எனக்குக் கிடைத்தது என் பாக்கியமே யாகும். நிர்வாகக் குழுவில் நான் பதவி ஏற்பது ஒரு நற்செயல் நிகழ்ச்சியாகத் தோன்றினாலும் என் வாழ்வை உருவாக்கியதொரு காலமாகவே அது அமைந்தது. மும்முறை மத்திய சர்க்காரின் நிர்வாக உறுப்பினராக இருந்து சட்டம், வணிகம், போக்குவரவுச் சாதனங்களின் இலாகாக்களை நிர்வாகம் செய்தேன். ஆனால் சொந்த முயற்சி எடுத்துச் செயலாற்றுவதற்கு வாய்ப்பில்லாத அந்த அதிகார தோரணை என்னைக் கவரவில்லை. பதவிக் காலம் முடிந்த பின் நான் மீண்டும் வக்கீல் தொழில் செய்யத் தொடங்கினேன்.


திவான் பதவி

இலண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டுக் கூட்டங்களுக்குச் சென்று கலந்து கொண்டேன். அங்கு பேர்க்கென் ஹெட் பிரபு, ஸ்டாபோர்டு கிரிப்ஸ் பிரபு, ஹெல் போர்ன், அட்லி முதலானவர்களோடு தோழமை கொண்டேன். 1928-ம் ஆண்டில் அலகாபாத்தில் நடந்த அகில இந்திய வழக்கறிஞர்கள் மாநாட்டுக்கு நான் தலைமை தாங்கினேன். அப்போது வக்கீல்களுக்கென்று ஒரு சகாயநிதித் திட்டம் வகுக்க ஆலோசனை கூறினேன்.

இதே சமயத்தில் நான் வக்கீல் தொழிலை விடுவதற்கு ஒரு விசித்திரமான காரணம் ஏற்பட்டது. நான் மத்திய அரசாங்கத்தில் பதவி வகித்தபோது சட்ட இலாகா என்னிடம் இருந்தபடியினால் என்னுடைய ஆலோசனையின் பேரிலும், சிபாரிசின் பேரிலும், பலர் நீதிபதிகளாக நியமிக்கப் பெற்றனர். எனவே நான் வாதாட நேர்ந்த வழக்குகள் பலவற்றில் என்னுடைய யோசனையின் பேரில் நியமிக்கப் பெற்றவர்களே நீதிபதிகளாக இருக்கலாயினர். இது ஒரு பெரிய தரும சங்கடமான நிலை. இந்தக் காரணத்துக்காகவே நான் வக்கீல் தொழிலைக் கைவிட்டேன்.

இக் காலத்தில் சரித்திர நிகழ்ச்சிகளின் காரணமாக இந்திய சமஸ்தானங்களில் சட்ட ரீதியான சிக்கல்கள் பல எழுந்தன. அவற்றைத் தீர்க்கச் சட்ட ஆலோசனை தேவைப்பட்டது. எனவே ஹைதராபாத் நைஜாம் உட்படப் பல சமஸ்தான அதிபர்களுக்கு நானும், பிறரும் ஆஜரானோம். தொழிலை விட்டொழித்து நான் இப்படி ஆலோசனை கூற முற்பட்டது வருவாயளவில் சாதகமாகவே முடிந்தது.

இக்கருணத்தில் திருவனந்தபுரம் மன்னரின் பதவியேற்புச் சிக்கல் பற்றிய விவகாரத்தில் நான் உதவி புரிய முன்வந்தேன். அவர் சார்பாக நான் இங்கிலாந்து சென்றேன். பின்பு இராஜப் பிரதிநிதியான வில்லிங்டன் பிரபுவே இந்தச் சிக்கலுக்கு முடிவு கூறவேண்டியதாயிற்று. மகாராஜாவினுடைய பதவி



டாக்டர் ஸி. வி. ராமன், டாக்டர் ஸி. பி., டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

உரிமையை ஏற்றுக்கொண்டார். இது 1931ல் நடந்தது. பின்பு 1936ல் திருவாங்கூர் திவான் பதவி எனக்கு வழங்கப்பட்டது.

நானும் காந்தியடிகளும்

திருவாங்கூரில் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றவும், தொழில் வளம் ஆக்கும் நோக்கத்துடனும் நான் இந்தப் பதவியை ஒப்புக்கொண்டேன். ஆலயப் பிரவேசப் பிரகடனம் செய்தபோதும், மதராஸ் இட்டங்களை வகுத்தபோதும் பெரிய எதிர்ப்புகளை நான் சமாளிக்க வேண்டியிருந்தது. 'உயர் வகுப்பி'னரும் இந்தச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொண்டனர். காந்தியடிகள் இந்தச் சீர்திருத்தத்தின் உள் நோக்கத்தைப் பற்றி ஆய்ந்து எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

திருவாங்கூர் வந்து நிலவரங்களை நேரில் கண்டுகொள்ள வேண்டுமென்று காந்தியடிகளுக்கு நான் அழைப்பு அனுப்பினேன். அதனை ஏற்று அவர் அவ்வாறே வந்தார். சமஸ்தானம் முழுவதும் என்னுடன் சுற்றிப் பார்த்தபின் சீர்திருத்தத்தின் வெற்றியையும் அது காலத்துக்கேற்ற காரியம் என்பதையும் ஏற்றுக் கொண்டார். தமது சீடரான மகாதேவ தேசாய் அவர்களைச் சீர்திருத்தத்தின் நல்ல அம்சங்களை நூல் வடிவில் எழுதுமாறு தூண்டினார். அந்நூலே தேசாய் அவர்கள் எழுதிய 'திருவாங்கூர் வீர காவியம்' (The Epic of Travancore) என்பதாகும். காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்த காலத்தில் நானும் அவரும் கருத்து வேறுபட்டோம். பின்னரும் பல காரியங்களில் அவரோடு எனக்குக் கருத்து வேறுபாடு உண்டு. ஆனாலும் இறுதிவரை நாங்கள் சிறந்த நண்பர்களாகவே இருந்து வந்தோம்.

ஆலயப் பிரவேசம் பிரகடனமாகி நீண்ட காலத்துக்குப் பின்னர் சமஸ்தானத்துக்கு உடனடியாகச் சுயாட்சி வழங்க வேண்டுமென்று காங்கிரசுக்காரர்களும் கம்யூனிஸ்டுகளும் கூறினர்கள். நான் அந்தக் கோரிக்கையில் படிப்படியாக உரிமை வழங்கவேண்டுமென்று அரசினருக்கு எடுத்துக்கூற வேண்டியிருந்தது. இதன் விளைவாக, நடந்த போராட்டத்தில் கம்யூனிஸ்டு பேரிலும் மற்றவர்கள் பேரிலும், நான் வன்மையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது.

துணிவும் நம்பிக்கையும்

அச்சம்பவங்களை இன்று பின்னோக்கிப் பார்க்கும்போது அந்த நடவடிக்கையால் வேண்டாத வெறுப்புணர்ச்சியைச் சம்பாதித்ததாகவும் அதிகப்படியான அரசியல் நடவடிக்கையைச் செய்து விட்டதாகவும் நான் இப்பொழுது உணர்கிறேன்.

திருவாங்கூரில் நான் முதல் அமைச்சராக இருந்த காலத்தில்தான் இரு பெரும் ஆன்மீக ஞானத் தலைவர்களான, முக்தர்களான சிருங்கேரி சங்கராச்சாரிய சுவாமிகளுடனும் ரமண மகரிஷியுடனும் நெருங்கிப் பழக நேர்ந்தது. வாழ்க்கைப் பிரச்னைகளைப்பற்றி எனக்கிருந்த மனப்பாங்கை இவ்விருவருடைய தொடர்பும் அறவே மாற்றியமைத்ததோடு அல்லாமல் கடவுளைப் பற்றி 'உண்டோ இல்லையோ' என்றிருந்த மனநிலைமையையும் முழுவதும் போக்கி வேதாந்தக் கொள்கையின் சாரத்தில் பரிபூரண நம்பிக்கை வைக்குமாறு தூண்டியது. பக்தி உணர்வை வெளிக்காட்டிக் கொள்வதிலும், சடங்குகளிலும் ஆடம்பரங்களிலும் எனக்கு அதிகமான நம்பிக்கை இல்லை. ஒரு சமயம் யாரோ சிலர் இட்டமிட்டு என்னைக் கொலை செய்ய முயன்றதால் நான் படுகாயமுற்ற பின்னர் திருவாங்கூர் முதலமைச்சர் பதவியை விட்டுவிட்டேன். அதன் பின்னர் உலகில் பல நாடுகளுக்குச் சென்று பல பல்கலைக் கழகங்களிலும், சிறிய கூட்டங்களிலும், பெரிய கூட்டங்களிலும், பொருளாதார, தத்துவ சமய, பொருள்களைப் பற்றிச் சொற்பொழிவுகளாற்றுகிறேன்.

இப்பொழுது எனக்கு அரசியலிலோ தனி வாழ்விலோ எந்த விதமான ஆசைகளும் கிடையாது. என்னுடைய சொத்துக்களில் பெரும் பகுதியைப் பல ஆண்டுகளுக்கு முன்பே விநியோகம் செய்து விட்டேன். அரசியலிலும் சமூக வாழ்விலும் அடையக் கூடியதைப் போலவே, தனிமையிலும் சிறந்த சிந்தனையாளர்களோடு உறவாடுவதிலும் வாழ்க்கையின் முழுமையை அடைய இயலும் என்று நான் கருதுகிறேன்.

உள்ளும் புறமும், துணிவும் அன்பும் கொண்டு அவற்றின் முக்கியத்துவத்தை உணர்வதே இன்று என்; வாழ்க்கையைத் தாங்கிக்கொண்டு வருகிற அடிப்படையான கொள்கைகளாகும்.

அச்சமின்மை தரும் ஞானம்

"ஐயமுண்டு பயமில்லை மனமே"

ராஜாஜி

ஆணி வேர்

"இச்சகத்துளோரெலாம் எதிர்த்து நின்று, துச்சமாக எண்ணி நம்மைத் தூறு செய்த போதினும். இச்சை கொண்ட பொருளெலாம் இழந்து, பிச்சை வாங்கி யுண்ணும் வாழ்க்கை பெற்றுவிட்ட போதினும், நச்சை வாயிலே கொணர்ந்து நண்பர் ஊட்டு போதினும், பச்சை ஊன் இயைந்த வேற் படைகள் வந்த போதினும், உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதினும், அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்ப தில்லையே" என்று பாரதியார் பாடினார். இந்த அச்சமின்மையைத் தருவது வேதாந்தம். இந்தியப் பண்பாட்டுக்குப் மூலவேர் வேதாந்தம். முற்காலத்திலும் இக்காலத்திலும், இந்நாட்டின் சரித்திரத்தில் கண்ட தைரியம், வீரம், தியாகம், பெருமை எல்லாவற்றுக்கும் மூல சக்தி, வேதாந்தம். ஒவ்வொருவன் உள்ளத்திலும் வேதாந்தம் இப்போதும் ஊன்றி நிற்கிறது. புது நாகரிகம், புது உணர்ச்சிகள், புதுச் சம்பிரதாயங்கள் எவ்வளவு புகுத்தினாலும், மூல வேரான வேதாந்தம் அழியவில்லை. நகர வாழ்க்கை, கிராம வாழ்க்கை, பணக்காரன் வாழ்க்கை, ஏழைகளின் வாழ்க்கை, படித்தவர்களின் வாழ்க்கை, மூடர்களின் வாழ்க்கை, யோக்கியர்கள் அயோக்கியர்கள் எல்லாருடைய வாழ்க்கையிலும் வேதாந்த வாசனை வீசுகிறது. வேதாந்தமே, இந்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு ஆணி வேர்.

முதனூல்

வேதாந்தத்துக்கு முதல் நூல் உபநிஷத்து. உபநிஷத்து படிக்காதவன் இந்தியப் பண்பாட்டைப் பூரணமாய் அறிந்ததாகச் சொல்லிக் கொள்ள முடியாது.



பழைய நூல்களைப் படிக்கும்போது, நேற்று எழுதின புத்தகங்களைப் போல் அவை இருக்கும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடையக் கூடாது. அவை தோன்றிய காலத்தில் உலகமும், தேசமும், மக்கள் வாழ்க்கையும், தேசாசாரமும் முற்றிலும் வேறு நிலையிலிருந்தன. இதை மறந்துவிட்டு, தற்காலத்தில் விவாதிக்கப்பட்டு வரும் விஷயங்களை மனத்தில் வைத்துக்கொண்டு, மூவாயிரம் வருஷங்களுக்கு முன்பு எழுதப்பட்ட பழைய நூல்களை விமரிசனம் செய்யக் கூடாது. ஒவ்வொரு நூலும், அது தோன்றிய காலத்து வாழ்க்கையை ஒட்டித்தான் பேசும். நம்முடைய கற்பனா சக்தியையும் அறிவையும் செலுத்தி, அந்தக் காலத்து வாழ்க்கையை வைத்து முன்னோர் எழுதிய நூல்களைப் படிக்க வேண்டும்.

உபநிஷத்துக்களின் முக்கிய கருத்து என்னவென்றால், இவ்வுலகத்தில் பொருள் சம்பாதித்துப் பெறக் கூடிய போகங்களினாலும், அக்காலத்தில் முற்றிலும் உண்மை என்று கருதப்பட்ட வேதத்தில் சொல்லிய வேள்விகளைச் செய்து அவைகளின் பயனாக அடையும் சுவர்க்க போகங்களினாலும்கூட, மனிதன் நிலையான சுகம் பெற மாட்டான். ஆத்ம ஞானமே நம்மைப் பரம் பொருளுடன் ஒன்றுபடுத்திக் கரும பாசத்திலிருந்து விடுவிக்கக் கூடியது. அதுவே உலகத்துக்குப் பழுதற்ற சாசுவதமான நல்வழி என்று போதிப்பதாகும். இந்த உண்மையைப் படிப்படியாக உபதேசிக்கும் நோக்கத்துடன் சொல்லப்பட்ட உபநிஷத்து மந்திரங்கள் சில இடங்களில் ஒன்றுக்கொன்று முரண்படுவதாகத் தோன்றும். ஆனால், படிப்படியான உபதேச முறையைக் கவனத்தில் வைத்துப் பூரண முறையில் ஆராய்ந்தால், முரண் தீர்ந்து பொருள் விளங்கும். உபநிஷத்து தோன்றிய காலத்தில் ஆசாரியனுடைய

கூட்டுறவும் வாய்மொழி உபதேசமுமின்றிப் படிப்பே கிடையாது. வெறும் புத்தகப் படிப்பு அப்போது இல்லை. அச்சடித்த புத்தகப் பிரதிகள் தாமாகப் பரவும் சங்கதியே அந்தக் காலத்தில் சாத்தியமில்லை.

பிரபந்தங்கள்

வேதாந்தத்தில சைவம், வைணவம் முதலிய சமய பேதங்கள் இல்லை. பரம்பொருளை எந்தப் பெயர் வைத்துத் தியானித்தல் நலம் என்கிற வாதங்கள் அதில் இல்லை. ஸ்ரீ சங்கராச்சாரியர் எழுதிய வேதாந்த நூல்களில் நாராயணன் என்றே ஈசனைக் குறிப்பிடுவார்கள். பெயர்களும் தியானத்துக்காக நாம் மனத்தில் கற்பித்துக் கொள்ளும் அங்கங்களும் சின்னங்களும், பூஜை செய்யும் மூர்த்திகளும், ஓங்காரமும்கூட, நம்முடைய உள்ளத்தைப் பரம்பொருளின் வழிச் செலுத்துவதற்கு உபயோகப்படும் சாதனங்களே யொழிய வேறல்ல. பொருள் ஒன்று, பெயர் பலவாயிருக்கும் அப்பொருளை,

"ஏக மூர்த்தி இரு மூர்த்தி
மூன்று மூர்த்தி பல மூர்த்தி
யாகி ஐந்து பூதமாய்
இரண்டு சுடராய் அருவாகி
நாகம் ஏறி நடுக் கடலுள்
துயின்ற நாராயணனே!"

என்றும்,

"முனியே! நான்முகனே!
முக்கண்ணப்பா! என் பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண்
கருமாணிக்கமே! என் கள்வா!"

என்றும் திருவாய்மொழியில் சடகோபர் பாடினார்.

எந்த சமயத்தில் வளர்ந்தவர்களுக்கும், வேதாந்தம் பொது. சைவ வைஷ்ணவப் பிரபந்தங்கள் வேதாந்தத்தைத்தான் பலவழியில் விளக்குகின்றன. உபநிஷதங்களைப் படிக்க இயலாதவர்கள் சைவ வைஷ்ணவப் பிரபந்தங்களைப் பக்தியுடன் படிக்க வேண்டும். அதுவும் செய்யவில்லையானால், தற்காலத்து வேதாந்தக் கவியாகிய பாரதியார் பாடிய 'விநாயகர் நான்மணிமாலை'யைப் படிக்கலாம், அது ஓர் உயர்ந்த வேதாந்த நூல். அதுவும் வேண்டாம்; தேசபக்தர்கள் பாடும் 'அச்சமில்லை', 'ஜயமுண்டு', 'சங்கு', 'ஜயபேரிகை' முதலிய விடுதலைப் பாட்டுக்களை, அவைகளிலுள்ள ஆழ்ந்த பொருளை நிதானமாக யோசித்துத் தெரிந்துகொண்டு நிறுத்திப் பாடினால் அதுவும் வேதாந்தமே. பொருளைக் கவனியாமல் உரத்த குரலில் வெறும் தாள இன்பத்துக்காகப் பாடுவதற்கென்று அல்ல, அந்தப் பாடல்களைப் பாரதியார் பாடியது. வேதாந்த விதையை அனைவருக்கும் தந்து நாட்டைப் பண்படுத்தி விலையுயர்ந்த பெரும் பயிரை வளர்க்கவே பாரதியார் பழைய வேதாந்தத்தைத் தேசியப் புதுமணத்துடன் கலந்து அந்த அற்புதமான பாட்டுக்களைப் பாடித் தந்தார். உண்மை என்பது, சமயமும் கலையும் பண்பாடும் தைரியமும் ஊக்கமும் தேசியமும் அனைத்தும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட ஒரு பொருள். வேதாந்தத்தின் முடிவு உலகத்தை விடுவது அல்ல. சுயநலத்தையும் சுகபோகப் பற்றுக்களையும் அபிமானத்தையும் தைரியமாகக் களைந்தெறிந்து எல்லாக் கடமைகளையும் அஞ்சா நெஞ்சுடன் செய்து வாழ்க்கையை நடத்துவதற்குச் சாதனமான ஆத்ம சக்தியை வேதாந்தம் தரும். இதற்கு, சுவாமி விவேகானந்தர், கீதா ரகசிய ஆசிரியரான லோகமான்யதிலகர், சுப்பிரமணியசிவம், அரவிந்தனுர், பாரதியார், மகாத்மா காந்தி இவர்களே சான்றுவார்கள்.

உடல் வேறு, நான் வேறு

ஞானத்துக்கு முதற்படி நான் வேறு, தேகம் வேறு என்ற உறுதியான உணர்ச்சி பெற வேண்டும். உடலுக்குள் உடலைத் தவிர ஆத்மா என்ற ஒரு தனிப் பொருள் உண்டா? அது உடலினின்றும் வேறுபட்ட ஒரு பொருளா? அல்லது, உடலின் லக்ஷணங்களையே ஒரு தனிப் பொருளாக அமைத்துக் கொண்டு தவறாகப் பேசி வருகிறோமா? உடல் அழிந்ததும் அதனுடன் அதன் லக்ஷணமான ஆத்மாவும் முடிந்ததா, அல்லது தனிப் பொருளாகி வேறுபடுகிறதா? தனிப் பொருளாயிருப்பினும், அது உடலைப் போல் அழிந்துபோகும் பொருளா? அல்லது ஓர் அழியாப் பொருளா? இந்த விஷயத்தைப் பற்றி மக்களுக்கு உறுதியான கொள்கை இல்லாதிருப்பதே உலகத்தில் காணப்படும் எல்லாக் குறைகளுக்கும் காரணம். சந்தேகம் தீரத் திருப்தி செய்து கொண்டாலுங் கூடத் திரும்பத் திரும்ப அஞ்ஞானம் வந்து மூடிக்கொள்கிறது. உடலும் புலன்களும் அவ்வாறு, வேறு ஒரு பொருள், உடல் உணர்ச்சி உயிர் எல்லாவற்றையும் ஊடுரு

வித் தனக்குள் இருக்கிறது என்பதை அறிவுள்ள மனிதன் உறுதியாக உணர்ந்தானுனல், ஞானமும் பக்தியும் பற்றற்ற வாழ்க்கையும் சத்தியமும் உண்டாகிக் குறைவுபடாமல் நிற்கும். உலகம் கடைத்தேறும். அதற்காகவே உபநிஷத்துக்களில் பரமாத்மாவைப் பற்றிச் சொல்லுவதோடு, ஜீவாத்மாவைப் பற்றிப் பலவேறு விதமாகத் திரும்பத் திரும்ப விவரிக்கப்படுகிறது. உடலைத் தவிர்த்து வேறு ஏதுமில்லை என்றுல், வேதாந்த மில்லை. சரீரம் வேறு சரீரி வேறு என்று சந்தேகமற உணர்ந்தால், வேதாந்த வாழ்க்கை தானுகத் தோன்றிவிடும்.

அறிவு மட்டும் போதாது

உள்ளத்தில் மறைந்து நிற்கும் ஆத்மாவைக் காண வேண்டும். காண்பது என்றுல், சந்தேகம் முற்றிலும் அழிந்து உண்மையைப் பூரணமாக உணர்வது. உண்மையைக் காண அறிவும் ஆராய்ச்சியுமே போதாது. நற்குணமும் சீலமும் வேண்டும்.

ஆத்மா என்பது உடலில் ஓர் அவயவத்தைப் போன்றதல்ல. அதற்குத் தனி இடமில்லை. உடலையும் உள்ளத்தையும் ஊடுருவிக் கலந்து நிற்கிறது. உள்ளம் தெளிவு அடைந்தாலொழிய அதனுள் இவ்வாறு கலந்து மறைந்திருக்கும் பொருள் உருக்கொண்டு கோசரமாகாது. புறத்தில் நிற்கும் ஒரு பொருளைப் பார்க்கும் முறை வேறு. உள்ளத்துக்குள் ஊடுருவி நிற்கும் ஒரு பொருளைக் காணக் கூடிய முறை வேறு. மனம் தெளிந்தாலொழிய உள்ளத்துக்குள் ஊடுருவி நிற்கும் பொருள் வெளிப்படாது. மனம் தெளிவு படுவதற்குச் சீலமும் பற்றற்ற நிலையும் அமைதியும் வேண்டும். இந்தக் காரணத்தை நன்றுக ஆராய்ந்து உணர்ந்தால் உடலிலுள்ள ஆத்மாவைக் காண ஏன் நல்லொழுக்கமும் சுத்தமான உள்ளமும் வேண்டும் என்பது விளங்கும். ஞான மார்க்கம், பக்தி மார்க்கம், கரும மார்க்கம் என்று மூன்றுகச் சொல்லப்பட்ட முறைகள் எல்லாம் ஒன்றே என்பதும் விளக்கமாகும்.

ஆகவே, மனமும் இந்திரியங்களும் சரிவர அடங்கப் பெற வேண்டும். இதற்கு விவேகம் வேண்டும். புத்தி கலக்கமற்ற ஒளி பெற வேண்டும். ஒளி பெற்ற புத்தியின் வேகம் மனத்தின் மேல் செல்ல வேண்டும்.

இவ்வாறு அமைதி நிலையை அடையாவிடில், திரும்பத் திரும்பக் கலக்கம் ஏற்படும். இடையருத கவனத்துடன் புத்தி, மனம், இந்திரியங்கள் இவைகளை அடக்கி ஆள வேண்டும். இந்த முயற்சிக்குத்தான் யோகம் என்று பெயர். இந்த நிலையை அடைந்தால் உள்ளத்தில் மறைந்து நிற்கின்ற ஆத்மாவைக் காணப் பெறலாம்.

யோக முயற்சியால் கண்ட ஞானமானது எப்போதும் ஒரே நிலையில் நிற்காது. உள்ளத்தின் நிலையை மிக்க கவனமாய்க் காப்பாற்ற வேண்டும். உதயாஸ்தமனத்தைப் போல் ஒரு சமயம் தெளிவடைந்து தோன்றியது பிறகு மறைந்துபோகும். மறுபடியும் உதயமாகி மறுபடியும் மறையும். யோக நிலையை ஒரே படியாக அடைந்து விடுவது கடினம். ஆயினும் முயற்சியைத் தளர விடக் கூடாது.

உலகம் பொய் அல்ல

உலகம் சர்வேசுவரனுடைய மாயை என்பதை யாவரும் சொல்லக் கேட்டிருக்கிருேம். இதன் பொருள், உலகம் பொய் என்பதல்ல. உலகம் உண்மையே. பொய்யல்ல.

மாயையைப் பற்றியும் ஆத்மாவைப் பற்றியும் பரம்பொருளைப் பற்றியும் உபதேசம் செய்த பெரியோர்கள் அனைவரும் உலகம் உண்மை என்றே தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறுர்கள். உபதேசத்துக்கு மாருக நடக்கும் பொய்யர்களைப் பற்றிச் சொல்லவில்லை. பூரண மெய் வாழ்க்கை நடத்தி ஞானிகளின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தாலே உலகமும் வாழ்க்கையும் வினைப்பயனும் உண்மை என்றே அவர்கள் எண்ணினுர்கள் என்பது உறுதியாகிறது. இப்படியிருந்தும் அவர்கள் கொள்கையானது எல்லாம் மாயை, எல்லாம் ஈசுவரனுடைய உருவமே, எல்லாம் ஈசுவரன் செயலே என்றுல், இதற்குப் பொருள் என்ன?

ஈசனே சகலமும் என்றுல் அனைத்தின் உயிரும் அவனே என்று பொருள். உடலுக்கு ஆத்மா எவ்வாறே, அவ்வாறு எல்லாப் பொருள்களுக்கும் எல்லா உயிர்களுக்கும் உள்ளே இருக்கும் அந்தர்யாமி ஈசன். நான் போனேன், நான் வந்தேன், நான் செய்தேன் என்றுல், அது கேவலம் உடலின் செயலான போதிலும், உடலினுக்குள் எல்லாவற்றையும் நடத்தும் ஆத்மாவின் கருமமேயாகும். அது போலவே ஆத்மாவுக்கு ஆத்மா ஈசன். ஆத்மாவின் செயல் ஈசன் செயல். சகலமும் ஈசன் செயல். சகலமும் ஈசன் உருவம். ஈசனும் உண்மை, ஈசன்

ஊடுருவி நிற்கும் சகல உயிர்களும் உண்மையே.

உலகத்திலுள்ள ஜீவன்கள் பரமாத்மாவுக்குச் சரீரங்களைப் போலாகும். சர்வ வியாபகமான பரம்பொருளுக்கு, ஜகத்து முழுதும் ஒவ்வொரு தனிப் பொருளும் சரீரமாகும். அனைத்தும் சேர்ந்து பரமனுக்கு ஒரு சரீரமாகும். அவையே அவனுக்குத் தனித்தனியான சரீரங்களுமாகும். அந்தராத்மா இன்றி எல்லா உயிரும் வெறுஞ் சவம் போலாகும். அசேதன இயற்கைச் சக்திகளுக்கும் மூலாதாரமாயுள்ளது, எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நிற்கும் பரம்பொருளே.

மாயை என்றால் அனைத்தும் பொய், நாம் ஏதேனும் செய்து கொண்டு போகலாம் என்றல்ல. வேதாந்த உபதேசம் இதுவன்று. அனைத்தும் உண்மை, அனைத்தும் நியதிக்குட்பட்டது என்பதே வேதாந்த உபதேசம்.

அனைத்திலும் ஓர் உயிர்

ஆகவே, உடலுக்குள் அதற்கு உயிர் தரும் ஆத்மா ; ஆத்மாவுக்குள் அதற்கு உயிர் தரும் பரம்பொருள் ; இது உலகத்தின் அமைப்பு. ஒரே ஆத்மாவானது பல விதமான உடல்களைப் பல பிறவிகளில் தரிக்கிறது. அப்படித் தரிக்கும் காலத்தில் தன் தேகமே தானாக நினைத்து வாழ்கிறது. இதைப் போல், பரம்பொருளும் பல ஆத்மாக்களில் ஒரே காலத்தில் அந்தராத்மாவாக ஊடுருவி நிற்பதை ஒருவாறு உணரலாம். ஒரே காலத்தில் எல்லா ஜீவன்களும் பரமாத்மாவுக்குச் சரீரங்களாகின்றன. அந்தராத்மா ஒன்றேயாயினும் ஜீவன்கள் தனி ஜீவன்களாக வாழ்கின்றன. இதைத்தான் மாயை என்பது. கல்வி கற்றவன், பாமரன், வீரன், கோழை, பலவான், நோயாளி, உயர்ந்தோன், தாழ்ந்தோன், இன்னும் எல்லா ஜீவகோடிகளிலுமே அந்தராத்மாவாக எல்லாவற்றையும் நடத்திக் கொண்டு நிற்பது ஒரே பரம்பொருள்.

நமது ஆசாபாசங்கள் சுகதுக்கங்கள் இவைகளில் ஆத்மாவானது மறைந்து போய்க் கிடக்கிறது. அவ்வாறு மறைந்திருக்கும் ஆத்மாவினுக்குள் அதன் ஆத்மாவாகி நிற்கும் அந்தராத்மா நம் அறிவுக்கு முற்றிலும் மறைந்து போகிறது. புனிதப் பரம்பொருளான அந்தராத்மா மாசு படாது: ஆனால் மாசுகளின் மத்தியில் மூடிக் கிடக்கிறது. மனத்தை ஒருமைப்படுத்திப் புலன்களை அடக்கி, புறப்பொருள்களினின்று உள்ளம் மீண்டு மாயை நீங்கினால், உள்ளத்தில் குடிகொண்டுள்ள ஆத்மாவையும் ஆத்மாவுக்கு ஆத்மாவான பரம்பொருளையும் காணலாம். பரமாத்மாவே அனைத்தினுள்ளும் நின்று நடத்துவது என்பதை உணர்ந்து விட்டால், இன்ப துன்பங்கள் மறைந்து போகும். இதுவே வேதாந்தம்.

இந்தத் தத்துவம் வேறொரு விதமாகவும் உபநிஷத்தில் விளக்கி உபதேசிக்கப்படுகிறது. வெயிலையும் நிழலையும் பார்க்கிறோம். வெயிலின் வழியில் நிற்கும் பொருளானது நிழலை உண்டாக்குகிறது. வெயிலுக்கு ஏற்பட்ட தடை அல்லது குறையே நிழலின் வடிவத்தை உண்டாக்குகிறது. வெயிலுக்கு வடிவம் இல்லை. அது சமப்பிரகாசம் வீசுகிறது. நிழலுக்கு வடிவம் உண்டு. ஆனால் ஒளிப் பொருளாகிய வெயிலின் குறைக்குத்தான் நிழல் என்று பெயர். வெயிலே நிழல் ஆகிறது. குறையும் தடையுமின்றி நின்றால், வெயில் சமப்பிரகாசமாக வீசும். தடைப்பட்ட இடத்தில் நிழல் தோன்றுகிறது. இவ்வாறே ஜீவாத்மாக்கள் பரமாத்மாவின் சமப்பிரகாசத்தினிடையில் தோன்றுகிற நிழல்களாகும். தடையை நீக்கியவுடன் நிழலும் வெயிலும் ஒன்றாகிவிடும். மனிதனுடைய கருமபலன்கள் நிழல்களை உண்டாக்குகின்றன. ஆனால் நிழலின் உயிரும் அதன் உண்மைப் பொருளுமாக இருப்பது வெயில்தான். அந்த நிழலையே ஜீவாத்மா என்று வைத்துக்கொண்டு பேசுகிறோம்.

விடுதலை

மோக்ஷம் என்றால் பரம்பொருளை அடைவது. அது, ஓர் ஊரிலிருந்து வண்டி ஏறி அல்லது நடந்து போய் இன்னொரு ஊரை அடைவது போல் அல்ல. அந்தராத்மாவும் தானும் ஒன்றே என்ற ஞானம் உண்டாகி, வெயிலும் நிழலும் ஒன்றாதல் போல் உண்மையை அடைதலே மோக்ஷம் ; வேற்றுமை உணர்ச்சி தீர்ந்து அனைத்தும் ஒரு பரமாத்மாவின் உடல் என்பதை உணர்தல். மோக்ஷம் என்றால் வடமொழியில் விடுதலை என்றே பொருள். மோக்ஷம் என்ற மொழியின் பகுதிக்கு 'விடு' என்று பொருள். விடு என்ற

தமிழ் மொழியினின்று விடுதலை அல்லது வீடு என்ற மொழி உண்டாவது போல், 'மோக்ஷம்' என்கிற சம்ஸ்கிருத பதமும் உண்டாகிறது. மோக்ஷம் அல்லது விடுதலை என்பது ஒரு நிலை; ஓர் ஊரோ, உலகமோ, கட்டடமோ, மாளிகையோ, தோட்டமோ அல்ல. ஆகையால் நம்மாழ்வார்,—

"நன்றாய் ஞானம் கடந்து போய்
நல்லிந்திரிய மெல்லாம் ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும் பெரும் பாழ்,
உலப்பி லதனை உணர்ந்துணர்ந்து
சென்று, ஆங்கு இன்பத் துன்பங்கள்
செற்றுக் களைந்து பசை அற்றால்,
அன்றே, அப்போதே வீடு,
அதுவே வீடு, வீடு ஆமே!"

"அதுவே வீடு, வீடு பேற்று
இன்பந்தானும் அது; தேறி
எதுவே தானும் பற்றின்றி
யாதுமிலிக ளாகிற்கில்,
அதுவே வீடு; வீடு பேற்று
இன்பந்தானும் அது; தேறாது,
எதுவே வீடு? எது இன்பம்? என்று
எய்த்தார், எய்த்தார், எய்த்தாரே!"

என்கிற பாசுரங்கள் பாடினார்.

விடுதலைக்கு வழி

பரம்பொருளுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தத்தை உணர்ந்தோமானால் ஜீவனுக்கும் ஜீவனுக்குமுள்ள வேற்றுமை உணர்ச்சி அற்றுப் போகும். வேற்றுமை உணர்ச்சி நீங்குவது தூக்கத்தினின்று விழிப்பது போல். இரவில் ஒருவன் கனவு காண்கிறான். அதில் தோன்றும் சம்பவங்களினால் கஷ்டப்படுகிறான். அவனுக்கு எவ்வாறு கஷ்ட நிவாரணம் உண்டாகும்? தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து, கனவைக் கனவென்று காண்பதே நிவாரணம். அதுபோல், ஆத்மாவைப் பிடித்து நிற்கும் வேற்றுமை உணர்ச்சியினின்று விழித்தெழுந்து துக்கங்களினின்று விடுவித்துக் கொள்ள வேண்டும். ஆகையால், "எழு; எழு! விழித்தெழு!" என்று உபநிஷத்துக்கள் முழங்குகின்றன. உள்ளத்தில் உள்ளது பரம்பொருள் என்றறிவது நல்ல தூக்கத்தினின்று விழிப்பது போன்ற ஒரு நிலை மாறுபாடு. அடுத்த அறையில் சுப்பன் இருக்கிறான் என்று சொல்லக் கேட்டு விஷயத்தைச் சும்மா தெரிந்து கொள்வதுபோல் அல்ல.

மனோநிலையே முற்றும் மாறவேண்டும். தூக்கத்தினின்று விழிப்பது சுலபம். ஆனால் சம்சார மாயை என்ற பெருந் தூக்கத்தினின்று விழிப்பது எளிதன்று. விழிக்க வேண்டும் என்கிற விருப்பம் உள்ளத்தில் முதலில் பொங்க வேண்டும். இரண்டாவதாக, அந்தரத்தில் கயிற்றைக் கட்டி அதன்மேல் கழைக் கூத்துக்காரன் நடப்பதுபோல் இடைவிடாத ஜாக்கிரதை வேண்டும். புலன்களையும் மனத்தையும் அடக்கி, ஒழுக்கத்தைக் காப்பாற்றி உள்ளத்தை மாசற்ற நிலையில் நிறுத்திக் கொள்ள வேண்டும். மறுபடியும் வேற்றுமை உணர்ச்சியில் விழாமல் காத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

அறியாமையால் தூண்டப்பட்டு அநித்திய சுகங்களை அடைய விரும்புகிறோம். அதற்காகப் பலகாரியங்கள் செய்கிறோம். விரும்பிய சுகங்களை அடையாததனால், அல்லது அடைந்து பிறகு இழந்ததனால், கோபம், த்வேஷம், துக்கம் இவைகளை உண்டாக்கிக் கொள்கிறோம். இதனால் முன்னைவிட அறியாமை அதிகரிக்கிறது. 'தான்' என்கிற அகங்காரமும், 'தனது' 'தனக்கு' என்ற பொருட்பற்றும் ஆசையும் முன்னைவிட அதிகமாகின்றன. இவ்வாறு உண்மையினின்று வரவர வெகு தூரம் விலகிப் போய் விடுகிறோம். அப்படிப் போகாமல் அணுகுவதே விடுதலைக்கு வழி. அடக்கமும் சீலமும் அவசியம். உள்ளத்திலும் நம்மைச் சுற்றிலும் இருப்பது பரம்பொருள் என்றறிந்து அப் பரம்பொருளைச் சிரத்தையுடன் தியானித்தல் அவசியம்.

பூரணமான ஞானம் அடையாமற் போனாலும் முயற்சியை விடலாகாது. அரை குறையாக அடைந்த ஞானமே நன்மை தரும். முயற்சியினாலேயே மாசுகள் ஓரளவு நீங்கப் பெற்று நற்குணங்களை அடைவோம். வாழ்க்கையில் நாம் செய்யப் பார்க்கும் பல பாவச் செயல்களி னின்று தப்புவோம். முயற்சியே நம்மை மேல் நிலைக்கு உயர்த்தும்.

வினைப்பயன் விதி

உடல் என்பது ஒரு கருவி. நல்ல அழகிய கருவி. கருவியும் கருவிக்கு எஜமானனும் ஒன்றாக மயங்கி நிற்கும் ஒரு வியப்பான கருவி. அவ்வாறே உடலுக்கு

எஜமானனுன ஜீவாத்மாவும் ஒரு கருவியே. அந்தக் கருவியை ஆள்வது அதனுள் அந்தர்யாமியாய் நிற்கும் கடவுள். அதுவும் ஒரு வியப்பான நிலை. ஆள்வோனும் ஆளப்படும் கருவியும் மயங்கி நிற்கும் நிலை. உடலும் உடலில் சூக்ஷ்மமாக வேலை செய்யும் புலன்களும் உடலுக்குள் பொறுப்புடன் நிற்கும் ஆத்மாவுக்குத் துரோகம் செய்யாமல் நற்பணி செய்ய வேண்டும். அதைப் போலவே அந்த ஆத்மாவும் தனக்குள் கோயில் கொண்டிருக்கும் பகவானுக்கு ஒரு நற்கருவியாக அமைந்து ஒழுக வேண்டும்.

உடல், வாக்கு, மனம் இவைகளைக் கொண்டு வினைகள் செய்யப்படுகின்றன. இந்த வினைக்கு இந்தப் பயன் என்பது இயற்கைச் சாசனம். காரண காரிய சம்பந்தம் என்பது மாறு நியதி. பயன் என்பது வினையில் மூடிக் கிடக்கிறது, அந்தந்த விதையில் அந்தந்த மரம் மூடிக் கிடப்பது போல். வெயிலில் நீர் உலர்ந்து ஆவியாகிப் போகும். இதை மாற்ற முடியாது. வெயிலும் நீரும் சேர்ந்தால், பயன் அந்தச் சேர்க்கையிலேயே கிடக்கிறது. இதைப் போலவே அனைத்தும். ஆழ்ந்து யோசித்து உணர்ந்தால் உலகமெல்லாம் இப்படியே மாருத நியதிப்படி வினையும் பயனுமாக நடைபெறுவதைக் காண்போம். இதுவே 'விதி' என்று சொல்லப்படும் வேதாந்த தத்துவம். 'விதி' என்ருல் நியதிக்கு அடங்காத ஓர் அநியாய நிகழ்ச்சி என்று பொருள் கொள்வது தவறு.

ஆத்ம சுதந்திரம்

விதிவசம் என்ருல் செய்த வினையின் பயனைத்தான் எதிர்பார்க்கவேண்டும் என்பது. ஒருகாலும் வினை தன் பயனை விளைவிக்காமல் போகாது. செய்த வினையினுல் அதன் உண்மைப் பயன்தான் உண்டாகும். வேருென்று உண்டாகாது. அனைத்திலும் ஈசன் இருக்கிருன். ஆகையினுல் நியதி தவருமல் ஒவ்வொன்றும் விதி அல்லது நியதிப்படிதான் நடக்கும். இதை மாற்றவே முடியாது. பயனை வேண்டின் அதைத் தரும் வினையைச் செய்ய வேண்டும். ஒன்று செய்து வேருெரு பயனை அடைய முடியாது. செய்ய வேண்டிய செயலைச் செய்தால் பயனுண்டு. இல்லாமற் போகாது. இதுவே ஆத்மாவின் சுதந்திரம். மனே வாக்குக் காயம் மூன்றுமே வினை செய்யும். எண்ணிய எண்ணங்கள், பேசிய பேச்சுக்கள், செய்யும் செய்கைகள் எல்லாம் தத்தம் பயனை விளைவிக்கும். இதை ஏமாற்ற முடியாது.

எல்லாம் விதிவசம் என்ருல் அறிவும் புருஷ யத்தனமும் பயன்படாது, சும்மா இருத்தலே நலம் என்பதல்ல. "ஆமடா, விதிவசந்தான். அறிவில்லாதவர்களுக்கு இன்பமில்லை என்பது ஈசனுடைய விதி. சாத்திரமில்லாத தேசத்திலே நோய்கள் விளைவது விதி" என்று பாரதியார் சொன்னர்.

காரணங்கள் இருக்க அதை அறியாத போது நாம் விதி, விதிவசம், அதிருஷ்டம் என்கிருேம். ஆனுல் இது அறிவைச் செலுத்தாத குற்றத்தை ஒப்புக்கொண்டு பயனைக் கண்டு வருத்தப்படுவதேயொழிய வேறன்று. 'அதிருஷ்டம்' என்ருல் காணப் படவில்லை என்று பொருள். அவ்வளவேயொழிய, நியதிக்கு உட்படாதது என்றல்ல.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் மூன்றுவிதமான பயன் உண்டாகும். வெளி உலகத்தில் உண்டாகும் விளைவு ஒன்று. நம்முடைய உடல், புலன், உள்ளம் இவைகளுக்கு அச்செய்கையினுல் உண்டாகும் பயிற்சிப் பயன் இரண்டாவது. மூன்ருவதாக, உள்ளத்தினுள் இருக்கும் ஆன்மாவுக்கு அதனுல் உண்டாகும் முன்னேற்றம் அல்லது பிற்போக்கு. செய்யும் செயலைப் போலவே எண்ணும் எண்ணங்களும், பக்தியும், பிரார்த்தனையும், பச்சாத்தாபமும், இவை அனைத்துக்கும் இயற்கை நியதிப்படி இந்த மூன்றுவிதமான விளைவுகள் உண்டாகும். இந்த மூன்று விளைவுகளும் நல்ல விளைவாக இருக்கலாம் அல்லது நஷ்ட விளைவாக இருக்கலாம். அது செயலின் தன்மையைப் பொறுத்தது.

முன் ஜென்மங்களில் செய்த கருமங்களினுலும் கொண்ட பற்றுக்களினுலும் நாம் சில சுபாவ குணங்களுடன் பிறக்கிருேம். இந்தச் சுபாவங்களை முழுதும் அடக்கி விடலாம் என்று எண்ணித் துறவியாகப் போவதில் பயன்பெற மாட்டோம். பக்குவமடையாமல் துறவியாவது வெறும் வேஷமாய் முடியும்.

ஒருவன் பழ வினைகளினின்று விடுதலை அடைவது, அல்லது முன்னிருந்த பந்தத்துக்கு இன்னும் கூடச் சேர்த்து அதிகமான பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளுவது, இது அவன் எப்படி நடந்து கொள்ளுகிருனே, அதைப் பொறுத்திருக்கிறது. ஆனுல், சுபாவ குணங்களை வென்று விடுதலைக்கு வேண்டிய முயற்சி

செய்யும் சுதந்திரமும் சக்தியும் ஜீவனுக்கு உண்டு.

ஐயமுண்டு பயமில்லை, மனமே,
பயனுண்டு பக்தியினாலே,
புயமுண்டு குன்றத்தைப் போலே,
மதியுண்டு செல்வங்கள் சேர்க்கும்,
விதியுண்டு, தொழிலுக்கு விளைவுண்டு.
அலைபட்ட கடலுக்கு மேலே,—சக்தி
அருளென்னும் தோணியினாலே
கரையுற்றுத் துயரற்று விடுபட்டு
ஐயமுண்டு பயமில்லை, மனமே!''

என்று பாரதியார், கரும நியதியினால் ஏற்பட்டிருக்கும் ஆத்ம சுதந்திரத்தை எடுத்துக் காட்டிப் பாடினார்.

உபதேசமுறை வேறுபாடுகள்

உடலும், ஆத்மாவும், ஆத்மாவுக்கு ஆத்மாவான பரமாத்மாவும் ஆகிய மூன்று பொருள்களின் பரஸ்பர சம்பந்தம் என்ன என்பதை உபதேசிக்கும் போது, மூன்றும் பொருளான பரமாத்மாவின் இலக்கணங்கள் மாயையில் கிடக்கும் நம்முடைய அறிவுக்குப் பூரணமாக எட்டாதபடியினால், ஆசாரியர்கள் பல வேறு உபதேச முறைகளைக் கையாள்கிறார்கள்.

உடலுக்கு உடல் தன்மையைத் தருவது ஆத்மா. ஆத்மாவுக்கு ஆத்மத் தன்மையைத் தருவது பரமாத்மா, உடலில் அதன் உயிரைத்தாங்கி நிற்பது ஆத்மா; ஜீவாத்மாவின் ஒப்பற்ற திவ்விய சொரூபத்தைத் தாங்கி நிற்பது பரமாத்மா. ஜீவலோகத்தில் உடலும் உயிரும் சேர்ந்து சுகமாகவும் ஆனந்தமாகவும் ஒன்றாய் இருப்பது போல், ஜீவாத்மாக்கள் தம் உயிராகிய பரமாத்மாவுடன் யாதொரு குறைவும் அறியாமையும் வேற்றுமையுமின்றி ஒன்றாகிச் சுகமாகவும் ஆனந்தமாகவும் இருப்பது மோக்ஷம். இவ்வாறு பரமாத்மாவுடன் ஒன்று சேர, சீலமும் அடக்கமும் பக்தியும் வேண்டும். இது சில ஆசாரியர்களின் விளக்கம்.

பரமாத்மாவின் நிழலே ஜீவாத்மா. அறியாமையால் நிழல் வேறு, பொருள் வேறு என்கிற உணர்ச்சி உண்டாயிருக்கிறது. ஆசை, பற்று, கோபம், துவேஷம் இவைகளால் இந்த வேற்றுமை உணர்ச்சி பெருகிக் கொண்டே போகிறது. அறிவு உண்டானால் இரண்டும் ஒன்றாகிவிடும். சூரியனும் தண்ணீரில் காணும் சூரிய பிம்பங்களும் போல் வேற்றுமை. தண்ணீரை எடுத்து விட்டால் சாயைகள் இல்லை. பிம்பம் சூரியனுடன் ஒன்று பட்டுப் போகிறது. அவ்வாறே ஜீவாத்மாக்களான பிம்பங்கள் பரமாத்மாவுடன் ஒன்று பட்டுப்போகும். இதுவே விடுதலை. இதற்கு வேண்டிய பூரண அறிவை அடைய, சீலமும், பக்தியும், அடக்கமும், அமைதியும் வேண்டும். புலன்கள் அவ்வளவும் இரவில் தூங்கும் போது எவ்வாறு உயிரில் அடங்கி முற்றிலும் மறைந்து போகின்றனவோ அவ்வாறு, அறிவடைந்த ஜீவன்கள் பரம்பொருளில் அடங்கி ஒன்றுபட்டுப் போய் விடுகின்றன. இது சில ஆசாரியர்கள் விளக்கும் முறை.

இவ்வளவே துவைத அத்துவைத விசிஷ்டாத்துவைத சைவ சித்தாந்த முறைகளிலுள்ள விளக்க வேறுபாடுகள். இதனால் கலவரப்படவேண்டிய காரணமில்லை. விளக்க முறைகள் வேறுபட்டாலும் விடுதலைக்கு வழி என்று சொல்லப் பட்ட வேதாந்த வாழ்க்கை அனைத்திலும் ஒன்றே.

வேதாந்தியின் வாழ்க்கை

வேதாந்த உணர்வு அடைந்தவன் அதாவது 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள்' கண்டவனுடைய வாழ்க்கை எவ்வாறு இருக்கும்?

(1) தன் உள்ளத்திலும் சுற்றியுள்ள உலகத்திலுள்ள ஒவ்வொரு சேதன அசேதனப் பொருளிலும் பரம்பொருள் இருப்பதை எப்போதும் நினைவில் வைப்பான்.

(2) காமம், குரோதம், ஆசை என்ற வேகங்களுக்கு உள்ளத்தில் இடங் கொடுக்க மாட்டான்.

(3) பிறப்பினாலோ அல்லது சந்தர்ப்பத்தினாலோ அல்லது தான் அடைந்த ஸ்தானத்தின் பயனாகவோ சமுதாயத்தில் தனக்கு ஏற்பட்ட கடமைகளைச் சுயநலப் பற்றின்றிக் கண்ணும் கருத்துமாகக் குறைவின்றிச் செய்வான்.

(4) இந்திரியங்களைக் காத்து, வேலை, ஆகாரம், ஓய்வு, விளையாட்டு, தூக்கம், இவைகளில் நியமத்தோடு பரிசுத்த வாழ்க்கை நடத்துவான்.

(5) கஷ்டங்களைக் கண்டு மனம் கலங்காமல் துயரம் மகிழ்ச்சி எது வரினும் தைரியமும் அமைதியும் இழக்காமல் இருப்பான்.

வேத வாழ்வு ஏன்?

இந்த அட்டவணை எனக்கு என்ன பயன்படும். இவையெல்லாம் ஞானிகளுக்குத்தான் சாத்தியம் என்று நினைக்க வேண்டாம்.


"இந்த முறையில் எடுத்த சிறு முயற்சிக்கும் நல்ல பயனுண்டாகும். நஷ்டம் கிடையாது. பத்தியம் தவறினால் மருந்தானது தீமையே விளைவிக்கும் என்கிற வைத்திய சாஸ்திர நியதியைப் போல் அல்ல. குற்றங் குறைகள் ஏற்பட்டதனால் அபாயம் ஏதும் இல்லை. இந்தத் தருமத்தில் சிறிது நடத்தினாலும் நன்மை உண்டாகும்" என்பது வேதாந்தத்தைப் பற்றிய சாத்திர உறுதி.

'மறுமைக்கு நல்லதாகும் என்பதில் ஒருவனுக்கு என்ன ஊக்கம் பிறக்கும்? அடுத்த ஜென்மத்தில் பழைய நினைவுகள் ஒன்றுமில்லாமல் அல்லவோ நாம் பிறப்போம்? முன் ஜென்மத்து விஷயங்கள் இப்போது நினைவில்லை. இந்த ஜென்மத்து நிகழ்ச்சிகளின் நினைவு அடுத்த ஜென்மத்தில் இருக்கப் போவதில்லை. ஆகவே, நன்மை செய்தால் என்ன, தீமை செய்தால் என்ன? தற்கால இன்பத்தைத் தேடிச் சுகமாக வாழ்வோமே! அடுத்த பிறவியில் நான் பிறந்தால், அப்போது அது வேறு மனிதன். அவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நினைவு இருந்தாலல்லவோ அவனும் நானும் ஒன்று? அவனுக்காக நான் ஏன் சிரமப்பட வேண்டும்? மரணத்தோடு இந்த வாழ்க்கையின் நினைவுகள் முடிவு அடையுமல்லவா?' இவ்வாறெல்லாம் ஆட்சேபிக்கலாம்.


இந்த ஆட்சேபணையில் உண்மையில்லை. சுயநலமும் தற்கால இன்பமும் மனிதனுக்குத் திருப்தி தருவதேயில்லை. எல்லாரும் தருமத்தை விட்டு விட்டால் உலகம் வரவரக் கெட்டுப்போய்ப் பாழாகி விடும். இதைப் பற்றிச் சந்தேகமில்லை. ஆனால் மனிதர்களின் போக்கு அவ்வாறில்லை. ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் ஊரின் நன்மையைக் கருதிப் பாடுபடுகிறார்கள். தாங்கள் ஒரு நாளும் பாராத தங்கள் ஊரைச் சேர்ந்தவர்களின் நன்மைக்காகத் தங்கள் சுக போகங்களை மக்கள் குறைத்துக் கொள்வதைப் பார்க்கிறோம். ஊர் எக்கேடு கெட்டால் என்ன என்று இருப்பதில்லை. அவ்வாறே நாட்டுக்கும் தேசத்துக்கும் சுகமுண்டாக்கக் கருதி, சுயநலத்தை இழந்து மக்கள் கஷ்டப்படுவதையும் பார்க்கிறோம். சாலையிலுள்ள மரங்களின் நிழலை அனுபவிக்கப் போகும் ஜனங்கள் யாரோ நாம் காண்பதில்லை. ஆனாலும் வருங்காலத்து மக்களுக்கு நிழல் கொடுக்க, இப்போது செடிகளை நட்டு வளர்க்கிறோம். இந்த விசால புத்தியை இன்னும் ஒரு படி பெருக்கி, உலகத்தின் நன்மையையும் வருங்கால சுகத்தையும் உத்தேசித்து, நம்முடைய முன்னோர் கண்ட உண்மையை உணர்ந்து, மனித ஜாதி உயர் நிலையும் உயர்ந்த குணங்களும் அடைய வேண்டுமானால் இதுவே வழி. பாவங்கள் உலகத்தில் வளராதபடி அனைவரும் வேத வாழ்க்கை நடத்தித் தங்கள் ஆத்மாக்களை இந்த ஜென்மத்தில் உயர்த்திக்கொள்ள வேண்டும். வருங்கால உலகத்தின் நன்மை இந்த ஜென்மத்தில் நம் கையில் இருக்கிறது. இந்தப் பொறுப்பை உணர்ந்து நடப்பதே ஞானம்.

ஒப்புரவு ஊரைக் காக்கும். அரசும் தேச பக்தியும் நாட்டைக் காக்கும். வேதாந்தம் உலகத்தைக் காக்கும்.

ஓம்



அமுல் பால் தயாரிப்புக்களில் எல்லா நல்ல அம்சங்களும் பொருந்தியிருக்கின்றன... உதாரணமாக, கால்நடைப் பராமரிப்பைப்பற்றி எடுத்துக்கொள்ளுங்கள்...,





ஆடை நிறைந்த அமுல் கண்டென்ஸ்டு மில்க்
உங்கள் சுவைக்கேற்ப இனிமையாக்கப் பெற்றது. பாயசங்கள் தயாரிக்க மிகவும் சிறந்தது.



புதிய சுத்தமான பாலும் தரத்தில் குறைந்திருக்கக்கூடும். அதன் சிறப்பு பெரும்பாலும் அதைக் கொடுக்கும் பிராணிகளின் ஆரோக்கியம், அவற்றின் தீவனம் முதலியவற்றைப் பொருத்திருக்கிறது. பச்சைப் பசும்புல், தரமான பருத்தி விதை இவைதான் பாலைச் சத்துள்ளதாகச் செய்ய முடியும். பாலிலுள்ள வெண்ணெய்க் கொழுப்புச் சத்தை இவை அதிகரிக்கச் செய்கின்றன. யூனியனின் அங்கத்தினர்களான விவசாயிகளுக்கு யூனியனால் நியாய விலையில் கொடுக்கப்படும் பசும் புல்லும், நல்ல பருத்திவிதைகளும் வருடம் முழுவதும் கால்நடைகளின் தீவனமாக உபயோகப்படுகிறது. தவிர அவர்களுடைய கால்நடைகள் யூனியனின் வண்டிகளில்-அமைந்த மருத்துவசாலைகளின் மூலம் இலவச சிகிச்சையைப் பெறுகின்றன. கால்நடைகளின் தரத்தை உயர்த்த அவற்றிற்கு செயற்கை முறை கருத்தரிக்கும் வசதிகளும் அளிக்கப்படுகின்றன. வெண்ணெய்க்-கொழுப்புச்-சத்து நிறைந்த, புதிய சுத்தமான பால் மட்டுமேதான் வருடம் முழுவதும் அமுல் பால் தயாரிப்புக்களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. அதனால்தான், அமுல் பால் தயாரிப்புகள் எல்லாம் சத்துள்ளவை, புஷ்டியானவை, ஆரோக்கியத்திற்கு உகந்தவை.



அமுல் வெண்ணெய்
வெளிநாட்டுப் பால்பண்ணை நிபுணர்களால் உலகிலேயே சிறந்த வெண்ணெய்க்கு சமானமானது என்று மதிப்பிடப்பட்டிருப்பது.



சத்துள்ள அமுல் பால் பவுடர்
ஆரோக்கியத்துக்குகந்த, சுத்தமான பால் பவுடர். அதன் புதுமை கெடாமல் பாதுகாக்க நைட்ரஜன் நிறைந்த டின்களில் அடைக்கப்பட்டிருக்கிறது.



அமுல் நெய்
மத்திய உணவு விவசாய அமைச்சகத்தினரால் சிறந்த நெய்யென்று தங்கப் பதக்கம் அளிக்கப்பெற்றது.

அமுல்—சிறந்த தரத்தின், பரிசுத்தத்தன்மையின் சின்னம்.

கெய்ரா டிஸ்டிரிக்ட் கோ-ஆபரேடிவ் மில்க் புரொடியூஸர்ஸ் யூனியன் லிமிடெட்,
ஆனந்து. (வெஸ்டர்ன் ரெயில்வே)

PSKMP-24C/59



டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER
Kumari Radha

பொன்னான சொப்பனம்

கோமதி சுவாமிநாதன்

[பிரபல திரைப்பட நடிகர் திருமலைசாமியின் பங்களாவில் வரவேற்பு அறை. திருமலைசாமியும் பிரக்யாதி பெற்ற படத் தயாரிப்பாளர் பச்சையப்பனும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பச்சையப்பனின் காரியதரிசி கள்ளபிரான் சற்றுத் தள்ளிப் பின்னால் உட்கார்ந்து கொண்டிருக்கிறான்.]

பச்சையப்பன் (உற்சாகக் குறைவுடன்): அப்படீன்னு உங்க தீர்மானம்...

திருமலைசாமி : முடிவானதுதான். அதை இனிமேல் மாற்றுவது அத்தனை உசிதமில்லை. என் சார்பிலும் பொதுமக்கள் சார்பிலும் தான் சொல்லுகிறேன். உங்களையும் என்னையும் வாழ வைக்கிறது அவங்கதானே?

பச்சையப்பன் : நான் ஒப்புக் கொள்ளத் தயாராயில்லே! இன்னும் பதினைந்து வருட காலத்துக்கு நீங்க மார்க்கெட்டிலே அசைக்க முடியாத 'ஹீரோ'! ஒரு பயல் உங்களுக்குப் போட்டியாகத் தலைதூக்க முடியாது!

திருமலைசாமி : பேஷாய்த் தூக்கலாம்"! புதிதாக வருபவர்களுக்கெல்லாம் நல்ல கறுப்புத் தலை! கட்டுவிடாத பாடி! என் தலை நரைத்து ரொம்ப நாளாயிற்று. அதற்காவது சாயம் பூசி ஊரை ஏமாற்றலாம்! ஆனால் என் தொந்தியை என்ன செய்வது? கார் பம்பர்மாதிரி முன்னாலே வந்து நிற்குதே!

பச்சையப்பன் : உங்களுக்கு மன நிலை சரியில்லே. ஏதோ ஆத்ம விசாரத்திலே மூழ்கியிருக்கிறபோது நான் வந்து தொலைத்திருக்கிறேன். சாவகாசமாக நான் மறுபடியும் வருகிறேன். உங்களை நம்பித்தான் இந்தப் பிரும்மாண்டமான தயாரிப்பில் தலையை விட்டிருக்கிறேன். காதல் மன்னன் திருமலைசாமியும் கொஞ்சும் மொழி கோமளா தேவியும் புகழையும் பணத்தையும் குவிக்கப் போவதாகக் கனவு கண்டு கொண்டிருக்கிறேன். நீங்க என்னடான்னு காலை வாரிவிடப் பார்க்கிறீங்க!

திருமலைசாமி : ஐயோ! ஐயோ! கொல்றீங்களே! என்னைப் பீரங்கியை வைச்சுக் கட்டாலும் இனிமேல் என் முகத்திலே காதல் உணர்ச்சி !வெல்லாம் உருப்படியாக வராது. நாற்பத்தி ஏழு படத்திலே என் நாக்கு. 'கண்ணே! மூக்கே! காதல் கனி ரசமே!'ன்னு ஆடி ஆடி அதற்குப் பக்கவாதமே வந்தாச்சு! எனக்கு வயசும் நாற்பத்தி எட்டாச்சு! நான் கதாநாயகி முகத்தைக் காதல் பொங்கப் பார்க்கணும்னு எந்த டைரக்டராலேயும் முயற்சி செய்ய முடியாது. மிருகக் காட்சிச் சாலையிலே கம்பி வழியாகப் புலி சிங்கத்தைப் பார்க்கிறமாதிரிதான் பார்ப்பேன்!

பச்சையப்பன் : நீங்க எப்படி வேணும்னாலும் பாருங்க! அதை ரசிக்க நான் பத்து லட்சம் பேர்கள் வைத்திருக்கிறேன்.

திருமலைசாமி : என் பகுதியை நானும் ரசித்தால்தான் படத்துக்கு வெற்றி! இந்த பாருங்க பச்சையப்பன்! போகாத ஊருக்கு வழி தேடாதீங்க! உங்க கதையிலே ஏதாவது அப்பா வேஷம், தாத்தா வேஷம் இருந்தால் கொடுங்க. சந்தோஷமா நடிக்கிறேன்...நீங்க நல்ல புது முகமாகப் பார்த்து இளவயசு கதாநாயகனைப் போடறதுதான் நல்லது. உள்ளே டெலிபோனிலே யாரோ கூப்பிடறாங்க!...நீங்க போய் வறீங்களா?

[பச்சையப்பனும் கள்ளபிரானும் எழுந்திருக்கிறார்கள். திருமலைசாமி உள்ளே போகிறார்.]

2

சற்று நேரம் கழித்து. மற்றொரு பிரபல நடிகர் குமாரன் பங்களாவில் முன் ஹால். பச்சையப்பனும் கள்ளபிரானும் வருகிறார்கள். வேலைக்காரன் அவர்களை வரவேற்கிறான். குமாரன் பட்டை பட்டையாக விபூதியுடனும் ருத்திராக்ஷ மாலையுடனும் உள்ளிருந்து வருகிறான்.

குமாரன் : வாங்க! வாங்க! புரொடியூசர் சார்! வீட்டிலே ஏதும் கல்யாணமா? அழைக்க வந்திருக்கீங்களா? உட்காருங்க.

பச்சையப்பன் : (உட்கார்ந்து கொண்டே) எல்லாம் நம்ப புதுப் படக் கல்யாணம்தான். என் கண்களையே நம்ப முடியவில்லையே!... உங்களை இந்தக் கோலத்திலே திரைப்படத்திலேகூடப் பார்த்ததில்லையே!...

குமாரன் : உலகத்திலே தினம் எத்தனையோ மாறுதல்கள், அதிசயங்கள் நடக்கவில்லையா? அது மாதிரித்தான். இது ஒன்றும் பிரமாதமில்லை! இப்போது நான் பூஜை பண்ணாமல் காப்பியைக்கூடத் தொடுவதில்லை.

[வேலைக்காரன் மூன்று குவளைகளில் காப்பியைக் கொண்டு வருகிறான்.]

கள்ளபிரான் : (மெதுவாகப் பச்சையப்பனிடம்) நாம் வந்த வேளை நல்லதுதான். உபசாரமாகப் பூஜை புனஸ்காரத்தைப் பற்றி இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு வந்த விஷயத்தை ஆரம்பியுங்கள்.

குமாரன் : உங்க காரியதரிசி என்ன ரகசியம் பேசுகிறார்?

பச்சையப்பன் : ஒன்றுமில்லை. இந்தக் கோலத்தில் உங்களைப் பார்ப்பது கண் குளிர இருக்கிறது. எடுக்கப் போற படத்திலே கனவுக் காட்சியாகவாவது இப்படி இரண்டு சீன் போடவேண்டும் என்கிறார்!



சுகுமாரன் : நல்ல யோசனைதான்! கதை வசனமெல்லாம் தயாரா? என்ன கதை? நீங்க சாதாரணமாக எடுக்க மாட்டீங்களே?

பச்சையப்பன் : அருமையான சமூகக் கதை! உங்களுக்கு ஜோடியாகக் கந்தர்வா தேவியை 'புக்' பண்ணப் போகிறேன்! இப்போது 'மார்க்கெட்டி'லே அந்த ஜோடிக்குத்தான் மவுசு. ஜனங்கள் உங்க ரெண்டு பேரையும் பார்த்தவுடனே கிறங்கிவிடுவாங்க!

சுகுமாரன் : கதை புதிசாக இருக்கலாம்! ஆனால் நாங்க பழசு! காதல் பழசு...நீங்க ஏழு இடத்திலே 'டூயட்'பாடச்சொல்லுவீங்க. படம் பார்க்கறவங்க கொட்டகை யோடு 'டூ' விட்டுட்டுப் பாதியிலே எழுந்துபோயிடுவாங்க! ...புதுமை வேணுமா? நான் சொல்றேன்.

பச்சையப்பன் : சொல்லுங்க! கதையை மாத்துகிறேன்.

சுகுமாரன் : மாற்றவே வேண்டாம்! தூக்கி அப்பாலே வையுங்க! அறுபத்தி மூன்று நாயன்மார்கள் கதையிலே மூணு நாயன் மார்கள் கதை பொறுக்கி வைத்திருக்கிறேன். கதாநாயகிக்காக நீங்கள் ஆள் பார்க்கவே வேண்டாம். பக்தியும் பாட்டும் கரைபுரண்டு ஓடும். ஜனங்களுக்கு ஒரு மாறுபட்ட படம் பார்க்க வாய்ப்பு!...

பச்சையப்பன் : நீங்களா பேசறீங்க?

சுகுமாரன் : தீர்மானமாகவே பேசறேன். உங்க கண்ட்ராக்ட்லே கையெழுத்து போட்டால் அது எனக்கு நாலாவது கண்ட்ராக்ட். முதலாவது அந்தப் படத்துக்குப் பணம் வாங்குவதில்லை என்று ஒரு விரதம். இரண்டாவது சாதாரணமான மட்ட ரகக் காதல் படமாக அது இருக்கக் கூடாது என்பது மற்றொரு விரதம்.

(கிளம்பி உள்ளே போகிறான்)

பச்சையப்பன் : (கன்னபிரானிடம்) என்னப்பா! குதிரை தூக்கிப் போட்டதுமில்லாமல் குழியையும் பறிக்குது! (போகிறார்கள்)

3

[சினிமா வானில் சுடர்விட்டு ஒளி வீசும் நட்சத்திர நடிகை கோமளா தேவியின் பங்களா. கோமளாதேவி எங்கோ வெளியே கிளம்பத் தயாராக நடைக்கு வரவும், பச்சையப்பன் வெளியே யிருந்து உள்ளே வருகிறான்.]

கோமளாதேவி : வணக்கம்! வாங்க!

பச்சையப்பன் : வணக்கம்! நீங்க எங்கேயோ கிளம்புகிறாப் போலிருக்கு!...

கோமளாதேவி : குஸ்திப் பந்தயம் பார்க்கக் கிளம்பினேன். நீங்களும் வருகிறீர்களா?

பச்சையப்பன் : ஐயையோ!... நீங்க அங்கேயெல்லாம் போகலாமா? வரவங்க குஸ்தியைப் பார்ப்பாங்களா? உங்களைப் பார்ப்பாங்களா? ஒரு வார்த்தை சொல்லுங்க! நான் அத்தனை குஸ்தியையும் படம் பிடித்துக் கொண்டு வந்து பங்களாவிலே போட்டுக் காண்பிக்கறேன்.

கோமளாதேவி : இனிமேல் நான் உங்கள் தொழிலே எப்படிப் பாதிக்க முடியும்? நான் ஒரு மாஜி நட்சத்திரம். காமிராவுக்கும் 'டேக்கு'க்கும் கட்டோடு முழுக்குப் போட்டாச்சு. சினிமா உலகத்திலிருந்தே நான் 'கட்! கட்!'....எனக்கு நானாக 'ரிட்டயர்'ரானவுதில் பெருமை. நாலு வருஷம் போனால் நீங்க என்னைக் கட்டாயம் ரிட்டயராக்கி விடுவீங்க!

[காட்சி மாற்றம்]

கன்னபிரான் : (நாற்காலியில் சாய்ந்தவாறு தூங்கும் பச்சையப்பனிடம்) சார்! டெலிபோனில் திருமலைசாமி கூப்பிடுகிறார்.

பச்சையப்பன் : (திடுக்கிட்டு எழுந்து) திருமலைசாமியா! (போனைக் கையில் வாங்கிக் கொண்டு) நமஸ்காரமுங்க! அவசர வேலையாக வெளியே போயிட்டு இப்பத்தான் வந்தேன்! என்ன...கதையிலே ஹீரோவுக்குப் போர்ஷன் போதாதா? காதல் குறைவாக இருக்கா? அதற்கென்ன? கூட்டிக்கலாம்.... பிளாக்கிலே...ஹா! பயப்படலே! சாயங் காலம் வருகிறேன்! (போனை வைத்துவிட்டு) அட பாவி! கழுத்தை இல்ல நெருக்கறான்!

கன்னபிரான் : அவரு சம்மதிக்கிறதே அபூர்வம்! விடாதீங்க!

(மறுபடியும் போன் மணி அடிக்கிறது)

பச்சையப்பன்: மறுபடியும் என்ன உளறப் போகிறான். (போனைக் கையிலெடுத்து) யாரு? சுகுமாரனா! வணக்கம்! வணக்கமுங்க! என்ன சொல்றீங்க?...கதை ஒத்துக்கலியா? பூஜை சீனுக்கெல்லாம் பதிலா நாட்டிய சீனும், காதல் சீனும் வேணுமா? கடைசியிலே ஹீரோ சாகணுமா? பார்ப்போம்....(போனைக் கீழே வைத்துவிட்டு) இப்பவேதான் சாகட்டுமே! நானா கையைப் பிடிக்கிறேன்?

கன்னபிரான் : என்ன சொல்றாருங்க?

பச்சையப்பன் : சுரைக்காய்க்கு உப்பில்லே என்கிறான்! இவனுக்குக் கதை எழுத யாராலே முடியும்!...சே! சே!...

[மறுபடியும் போன் மணி அடிக்கிறது. பச்சையப்பன் கையில் எடுக்கிறார்.]

போன் குரல் : நமஸ்காரம். கோமளா தேவி பேசுகிறேன்.

பச்சையப்பன் : பேசுங்க! கேட்கிறேன்.

போன் குரல் : கதையிலே ஹீரோயினுக்கு! இருபத்தி ஐந்து வயசென்று போட்டிருக்கு. அதை இருபதாக மாற்றுங்க.

பச்சையப்பன் : செய்துடலாம். அப்புறம்?

போன் குரல் : டிரஸ் எல்லாம் ரொம்பப் புதுமையாக இருக்கணும். என்னைக் கலந்து கொண்டு வாங்குங்க!...

பச்சையப்பன் : அப்புறம்?

போன் குரல் : எனக்கு மூணு பாட்டும் நாலு டான்ஸும் போட்டிருக்கீங்க. அதை இரண்டு பாட்டும் எட்டு டான்ஸுமா....

[பச்சையப்பன் 'டக்' என்று போனைக் கீழே வைக்கிறார்.]

பச்சையப்பன் : கன்னபிரான்! வாசலில் என்ன போர்டு மாட்டியிருக்கிறது?

கன்னபிரான் : (பிரமிப்புடன்) 'பச்சையப்பா புரொடக்ஷன்ஸ்' என்கிற போர்டு.

பச்சையப்பன் : போர்டைக் கழற்றி உள்ளே போடு! நான் இந்தத் தொழிலுக்கே முழுக்குப் போட்டுட்டேன்! முடிவான தீர்மானம்! நான் ஒரு மாஜி 'புரொடியூசர்'. படமெடுத்த பச்சையப்ப நாயனார். நான் சற்று முன் கண்ட கனவை நினைத்தே காலத்தைக் கழித்து விடுகிறேன்!

[கன்னபிரான் சிலையாக நிற்கிறான்.]

முப்பத்தைந்தாம் அத்தியாயம்

ரோகிணியின் கண்ணீர்

இளங்கோவைத் தூக்கிக் கொண்டு சென்ற இராஜேந்திரர், எதிரில் ஓடி வந்து கொண்டிருந்த ரோகிணியைக் கண்டவுடன், எங்கே அவள் வந்து இளங்கோவின்மீது விழுந்துவிடப் போகிறாளோ என்று ஒரு கணம் துணுக்குற்றார். அதற்குள்ளாக, ரோகிணிக்குப் பின்னால் மகிந்தர் வருவது தெரிந்தது. அவர் இளங்கோவையோ இராஜேந்திரரையோ ஏறிட்டுக்கூடப் பார்க்காமல்



தமது புதல்வியின் கரத்தைப் பற்றினார். அவளைச் சுட்டெரித்து விடுவது போல் ஒரு பார்வை பார்த்தார். ரோகிணி பெட்டிப் பாம்பைப்போல் அடங்கி மௌனமாக அவர் பின்னே சென்றாள்.

ஒரு விநாடிக்குப் பின் அவள் தன் தந்தையின் பிடியிலிருந்தவாறே திரும்பிப் பார்த்தபோது, இளங்கோ நினைவு தடுமாறிய நிலையிலும் அவளையே ஏக்கத்துடன் நோக்கிய வண்ணம் இருந்தான். அடுத்த விநாடிக்குள் ரோகிணியும் மகிந்தரும் கூட்டத்துக்குள் மறைந்து சென்று விட்டார்கள்.

சக்கரவர்த்தி தங்கியிருந்த பெரிய மாளிகையின் ஓர் அறைக்குள் இளங்கோவைக் கிடத்தினார்கள். வைத்தியர் வந்து நாடியைப் பார்த்துவிட்டு நம்பிக்கை தெரிவித்தார். அபாயமில்லையென்றும் பிழைத்து விடுவானென்றும் கூறினார். மூலிகைகள் அரைத்து வைத்துக் கட்டுவதிலும், மருந்து கொடுப்பதிலும், அவனுக்குச் சிகிச்சைகள் செய்வதிலுமாக அந்த இரவுப் பொழுது கழிந்தது.

அவன் அயர்ந்து உறங்கத் தொடங்கிய பின்னர் சக்கரவர்த்தியும் வல்லவரையரும் அந்த அறையை விட்டு வெளியே வந்தார்கள். மாளிகையைச் சுற்றிலும் நின்று கொண்டிருந்தவர்களிடம் விவரம் கூறி அவர்களைக் கலைந்து போகச் சொன்னார் சக்கரவர்த்தி. வல்லவரையர் மாளிகையிலிருந்து புறப்பட்டு அரண்மனையின் காவல் ஏற்பாடுகளைக் கண்காணிக்கச் சென்றார்.


மகிந்தருக்குக் கீர்த்தி எழுதிய ஓலை மாமன்னரிடம் கிடைத்தவுடன் பற்பல ஏற்பாடுகள் மளமளவென்று அரண்மனைக்குள் நடக்கத் தொடங்கின. அதில் முதல் ஏற்பாடாகக் காவலர்களின் எண்ணிக்கையை நான்கு மடங்காகப் பெருக்கினார்கள். மகிந்தரின் நடமாட்டத்தைக் கவனிக்க ஒற்றர்கள் நியமிக்கப்பட்டார்கள். எல்லோரும் விழிப்புடன் இருக்கிறார்களா என்பதை நேரில் சென்று கவனித்துத் திரும்பினார் வல்லவரையர்.

ரோகிணியைப் பரபரப்போடு இழுத்துக்கொண்டு சென்ற மகிந்தர் அவளைக் கடிந்து கொள்ளவுமில்லை; அவளிடம் சினம் காட்டவுமில்லை.

"ரோகிணி! எல்லோரையும் போல் அவனைப் போய் நீ வேடிக்கை பார்க்கும் நேரமா இது? அவன் எப்படிப் போனால் நமக்கென்ன? குழப்பம் நிறைந்திருக்கும் இந்தச் சமயத்தை நாம் விட்டுவிடக் கூடாது. நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு, கூட்டத்தோடு கூட்டமாய்க் கலந்து, நாம் வெளியே போய்ச்சேர வேண்டும். உன் அம்மாவையும் சித்தமாக இருக்கச் சொல்" என்றார்.

ரோகிணி தன் தாயாரிடம் போவதற்கு முன்னால் அங்கு சுந்தரலன் வந்து சேர்ந்தான். முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டே அவன் உதட்டைப் பிதுக்கினான். "அரசே! கட்டுக்காவல் பலமாக இருக்கிறது. கற்சிலைகள்போல் நிற்கும் அந்தக் கிராதகர்கள் தங்கள் விழிகளாலேயே நம்மைச் சுட்டுப் பொசுக்கி விடுவார்கள்போலிருக்கிறது."

"காவலர்கள்தான் அந்தக் கொடும்பாவியைச் சுற்றிக் கவலையுடன் நின்று கொண்டிருக்கிறார்களே!"


வேங்கையின்
மைந்தன்
அகிலன்

"அவர்கள் பகலில் பணி செய்துவிட்டு ஓய்வில் இருப்பவர்கள். இரவு நேரத்து ஆந்தைகள் இருந்த இடங்களை விட்டு அசையவில்லை. பாகத்துக்கு ஒருவன் வீதம் இந்த அரண்மனையை வளைத்துக் கொண்டிருக்கிறார்கள்."

கந்துலனை அங்கு நிறுத்திவிட்டு, மகிந்தர் தாமே வெளியில் வந்து கவனித்தார். மாமன்னரது மாளிகைக்குச் செல்பவர் போல் போக்குக் காட்டி நடக்கலானார். இதைக் கண்ணுற்ற காவற்படைத் தலைவன் அவரை அணுகிப் பணிவோடு வணங்கினான். திரும்பினார், மகிந்தர்.

"தங்களைப் பாதுகாக்கும்படி எங்களைச் சக்கரவர்த்திகள் பணித்திருக்கிறார்கள். துணையின்றித் தாங்கள் இருளில் நடமாடுவதால் தங்களுக்கு ஏதும் அபாயம் நேரலாம். தாங்கள் கட்டளையிட்டால் வீரர்கள் சிலரை உடன் அனுப்பி வைக்கிறேன்" என்றான் காவற் தலைவன்.

அவனிடம் என்ன மறுமொழி கூறுவதென்று மகிந்தருக்குத் தோன்றவில்லை. பரிதாபமாக அவனைப் பார்த்து விழித்து விட்டு, "நன்றி! எனக்கு அபாயமும் வர வேண்டாம்; என்னை யாரும் காக்கவும் வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டே அரண்மனைக்குள் புகுந்தார்.

"ரோகிணி!" என்று அன்போடு தமது புதல்வியைத் தழுவியவாறு, "இனி நாம் இங்கிருந்து தப்ப முடியாது; இந்த ஜன்மம் முழுவதுமே முயன்றாலும் முடியவே முடியாது!" என்று கலக்கத்துடன் கூறினார். "வா! நிம்மதியாகப் போய் உறங்கவாவது செய்வோம்."

மறுநாள் பொழுது புலர்ந்து, முற்பகல் பத்து நாழிகை ஆயிற்று. இரவு முழுவதும் மாமன்னரும் வல்லவரையரும் கண்ணுறங்கவில்லை. இளங்கோவை உறங்கவிட்டு வந்த பிறகு, அரசியல் ஆலோசனைகளில் அவர்கள் ஈடுபடலானார்கள். காலையில் குளித்து விட்டு, வல்லவரையரைத் தனியாக மகிந்தரிடம் அனுப்பி வைத்தார் மாமன்னர். தாமும் வந்து பேச்சில் பிறகு கலந்து கொள்வதாகக் கூறினார்.

வல்லவரையர் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் சக்கரவர்த்திக்கு இளங்கோவின் நினைவு வந்தது. அவன் படுத்திருந்த அறையை நோக்கி நடந்தார். அறைக்குள்ளிருந்து ஏதோ பேச்சுக் குரல்கள் கேட்கவே, காவலாளியை உற்று நோக்கினார் இராஜேந்திரர்.

"ரோகணத்து இளவரசி பார்க்க வேண்டுமென்றார்கள், அதனால் அநுமதித்தேன்" என்றான் காவலன்.

அவனை அங்கிருந்து அனுப்பி விட்டுக் கதவோரமாகத் தயங்கி நின்றார் மாமன்னர். கதவின் இடுக்கு வழியே உள்ளே இருப்பவர்கள் தெரிந்தார்கள்; பேச்சுக் குரலும் கேட்டது. இளங்கோவின் அருகில் ரோகிணி நின்று கொண்டிருந்தாள். இளங்கோ அனுபவித்துக் கொண்டிருந்த வேதனை ரோகிணியின் முகத்தில் பிரதிபலித்தது. அவனோ ஒரு துன்பமும் இல்லாதவன் போல் ரோகிணியைப் பார்த்துச் சிரித்தான்.

"ரோகிணி!" இளங்கோவின் இதழ்கள் அசைந்தன. "நான் உனக்கு இருவகையில் கடமைப் பட்டிருக்கிறேன். முதலில் நீ என் உயிரைக் காப்பாற்றினாய். உன் தந்தையார் பறித்துக்கொண்டு விட்ட உயிரை அவரிடமிருந்து கவர்ந்து கொண்டு வந்தாய். அடுத்தாற்போல் என் உயிருக்கும் மேலான மணிமுடியை எனக்குக் கொடுத்தாய்.—ஆம், நீயே அதைக் கொடுத்து விட்டதாகத்தான் நான் நினைக்கிறேன்."

"பேசாதீர்கள்; உங்களை நான் பார்க்க வந்தேனே தவிர, உங்கள் பேச்சைக் கேட்க வரவில்லை" என்றாள் ரோகிணி.

அதை அவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. "ரோகிணி! உன்னிடம் நான் சிலசமயம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டிருக்கிறேன். உன்னைப் பலவகையில் துன்புறுத்தி யிருக்கிறேன். அவற்றுக்காக என்னை மன்னித்து விடு."

ரோகிணியின் கண்களில் நீர்வழிந்தது.

"என் உயிருக்காகக் கவலைப்படுகிறாயா?" என்றான் இளங்கோ. "இனி நான் பிழைத்தாலும் ஒன்றுதான்; பிழைக்காவிட்டாலும் ஒன்றுதான். என் கடமை தீர்ந்துவிட்டது. மணிமுடி கிடைத்து விட்டதல்லவா?"

"உங்கள் உயிருக்காக நான் கவலைப் படவில்லை" என்று வெடுக்கெனப் பதிலளித்தாள் ரோகிணி. "நீங்கள் பகை நாட்டைச் சேர்ந்தவர்கள். உங்களுக்காக நான் எதற்குக் கவலைப்பட வேண்டும்? நீங்கள் என்னை ஏமாற்றி விட்டீர்கள்; நான் ஏமாந்தேன்." ரோகிணியின் குரல் துக்கத்தால் தழுதழுத்தது.

இதைக் கேட்டு இளங்கோ அதிர்ச்சியுற்றதைப் போலவே, வெளியில் நின்று கொண்டிருந்த மாமன்னரும் அதிர்ச்சியுற்றார். மாமன்னரின் செவிகள் மேலும் கூர்மை பெற்றன.

"நானா ஏமாற்றினேன்?" என்று இளங்கோ பதறினான்.

"ஆமாம், மாறுவேடத்தில் என்னைப் பின்தொடர்ந்து எதற்காக மலையடிவாரத்துக்கு வந்தீர்கள்?" என்று கேட்டாள் ரோகிணி. "உங்களைக் காப்பாற்ற நினைத்து என் தந்தையாருக்கும் தாய் நாட்டுக்கும் துரோகம் செய்தேன். என்

தந்தையார் இப்போது புலிக்கூண்டில் அகப்பட்டவர்போல் உங்களிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார். எல்லாம் என்னால் வந்த வினை!''

"நன்றாக யோசித்துப்பார், ரோகிணி! நீ யாருக்கும் துரோகம் செய்யவில்லை. உன் தந்தையார் இங்கு வந்திருப்பதும் நன்மைக்குத்தான். காலங் காலமாகப் பகைமை பாராட்டி வந்த நம்முடைய நாடுகள் அதைத் தீர்த்துக் கொள்ளப் போகின்றன. இதுவா துரோகம்?''

அதை அவள் நம்பாதவள் போல் தலையசைத்தாள். இளங்கோவுக்கு எப்படி அவளை நம்பச் செய்வதென்றும் தோன்றவில்லை.

அவளுக்கு மன ஆறுதல் சொல்வதாக நினைத்துக் கொண்டு, " உன்னுடைய அன்பை நான் என்றுமே மறக்க மாட்டேன்; என் நன்றியை ஏற்றுக்கொள்'' என்றான் இளங்கோ.

எரிமலை வெடிப்பது போல் வெடித்தாள் ரோகிணி. "நான் உங்களிடம் அன்பு செலுத்தவும் இல்லை; நீங்கள் எனக்கு நன்றி செலுத்த வேண்டிய அவசியமும் இல்லை !''

இப்படிச் சொல்லிக் கண்களை உருட்டி விழித்து விட்டுத் திரும்பிப் போக முயன்றாள் ரோகிணி. வாயிலை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தாள்.

"ரோகிணி...ரோகிணி....ரோகிணி!''

இளங்கோ தன் வலியை மறந்து, இடது கரத்தைத் தலையணையில் ஊன்றிக் கொண்டு எழுந்திருக்க முயன்றான். வெளியில் நின்ற இராஜேந்திரர் பதறினார். இதற்குள் ரோகிணியே அவனிடம் திரும்பி வந்தாள்.

அவனை மெல்லத் தலையணையில் சாய வைத்து விட்டு, "நிம்மதியாக உறங்குங்கள்!'' என்று கட்டளையிடும் குரலில் கூறினாள். போர்வையை இழுத்து விட்டாள். தலையணைகளையும் நகர்த்தி விட்டாள். பிறகு, "நான் சொல்வது ஒன்றும் எனக்கே பிடிக்கவில்லை'' என்று முணுமுணுத்துக் கொண்டே திரும்பிப் போக முற்பட்டாள்.

மாமன்னர் நின்று கொண்டிருந்த வாயிலை அவள் அணுகியவுடன், அப்போதுதான் இளங்கோவைக் காண வருகிறவர்போல் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார் சக்கரவர்த்தி.

"யாரது, ரோகிணியா! வா, அம்மா! எங்கே இவ்வளவு அவசரமாய்த் திரும்புகிறாய்? போகலாம், வா!''

தலையைக் கவிழ்த்துக்கொண்டு தயங்கி நின்றாள் ரோகிணி. "இப்போதுதான் வந்தேன்...'' என்று தடுமாறினாள்.

" ஆமாம், ஆமாம், இப்போதுதான்... ரோகிணி...'' — வார்த்தைகளை மென்று விழுங்கினான் இளங்கோ.

"நானும் இப்போதுதான் வருகிறேன்'' என்று கூறித் தமக்குள் நகைத்துக் கொண்டார் மாமன்னர்.

பின்னர் ரோகிணியைப் பார்த்து, "ரோகிணி! இளங்கோ என்ன சொல்கிறான்? — உடல் நலம் குன்றியிருப்பவனிடம் உற்சாகமாகப் பேசுவதே ஒரு மருந்து. நீ அவன் நலத்தை விசாரித்தாயா? என்ன சொல்கிறான்?'' என்றார்.

ரோகிணி மறுமொழி கூறாமல் இளங்கோவைத் திரும்பிப் பார்த்தாள்.

"வலி மிகவும் குறைந்திருக்கிறது'' என்றான் இளங்கோ. ஆனால் உண்மையில் வலி அவனை அப்போது மென்று கொண்டுதானிருந்தது.

ரோகிணிக்கு மாமன்னர் அங்கு வந்த பிறகு அந்த இடத்தில் நிற்கப் பிடிக்கவில்லை. மீண்டும் மெதுவாக நழுவிச் செல்லத் துடித்தாள்.

"ரோகிணி! ஆண்களுக்குள் ஆயிரம் வேற்றுமை இருந்தாலும் பெண்கள் இரக்க சித்தமுள்ளவர்கள் என்பதை நீ நிரூபித்து விட்டாய். இளங்கோவை நீ வந்து பார்க்க விரும்பினால் உன்னை யாரும் இங்கே தடுக்க மாட்டார்கள். எப்போது வேண்டுமானாலும் நீ வந்து செல்லலாம்'' என்றார் இராஜேந்திரர்.

கண்களால் அவருக்கு நன்றி கூறி விட்டு, அதே கண்களால் இளங்கோவிடம் விடை பெற்றுக்கொண்டு, அவ்விடத்தை விட்டு விரைந்து சென்றாள் ரோகிணி.

இளங்கோவுக்கு அருகில் அமர்ந்து சிறுபொழுது உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார் சக்கரவர்த்தி. பேச்சோடு பேச்சாக அவன் கப்பகல்லகத்தை விட்டுச் சென்றதிலிருந்து நடந்த விஷயங்களையும் கேட்டுக் கொண்டார். பிறகு மன்னர் மகிந்தரைக் காண்பதற்காக அங்கிருந்து எழுந்து சென்றார்.

முப்பத்தாறும் அத்தியாயம்

எங்கும் புலிக்கொடி

மன்னர் மகிந்தரும் வல்லவரையர் வந்தியத்தேவரும் தனித்தமர்ந்து பேசிக் கொண்டிருந்த வேளையில், மாமன்னர் அங்கு வருவதாக வாயிற்காவலன் அவர்களிடம் வந்து செய்தி கூறினான். இதைக் கேள்வியுற்றவுடன் மகிந்தரின் முகம் வெளுத்தது. அதற்குள் இராஜேந்திரரே அங்கு வந்து சேர்ந்து விட்டார்.

மாமன்னருக்கு முகமன் கூறி மகிந்தர் அவரை வாய்ச்சொல்லால் வரவேற்ருரே தவிர, அவரது மனம் வரவேற்புக்குச் சித்தமாக இல்லை என்பதை அவர் முகம் காட்டியது. புன்னகை பூத்துக் கொண்டே சக்கரவர்த்தி மகிந்தரின் முகத்தில் தம் விழிகளைப் பாய்ச்சினுர். அந்தப் பார்வையைத் தாங்க முடியாமல் மகிந்தர் தவித்த தவிப்பு மாமன்னரை வியப்புறச் செய்தது.

காவலனைக் கண்டுவிட்ட கள்வனைப் போல் மாமன்னரைக் கண்டு மகிந்தர் ஏன் மிரள்கிருர்? 'நெஞ்சில் உரமற்ற கோழை! நேர்ப் பார்வைகூடப் பார்க்காமல் ஏன் தவிக்க வேண்டும்?' என்று நினைத்துக் கொண்டு, வல்லவரையர் பக்கம் திரும்பினுர் சக்கரவர்த்தி. உணர்ச்சியை உள்ளடக்கிய செப்புச் சிலையாகக் காணப்பட்டார் வந்தியத்தேவர்.

"மகிந்தர் அவர்களே! சோழ சாம்ராஜ்யத்தின் சாமந்த நாயகர் தங்களிடம் யாவற்றையும் தெளிவாக விளக்கியிருப்பாரென்று நம்புகிறேன்" என்று வெண்கலக் குரலில் தொடங்கினுர் இராஜேந்திரர். "விளக்க வேண்டிய வகையில் ஒன்றுமே புதிய செய்தி இல்லை; இன்றைக்கு நாம் எப்படியும் நல்லதொரு முடிவுக்கு வந்தாக வேண்டும்."

மகிந்தர் மௌனம் சாதித்தார். அந்த மௌனம் நீண்டுகொண்டே போயிற்று.

பொறுமையிழந்த மாமன்னர், "என்ன மாமா, மகிந்தரின் கருத்தைத் தெரிந்து கொண்டு விட்டீர்களா? அவர் என்ன கூறுகிருர்?" என்று வல்லவரையரிடம் திரும்பிக் கேட்டார்.

வல்லவரையர் அதற்கு நேரடியாகப் பதில் அளிக்காமல் மகிந்தரிடம் 'மாமன்னருக்கு மறுமொழி கூறுங்களேன்!' என்று கண்களால் தூண்டினுர்.

"சற்றுப் பொறுத்துக் கொள்ளுங்கள்; இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லிப் பின்புறம் தொங்கிய திரையை விலக்கிக் கொண்டு உள்ளே சென்ருர் மகிந்தர். திரைக்குப் பின் அமர்ந்திருந்த ரோகிணியும் அவரைப் பின்பற்றினுள்.

"என்ன அப்பா?"

"ஒன்றுமில்லை; குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் கொடு."

குடித்துவிட்டுத் தமது முகத்தில் அரும்பிய வேர்வை முத்துக்களைத் துடைத்துவிட்டுக்கொண்டு அங்கேயே நின்ருர். உள்ளே அவருக்கொன்றும் வேலை இல்லை. மாமன்னரிடம் முகம் கொடுத்துப் பேசுவதற்கு அவருக்குத் துணிவு தேவையாக இருந்தது. அதை வரவழைத்துக் கொள்ள முயன்ருர்.


இராஜேந்திரர் வல்லவரையரிடம், "என்ன மாமா?" என்று மெல்லிய குரலில் வினவினுர்.

"வீணுகக் குழம்புகிருர்; தாமும் குழம்பி நம்மையும் குழப்பப் பார்க்கிருர். நமது பேச்சைப் புரிந்துகொள்ள அவர் விரும்பவில்லை. நம்மிடம் மழுப்பிவிட்டு, கூடுமானுல் கீர்த்தியோடு சேர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிருர் போலும். நம்மிடமும் அவருக்கு அச்சம்; அமைச்சர் கீர்த்தியிடமும் அச்சம். நமது நட்பைவிட நமது அழிவே அவரது நோக்கம் என்று தெரிகிறது."

மாமன்னர் யோசனையில் ஆழ்ந்தார். மகிந்தர் மெல்லத் திரும்பி வந்து தமது ஆசனத்தில் மீண்டும் அமர்ந்தார்.

"உங்களுக்குத் தூதுவர்கள் வாயிலாக அனுப்பியிருந்த ஓலையில் இரண்டு விஷயங்கள் குறிப்பிட்டிருந்தேன். ஒன்று எங்களுடைய நாட்டு மணிமுடி; மற்ருென்று..." மாமன்னர் தமது பேச்சை முடிக்கு முன்பே மகிந்தர் குறுக்கிட்டார்.

"மணிமுடிதான் கிடைத்து விட்டதே! இனித் தாங்கள் தங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்லலாமே!" புதிய துணிவோடு பேசினுர் மகிந்தர்.



உங்கள்
வீட்டுக்கே
அவன்
உஷாவை
கொண்டு வரட்டும்

எல்லா இடங்களிலும் உஷா வியாபாரிகள் உண்டு. அங்கு போய் உங்களுக்கு பிடித்தமான தையல் மெஷினை தேர்ந்தெடுக்கலாம்.

இப்பொழுது இன்னும் சுலபமாக, உங்கள் அருகாமையிலுள்ள உஷா வியாபாரியிடம் உங்கள் வீட்டுக்கு உஷா மெஷினை கொண்டு வந்து இலவசமாக காட்டும்படி கேட்கலாம். அவன் 'இந்த உதவியை கடமையாக' நினைத்து சந்தோஷத்துடன் செய்வான்.

இந்த கூப்பனை தபால்வழி அனுப்பி, மீதி வேலையை எங்களிடம் ஒப்புவியுங்கள்.

உஷா
தையல் மெஷின்

ஜே எஞ்சினீயரிங்
ஒர்க்ஸ் லிமிடெட்,
கல்கத்தா

என் வீட்டிலேயே உஷா தையல் மெஷினின் வேலைத்திறனைப் பார்க்க ஆசைப்படுகிறேன்
பெயர் ____________
விலாசம் ____________
____
எந்த நாளும் ______ முதல் ______ மணிவரை

கூப்பன்களை உங்களுக்கு அருகாமையிலுள்ள உஷா டீலரிடமோ அல்லது மெஸர்ஸ் ஏஜண்ட்ஸ் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், 120, அரமனைக்காரத் தெரு, சென்னை-1 அல்லது மெஸர்ஸ் பி. எல். மல்ஹோத்ரா, 3/127, மவுண்ட் ரோடு சென்னை-6 என்ற விலாசத்துக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

''ஆமாம்; கிடைத்து விட்டது. நம்முடைய இருவர் சார்பிலும் எண்ணற்ற கட்டிளம் காளையர்களைப் பலி கொடுத்த பிறகு, நமது பொருளையும் காலத்தையும் விரயம் செய்த பிறகு, நாம் ஒருவருக்கொருவர் வெறுப்பை வளர்த்துக் கொண்ட பிறகு கிடைத்து விட்டது. உண்மைதான்! நாங்கள் திரும்பிப் போகத்தான் போகிறோம்...''

சக்கரவர்த்தி திடீரென்று தமது பேச்சை நிறுத்திவிட்டு, மகிந்தரின் பின்புறம் தொங்கிய திரைப் பக்கம் திரும்பினார். ''ரோகிணி! மகிந்தரது அரசுரிமைப் பொருள்களை இங்கே எடுத்துக் கொண்டு வா!''

ரோகிணி திரையை விலக்கிக்கொண்டு வந்து பேழையை மாமன்னரின் முன்பாக வைத்தாள். பிறகு திரைக்குப் பின் மறைந்து போனாள்.

''மகிந்தர் அவர்களே! போருக்கு முன்பு தங்களுக்கு முடியையும் நாட்டையும் கொடுத்து விட்டுத்தான் போக விரும்புகிறேன். நான் வயதில் முதிர்ந்தவன். நாட்டினர் முன்பாகத் தங்களுக்கு என் கரத்தாலேயே மீண்டும் இந்த முடியைச் சூட்டிப் பார்க்க வேண்டுமென்பது தான் என்னுடைய ஆசை...''

மகிந்தர் எதையும் நம்பாதவர் போல் தலையைக் குனிந்து கொண்டிருந்தார்.

மாமன்னர் தொடர்ந்து கூறலானார்:

''நேற்றுத் தாங்கள் அனுப்பிய தூதுவன் தாங்கள் என்னிடம் நட்புறவை நாடி வருவதாகத் தெரிவித்தான். நான் பெரு மகிழ்ச்சியுற்றேன். போருக்கு முன்பு நான் ஓலையில் குறிப்பிட்டிருந்த இரண்டாவது விஷயம் நமது நட்புறவைப் பற்றியதுதான். நான் தங்களிடம் நாட்டைத் திருப்பிக் கொடுக்க விரும்புவது நட்பைப் பெறுவதற்காக. அந்த நட்பு எனக்குக் கிடைக்குமா?''

''தாங்களோ பெரிய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி. தங்கள் பகையை நாங்கள் நாடுவோமா?'' என்று அவரைத் திருப்பிக் கேட்டார் மகிந்தர்.

''பெரிய சாம்ராஜ்யத்துக்குத் தான் தொல்லைகள் மிகுதி. மனித உடலில் ஒரு சுண்டு விரல் நோயுற்றாலும் அது முழு மனிதனையும் பாதிக்கிறது. பெரிய குடும்பத்தில் யாராவது ஒருவர் குடும்பத் தலைவனுக்குக் கட்டுப்படா விட்டாலும் அது குடும்பத்தையே பாதிக்கிறது. சோழ சாம்ராஜ்யமாகிற பெரிய குடும்பத்துக்கு ஈழத்திலுள்ள ரோகணத்தைப் போன்ற சிறு நாடு கூடத் தொல்லை கொடுக்கலாம். ஆகவேதான் தங்கள் நட்பை நான் வலிந்து கேட்கிறேன்.''

''அதற்காக நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார் மகிந்தர்.

''நாம் நடத்தவிருக்கும் விழாவுக்கு அமைச்சர் கீர்த்தியையும் தங்கள் குமாரன் காசிபனையும் வரவழைக்க வேண்டும். எல்லோருமாக இருந்து ரோகணத்து மக்களின் முன்னிலையில் ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்று உறுதி செய்து கொள்வோம். வெளிநாட்டுப் படையெடுப்புகள் ஏதும் நேர்ந்தால் அதிலிருந்து ரோகணத்தைக் காக்க வேண்டியது சோழ சாம்ராஜ்யத்தின் பொறுப்பு. அதற்குக் கைம்மாறாக நாங்கள் தங்களிடமிருந்து மிகுதியாக ஒன்றையும் எதிர்பார்க்கவில்லை . .''

கீர்த்தியின் பெயரைக் கேட்டவுடனேயே மகிந்தரின் தலை சுழலத் தொடங்கியது. கைம்மாறு என்ற பேச்சு வந்தவுடன் திரை செலுத்தச் சொல்கிறாரா என்று நினைத்தார்.

''என்ன கைம்மாறு?''

''எங்களது பகைமையை விரும்புகிறவர்களுடன் ரோகணம் உறவு பூணுவதில்லை என்று வாக்களிப்பதுதான் அந்தக் கைம்மாறு'' என்றார் இராசேந்திரர். ''பாண்டியர்களிடமோ, மேலைச் சளுக்கர்களிடமோ, அல்லது அவர்களைப் போன்ற பிறரிடமோ உங்கள் நாடு தொடர்பு கொள்ளக் கூடாது.''

''அது எங்கள் சொந்த விஷயமாயிற்றே!'' என்றார் மகிந்தர்.

சுருக்கென்று மாமன்னரது மனத்தில் பாய்ந்தது மகிந்தரின் மறுமொழி. அவர் அலட்சியமாக நகைத்துவிட்டு மேலே கூறினார்:


''எது உங்கள் சொந்த விஷயம்? பாண்டியர்களை எங்களுக்கெதிராகத் தூண்டிவிடுவதா உங்கள் சொந்த விஷயம்? மேலைச் சளுக்கர்களை வட சோழ மண்டலத்தின் மீது ஏவி விடுவதா உங்கள் சொந்த விஷயம்? மகிந்தர் அவர்களே! உங்கள் அமைச்சரின் சதித் திட்டங்கள் அனைத்தும் எங்களிடம் இருக்கின்றன. அரசரின் உடன்பாடு இல்லாமலே அமைச்சர் தனித்து இயங்குவதாக இது வரை நினைத்துக் கொண்டிருந்தோம். இப்போதுதான் தெரிகிறது. அமைச்சருக்கும் தங்களுக்கும் உள்ள உறவு!''

விநாடிக்கு விநாடி வேகம் அதிகரித்தது இராஜேந்திரரிடம். மகிந்தருக்கு விளங்கக் கூடிய குரலில் விளக்கினார். ''அமைச்சரும் காசிபனும் இந்த அரண்மனைக்கு வந்தாக வேண்டும். எங்கிருந்தாலும் அவர்களை வந்து சேரச் சொல்லித் தாங்கள் ஓலை எழுதித் தாருங்கள். அந்த ஓலையின் செய்தியை நாங்கள் ஊர்

தோறும் முரசறைவித்து மக்களிடையே பரப்புகிறோம். அவர்களாக வந்து சேரா விட்டாலும் அவர்களைத் தேடிக் கொணரும் முயற்சியில் எங்களுக்கு மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்."

"அமைச்சர் ஒருபோதும் வரமாட்டார்" என்றார் மகிந்தர். "காசிபனையும் அனுப்ப மாட்டார்."

"மன்னர் சொல்லுக்கு மதியமைச்சர் மதிப்பளிக்க மாட்டார்! தந்தை சொல்லுக்குத் தனயன் செவி சாய்க்க மாட்டான்; விந்தையாக இருக்கிறது, மகிந்தரே!" இடிச் சிரிப்புச் சிரித்தார் இராஜேந்திரர். "அவர்கள் செய்வது ஒருபுறம் இருக்கட்டும். முதலில் தாங்கள் தங்களது அந்தரங்க சுத்தியை வெளிப்படுத்துவதற்காக எங்களிடம் ஓலை எழுதித் தாருங்கள்."



மேலும் கீழும் பார்த்து விட்டு, "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்: என்னால் ஓலை ஏதும் எழுதித் தர முடியாது" என்றார் மகிந்தர்.

"உங்களை இப்போது ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது" என்றார் சக்கரவர்த்தி. "நீங்கள் நாட்டு நலன் கருதி அரசாளும் மன்னரல்ல: அமைச்சருக்கு அஞ்சி நடப்பவர். அவரால் ஆட்டுவிக்கப்படும் ஒரு துரும்பு."

முதல் நாள் மகிந்தரிடமிருந்து ரகசியமாகக் கைப்பற்றிய ஓலையை எடுத்து அவர் முன்பு வீசி எறிந்தார் மாமன்னர். "கீர்த்தி எழுதிய ஓலையைக் கண்ட பிறகு நீங்கள் மனம் மாறிவிட்டீர்கள். இது உண்மைதானே? நண்பராக வந்த உங்களைக் கீர்த்தி எழுதிய இந்த ஓலை பகைவராக மாற்றி விட்டது."

மறுமொழி கூறாது அந்த ஓலையை எடுத்து வைத்துக்கொண்டார் மகிந்தர். 'இது எப்படி மாமன்னருக்குக் கிடைத்தது?' — இந்தக் கேள்வியால் எழுந்த வியப்பையும் அதிர்ச்சியையும் அவர் தமக்குள் அடக்கிக் கொண்டார்.

"இந்தாருங்கள், நீங்கள் படித்துப் பார்க்க வேண்டிய மற்றொரு ஓலை!" என்று தஞ்சைத் தலைநகரிலிருந்து மதுராந்தகவேளார் தமக்கு அனுப்பியிருந்த ஓலையை அவரிடம் நீட்டினார் மாமன்னர்.

வல்லவரையர் இதைக் கண்டு திடுக்கிடவே, மாமன்னரின் கண்கள் அவரை நோக்கிப் புன்னகை புரிந்தன. 'நமக்கு வந்த ரகசியச் செய்தியைப் பகைவரின் பார்வைக்கு அனுப்புகிறேன் என்கிறீர்களா? தக்க காரணத்துடன்தான் அப்படிச் செய்கிறேன்' என்று கூறாமல் கூறினார் சக்கரவர்த்தி.

அந்த ஓலையை மகிந்தர் படிக்கத் தொடங்கியவுடன் அவரது முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களை அணுஅணுவாகக் கவனித்து வந்தார்கள் இருவரும். மகிந்தரின் முகத்தில் சிறிது சிறிதாக மலர்ச்சி ஏற்பட்டது. அதை அவர் மறைக்க எவ்வளவோ முயன்று பார்த்தார்; முடியவில்லை.

மாமன்னரின் விழிகள் மகிந்தரின் மனத்தையே ஊடுருவி உண்மையைக் கண்டு பிடித்து விட்டன.

மதுராந்தகர் எழுதிய ஓலையில் இருந்த செய்தியின் சுருக்கம் இதுதான்:—

கீர்த்தியின் தூண்டுதலால் பாண்டியர்கள் உரம் பெற்றிருக்கிறார்கள். எந்த விநாடியிலும் மதுரையில் எழும்பிக் கொண்டிருக்கும் புது மாளிகை தகர்த்தெறியப் படலாம். ரோகணத்து வீரர்கள் பலர் பாண்டியக் கடற்கரை வழியாகத் தமிழ் நாட்டில் வந்து இறங்கி யிருக்கிறார்கள். பாண்டிய மக்களிடையே வெறுப்பு உணர்ச்சி தீவிரமாகப் பரப்பப்பட்டு வருகிறது. உடனடியாகச் சக்கரவர்த்திகள் அங்கு திரும்பி வரவேண்டும். படைவீரர்களுடன் வருவது நல்லது

ஓலையை மகிந்தரிடமிருந்து வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்டார் மாமன்னர். "மகிந்தரே! உங்கள் அகத்தின் மலர்ச்சி முகத்தில் தெரிகிறது. சோழ சாம்ராஜ்யம் ஆட்டம் கொடுத்துக் கொண்டிருக்கிறதென்றும், அதை அப்படி ஆட்டுவிப்பவர் உங்களை ஆட்டி வைக்கும் அமைச்சர் என்றும் நீங்கள் நினைக்கிறீர்களல்லவா?"

மகிந்தர் திடுக்கிட்டார்.

"ஆமாம், தங்களிடம் நான் எவ்வளவுக்கெவ்வளவு விட்டுக் கொடுத்துப் பேசினேனோ, அதற்கெல்லாம் காரணம் சோழ சாம்ராஜ்யத்தின் பலவீனம் என்பது உங்கள் கருத்து. உண்மையில் அது எங்கள் ஆற்றலின் பலவீனமல்ல; அன்பின் பலவீனம்; நேர்மையின் பலவீனம். இந்த விநாடியிலிருந்து நீங்கள் அவற்றின் வலிமையைக் காண்பீர்கள்!"

கரங்களைச் சேர்த்துத் தட்டி ஒலி எழுப்பினார் சக்கரவர்த்தி. காவலர்கள் இருவர் ஓடோடி வந்தனர்.

"இந்தப் பேழையை எடுத்துக் கொண்டு போய் என்னுடைய மாளிகையில் வைத்து விடுங்கள்."

மகிந்தரின் அரசுரிமைப் பேழையைக் காவலர்கள் தூக்கிச் சென்றவுடன் ரோகிணி திரையை விலக்கிக் கொண்டு வேகமாக வெளியில் ஓடி வந்தாள். மகிந்தரையும் மாமன்னரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"மகிந்தரே எங்கள் துன்பத்தில் இன்பங்காணும் ஒருவருக்கு தாங்கள் வென்ற நாட்டைத் திருப்பித் தர முடியாது. உங்களை இனி இந்த நாட்டில் விட்டு வைக்கவும் கூடாது."

வல்லவரையரை உற்றுப் பார்த்தார் சக்கரவர்த்தி. அவர் கட்டளையை எதிர்பார்த்து வல்லவரையரும் சித்தமாக எழுந்து நின்றார்.

"சாமந்தநாயகர் அவர்களே! மகிந்தரை என் மாளிகைக்கு அழைத்துச் சென்று தனி அறையில் காவலில் வையுங்கள். சோழ நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் முதற் கப்பலில் இவரும் நம்முடன் தஞ்சைத் தலைநகருக்கு வருவார். இன்றிலிருந்து மன்னர் மகிந்தர் நமது விருந்தினர்!"

"அக்கிரமம்! அநீதி!" என்று பதறிக் கொண்டெழுந்தார் மகிந்தர்.

அதைச் செவியுறாதவர் போல் மாமன்னர், "ரோகணத்தை உள்ளடக்கிய ஈழ மண்டலம் முழுவதிலும் இனி நமது புலிக்கொடி பறக்கும்!" என்று முழங்கினார். தயங்கி நின்ற வல்லவரையரிடம் "அழைத்துச் செல்லுங்கள், இவரை!" என்று கர்ஜித்தார்.

வல்லவரையரின் கரம் மகிந்தரின் கரத்தைப் பற்றியவுடன், "அப்பா!" என்று அலறிக்கொண்டே அவர்களுக்கு குறுக்கே வந்து விழுந்தாள் ரோகிணி.

"ரோகிணி! இங்கு வா, அம்மா!" என்று இராஜேந்திரர் கனிவுடன் கூறி, அவளைத் தம்மிடம் அழைத்தார். ரோகிணி தன் அலறலை நிறுத்தவில்லை; அழுகையை அடக்கவில்லை. மகிந்தரை விட்டுவிட்டு அவள் மாமன்னரின் கரங்களைப் பற்றிக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

* * *

"பொருகடல் ஈழத்து அரசர்தம் முடியும்
ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியும் இந்திரன் ஆரமும
தெண்டிரை ஈழ மண்டல முழுவதும்...
கொண்டார் கோப்பர கேசரி வன்மர்"

—இராஜேந்திர சோழர் மெய்க் கீர்த்தி



நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

124. பசித்தவன்...

எனக்குப் பசிக்கவில்லை. நான் ஏன் பழையகணக்குகளைப் பார்க்கவேண்டும்? பசித்தவன் பழைய கணக்குகளைப் புரட்டுவான் போல் என்று பாமரர் சொல்லும் ஒரு பழஞ்சொல். இதைத் தழுவிய கதையையோ இதன் பொருளையோ பற்றி என்னைக் கேட்காதீர்கள். நல்ல சங்கீத வித்துவான் ஆனந்த பைரவி ராகத்தைப் பாடும்போது கவனமாகக் கேட்பீர்களானால் இந்தக் கதையும் இப்பழஞ் சொல்லின் பொருளும் விளங்கும்.

"ஒரு காலத்தில்...எப்படி இருந்தவன் தெரியுமா, ஐயா? அவனும்.. இவனும்... அப்பேர்ப் பட்டவனும்...இப்பேர்ப் பட்டவனும் என் வீட்டு வாசலில் வந்து... உம்.. அதைச் சொல்லி என்ன...?" என்று தன் பழைய கணக்கைப் பார்ப்பவன் சொல்லின் பாவம் இந்த ராகத்தின் ஒரு கலையில் தோன்றும்.

"உம்...அப்பேர்ப்பட்ட நான்...இன்று என் போதாத காலத்தினால்... இப்படியொரு நிலையில்..." என்று இன்றையக் கணக்கைத் தெரிவிப்பவன் சொல்லின் பாவம் இதே ராகத்தின் வேறொரு கலையில் தோன்றும்...

"இந்தக் காலம் இப்படியே போய் விடாது. எனக்கும் ஒரு விடிவுகாலம் வரத்தான் செய்யும். அப்போது தெரியுமா...?"

வருங்காலத்திலுள்ள நம்பிக்கையைத் தெரிவிப்பவனின் சொல்லின் பாவத்திலிருக்கும் இந்த ராகத்தின் மற்றொரு கலை. இப்படிப் பேசிக்கொண்டே வந்த போது கேட்டுக் கொண்டிருந்த நண்பர் பொறுமை யிழந்து...

"போதும்டா பழி! ஸங்கீதத்தை ஏன் வம்புக்கு இழுக்கிறாய்? உனக்கென்ன சங்கீதத்தைப் பற்றிப் பேச உரிமை?"

"அனுபவ பாத்தியதைதான். அதை விட...."

"நான் என்ன கேட்டேன், நீ என்ன சொல்கிறாய்? காது நோய் உள்ளவருக்கு ஏதோ தைலங்களைச் சொல்கிறேனென்றவன் பழைய கணக்கைப் புரட்ட...."

"அதற்குத்தான் பழைய கட்டுரைகளைப் புரட்டச் சொன்னேன்."

"அந்தப் பழங்கணக்கைத்தான் உன்னைப் புரட்டச் சொன்னால்..."

"அதுதான் எனக்குத் தேவையில்லை என்றேன். ஆனால் நீ விடமாட்டேன் என்கிறாய். ஆகையினாலே அந்தத் தைலங்களைச் சொல்லி விடுகிறேன்.

"முதலாவதாக உபயோகிக்கத் தக்கது வில்வாதி தைலம்: வில்வத்தின் இலையை இடித்துப் பிழிந்த சாறு. அதற்குச் சம பாகம் நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெய். இத்துடன் வசம்பைக் கல்கமாக அரைத்துச் சேர்த்துக் காய்ச்சிய தைலம். இதைத் தினசரி உச்சியிட்டு ஊறவும் முடி சீவிக்கொள்ளவும் உபயோகித்தல் நலம்.

"இரண்டாவதாக ஸுரஸாதி தைலம். ஸுரஸா என்றால் துளஸி என்று பொருள். வில்வ இலைச் சாறுக்குப் பதிலாகத் துளஸியை இடித்துப் பிழிந்த சாறு மற்றுள்ளவை வில்வாதித் தைலத்துக்குச் சொன்ன விதமேதான்.

"மூன்றாவதாக, பீனஸாந்தக தைலம். நகம் என்னும் கடைச்சரக்கைப் பொடித்துக் கல்கமாக அரைத்துச் சேர்த்துக் காய்ச்சிய தைலம்.

"நான்காவதாக, அஸன வில்வாதி தைலம். வேங்கை மரத்தின் வைரம், வில்வ வேர், சிற்றாமுட்டி வேர், சீந்தில் கொடி ஆகியவற்றின் கஷாயம்; நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெய்—அவரவர் விருப்பப்படி, பால், அதிமதுரம், சுக்கு, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய் ஆகியவை கல்கம்; இப்படிச் சேர்த்துக் காய்ச்சிய தைலத்தையும் உபயோகிக்கலாம்.

"இவை யாவும் பீனஸம், அடிநாய்டு, டான்ஸில், சளிநோய்கள், அடுக்குத் தும்மல், தொடர்த் தும்மல், டெலிஸ்கோப் தும்மல் முதலியவைகளைப் பற்றி எழுதிய சந்தர்ப்பத்தில்...."

"அந்தப் பழங் கணக்கைத்தான் வேண்டாமென்றேனே, மறுபடியும் அதையே ஏன் தெரிவிக்கிறாய்?"

"இல்லை, மன்னிக்கவும். மேற்சொன்ன சந்தர்ப்பத்தில் தெரிவித்த கூஷ்மாண்ட ரஸாயனம், அல்லது அச்வகந்தாலேஹியம் ஆகியவற்றில் ஒன்றை உள்ளுக்குச் சாப்பிடுவது நல்லது.

வசாதி தைலம் என்பது மற்றொன்று. இதை விசேஷமாகக் கண்டமாலை போன்ற கழுத்தைச் சுற்றியுள்ள கிரந்திகளின் அழற்சி, வீக்கம் வலி முதலியவைகளில்தான் ஏற்பது வழக்கம். சீழ் அல்லது ஜலக்கசிவுடன் அடிக்கடி ஏற்படும் காதின் உபாதைகளிலும் இதை உபயோகிக்கலாம்.

வசம்பு, கடுக்காய்த் தோல், கொம்பரக்கு கடுகரோஹிணி, சந்தனக்கட்டை ஆகியவற்றைக் கல்கமாக அரைத்துச் சேர்த்து. இதில் கொம்பரக்கு என்னும் மருந்தை மட்டும் இடித்துச் சலித்த பிறகு காப்பித்தூள் அல்லது தேயிலையிலிருந்து கஷாயஞ் செய்வதுபோல் இறக்கிய கஷாயத்தைச் சேர்த்துக்கொண்டு பாக்கி மருந்துகளைக் கல்கமாக அரைத்துச் சேர்த்துக் கொள்வதும் வழக்கம். இவற்றுடன் நல்லெண்ணெயோ தேங்காயெண்ணெயோ சேர்த்துக் காய்ச்சிய தைலத்தைத் தலைக்கு முன் சொன்ன விதமே உபயோகித்து வருவது நல்லது. ஒன்றிரண்டு சொட்டு இதைக் காதில் விடவும் செய்யலாம். சிலர் எண்ணெய்க்குச் சம பாகமாகக் கருநொச்சியின் இலையை இடித்துப் பிழிந்த சாறும் சேர்த்துக் கொள்வது வழக்கம். கண்டமாலை போன்றவைகளுக்கு இது அவசியமானாலும், காதில் சீழ் ஜலம் விடும் நிலையில் கருநொச்சியின் ரஸம் இல்லாவிட்டாலும் பாதகமில்லை. அப்படி இச்சாறு இல்லாத பக்ஷம் எண்ணெயின் அளவுக்குச் சமமாகத் தண்ணீரை எடுத்து அதில் கல்க மருந்துகளை அரைத்தபின் சேர்த்துக் கலக்கிப் பிறகு எண்ணெயையும் சேர்த்துக் காய்ச்சவும். அப்போதுதான் கல்கமாகச் சேர்த்து மருந்துகளின் குணங்கள் எண்ணெயுடன் ஒன்றிடத்தக்க நேரம் நீடித்துக் காய்ச்ச அவகாசம் இருக்கும். கல்க மருந்துகளின் குணம் எண்ணெயில் கலந்து கிடைக்கப் பெறும். பீனஸாந்தக தைலத்தைக் காய்ச்சிடும்போதும் இவ்விதமே தான் எண்ணெய்க்குச் சமான தண்ணீரைச் சேர்க்க வேண்டும்.

வசாலசுநாதி தைலம்:--வசம்பு, பூண்டு, மஞ்சள் இவற்றைக் கல்கமாக அரைத்து, வில்வத்தின் இலையை இடித்துப் பிழிந்து ரஸத்துடன் சேர்த்து, அந்த ரஸத்துக்குச் சமன் நல்லெண்ணெயும் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிய தைலத்தை மேற் சொன்னவிதம் தலைக்கு மட்டும் உபயோகித்து வந்தால் காது நோய்களையெல்லாம் குணப்படுத்துமென்றும் சிறப்பாகக் காதிலிருந்து ஒழுகும் சீழ் ஜலம் இவற்றைப் போக்கிடுமென்றும் ஸஹஸ்ர யோகம் என்ற மலையாள நூல் தெரிவிக்கிறது. ஒரு சிலரில் மட்டுந்தான் இதை உபயோகித்துப் பார்த்தேன். உண்மை; பயன் தருகிறது.

காது சம்பந்தமான எந்த உபாதை உள்ளவரானாலுஞ் சரி, தலைக்கு ஜலம் விட்டுக் குளிக்கக் கூடாது. தினசரி தேய்த்து ஊறிடும் எண்ணெய் சேர்ந்து கொண்டே போய்த் தலைமுடி பழம்புளி போல் ஆகிவிடுமே என்பீரானால், அதைத் தடுக்க அவ்வப்போது அதிகப்படி தைலத்தை ஒரு சுத்தத் துணியால் துடைத்துக் களைவதுதான் வழி. இராத பக்ஷம் 15—20 தினங்களுக்கொருமுறை தலைக்கு உபயோகிக்கும் தைலத்தையே தேய்த்து அதிக நேரம் ஊறாமல் - வெந்நீரில் தலை குளிக்கவும். சீயக்காய் இலுப்பைப் பிண்ணாக்கு இவற்றை உபயோகப் படுத்தலாம்.


தினசரி கழுத்து வரையில் குளிப்பதும், குடிப்பதும் வெந்நீராகவே இருக்க வேண்டும்.

ஈரத்தரையில் வெறுங் காலோடு நடப்பதும் கூடாது.


அதிகக் காற்று காதுகளில் படவிடக் கூடாது. காரிலோ, பஸ்ஸிலோ, ரயிலிலோ செல்லும்போது காதுகளில் காற்று தட்டாமல் இருக்க வகை செய்து கொள்ள வேண்டும். எதைச் சாப்பிட்டாலும் சூடாக உள்ளபோதே சாப்பிட வேண்டும்.

ஐஸ்க்ரீம் — ஐஸ் வாட்டர் — ப்ரூட் ஸாலட் போன்றவைகளை ஏற்கவே கூடாது.

பகலில் உறங்கக் கூடாது. இரவில் கண்விழித்தல் கூடாது.



உயர்ந்ததை வாங்குங்கள் அருவே
எவரெஸ்ட்
தையல் மெஷின்கள்
ஷாரதா மெஷினரி கார்ப்பரேஷன்
11. பூஸா ரோடு, புது டெல்லி - 5
AIYARS SM 1



மனமார்ந்த
தீபாவளி
மற்றும்
புதிய வருட
வாழ்த்துக்கள்
நன்னாளின் சிறந்த நினைவுகளாக
தேனு பாங்கின் வெள்ளிக்
கட்டிகள் ஏற்ற பரிசு
DENA BANK
DEVKARAN NANJEE BANKING CO., LTD.
தேனு பாங்கின் மூலம்
சேமிக்கவும்.
புதிய
சேமிப்புத் திட்டம்
வட்டி
2 1/2 %
5-வருட கேஷ்
ஸர்ட்டிபிக்கேட்டுகள்
வட்டி
4 1/4 %



தந்திகள் டெலிபோன் மூலம் துரிதமாக பட்டுவாடா செய்யப்படுகிறது

தந்திகளை விலாசதாரரின் டெலிபோன் நெம்பருக்கு* விலாசமிட்டு அனுப்புங்கள்.

பானர்ஜி
*டெ. நெ. 31670
புது டில்லி

தந்தி ஆபீசிற்கு இத் தந்தி கிடைத்தவுடன் தந்தியின் செய்தியை டெலிபோன்மூலம் அவருக்கு அறிவிக்கப்படும். தந்தி சேவகர் மூலம் பட்டுவாடா செய்ய ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்கலாம்.

இது உங்களுக்கு மலிவானதும் கூட—டெ. நெ. 31670 என்பது ஒரு வார்த்தையாக கணக்கிடப்படும்.

இந்த வசதி உள்ளூர் டெலிபோன் சர்விஸ் உள்ள இடங்களில் கிடைக்கும்.

தந்திச் செய்தியின் ஒரு நகல் அதே தினம் முதல் தபால் பட்டுவாடாவில் அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் தந்தியை டெலிபோன் மூலம் பெறுங்கள்

தந்தி அனுப்புபவர் 'உங்கள் டெலிபோன் நெம்பரை குறிப்பிடா விட்டாலும்' சில நகரங்களில் உங்கள் தந்திகளை நீங்கள் அடையலாம். தந்தி ஆபீசில் உங்கள் டெலிபோன் நெம்பரை ரிஜிஸ்டர் செய்துகொள்ளுங்கள், பிறகு உங்களுக்கான எல்லா தந்திகளும் டெலிபோன் மூலம் அறிவிக்கப்படும். தந்திச் செய்தியின் நகல் ஒன்றும் உடன் அனுப்பிவைக்கப்படும். ஆக்ரா, அஹமதாபாத், அலஹாபாத், அமிர்தசரஸ், பெங்களூர், பம்பாய், கல்கத்தா, கோயம்புத்தூர், டில்லி, இந்தூர், கான்பூர், சென்னை, நாகபுரி, புதுடில்லி, சேலம் மற்றும் செகந்திராபாத் முதலிய இடங்களில் இவ் வசதி கிடைக்கும்.

உங்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய
எங்களுக்கு உதவுங்கள்
தபால் மற்றும் தந்தி இலாகா

தேன்கூடு

அத்தியாயம் 9

இரண்டில் ஒன்று

அப்பா எதற்காகத் தன்னை அழைக்கிறார் என்பது விளங்காமலே உஷா மாடியேறிச் சென்றாள். பொன்னி பின்கட்டிலிருந்து இதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். அவள் முகத்திலே கரத்தையே காணோம்.

அதேபோல் குப்பனின் முகத்திலும் ஒரு வாட்டம் கலந்திருப்பதை அவள் கண்டாள். "எசமான்! உன்னைக் கூப்பிடுறாங்க, குழந்தே!" என்று சொல்லி விட்டு, அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

ஏன், எதற்கு என்றெல்லாம் உஷா காரணம் ஒன்றும் கேட்கவில்லை. "இதோ போகிறேன்!" என்று கூறி விட்டு அவள் மும்முரமாக ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

"போறியா? உடனே வந்துட்டுப் போகச் சொன்னாங்க!" என்று கூறினான் குப்பன் மீண்டும்.

அப்பொழுதுதான் அவன் முகத்தைக் கவனித்தாள் அவள். அப்படிக் கவனித்துப் பார்க்கும்படி அவன் குரல் கம்மியிருந்தது. அதற்கு ஏற்றமாதிரி முகமும் சோர்வுடன் ஒளியற்றுத் தோன்றியது.

அவள் அதற்குமேல் அங்கே நிற்கவில்லை. அவசரமாகத் தோன்றிய கைவேலையை அப்படியே விட்டுவிட்டு, அவள் தந்தையின் அறையை நோக்கிச் சென்றாள். போகும்போது பொன்னியின் முகமும் அதேபோல் மாறியிருப்பதைக் கண்டு, ஏதோ கோளாறு நேர்ந்திருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டாள்.

சொர்ணம்பாள் இருக்கும் அறையின் கதவு சாத்தியிருந்தது. உஷா அதைத் தாண்டிக் கொண்டு தான் தந்தையின் ஆபீஸ் அறையை நோக்கிச் சென்றாள்.

அவர் முகம் தீவிரமாக இருந்தது. பொதுவாக வீட்டில் ஏதோ நிகழ்ந்திருக்க வேண்டும் என்று அவளுக்குப் பட்டது. இல்லாவிட்டால் அவளை எதற்காக அவர் தம்முடைய இருப்பிடத்துக்கு அழைக்கப் போகிறார்!

"கூப்பிட்டீர்களா, அப்பா?"

"ஆமாம். உட்கார் அப்படி!" என்று எதிரே ஓர் ஆசனத்தைக் காட்டினார், பாரிஸ்டர் இவ்வளவு நேரமும் அவள் வரவை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தவர் இருப்புக் கொள்ளாமல் எழுந்து, குறுக்கும் நெடுக்குமாக நடந்தார். எப்படிப் பேச்சைத் துவக்குவது என்று சிந்திப்பதை அவர் முகமே காட்டியது. எதைச் சொல்வதானாலும் அதற்கு இவ்வளவு தூரம் தயங்குவானேன் என்று பார்த்துக் கொண்டிருந்தாள் உஷா.

"ஏதாவது தப்பாக நடந்து விட்டதா, அப்பா?" என்றாள் உஷா.

பரமசிவம் திரும்பி, அவள் முகத்தைப் பார்த்தார். ஒரு கணம் கழித்து அவர் 'ஆமாம்' என்பதுபோல் தலையை அசைத்தார். அப்படி என்ன தப்பாக நடந்திருக்கும்? யோசனை எட்டிய வரையில் உஷாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

பரமசிவம் பழையபடி தம்முடைய சுழல் நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டார். தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டார். விஷயம் எதிர்பார்த்ததற்கு மேல் கடுமையாக இருக்கும் போலிருந்தது.

"அடுத்த வருஷத்துடன் உனக்குக் காலேஜ் படிப்பு முடிந்து விடுகிறது, இல்லையா?" என்றார்.

உஷா மௌனமாகத் தன் தலையை அசைத்தாள்.

ஆர்வி

மீண்டும் அவர் சிறிது நேரம் தயங்கினார். பிறகு நிதானமான குரலில், "உன்னை எதற்காகக் கூப்பிட்டு அனுப்பினேன் என்று உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்!" என்றார்.

"இல்லை; தெரியாது."

"அதுவும் நல்லதுதான். காரணம் தெரியாமல் போனால் போகட்டும். உன்னைக் கூப்பிட்டுக் கேட்கும்படியாக நீ நடந்து கொண்டிருப்பதாவது உனக்குத் தெரியுமா?" அவர் குரலில் என்றுமில்லாதபடி கடுமை தொனித்தது.

உஷாவுக்குத் திக்கென்றது. அவர் பேச்சு அவளுக்கு விளங்கவில்லை. அவ்வளவுக்கு அவள் என்ன தவறு செய்து விட்டாள்!

"நீங்கள் கேட்பது எனக்குப் புரியவில்லை, அப்பா! நான் எப்படி நடந்து கொண்டு விட்டதாகச் சொல்கிறீர்கள்?"

"நன்றாக யோசித்துப் பார்த்தால் நான் சொல்லாமலே அது உனக்குத் தெரியும். நீ என்ன, இன்னும் சிறு குழந்தையா? நல்லது பொல்லாதது தெரிகிற வயதாகவில்லையா?"

குப்பனும் பொன்னியும் சம்பந்தப்பட்ட விஷயமாக இருக்கும் என்று எண்ணிக்கொண்டு வந்த உஷாவுக்கு, பரமசிவத்தின் பேச்சு புதிராகவே இருந்தது. அவர் சுற்றி வளைத்துக்கொண்டு பேசுவது அவளுடைய பொறுமையைச் சோதித்து விட்டது.

"கிட்டத்தட்ட முப்பது வருஷங்கள் ஆகின்றன. சென்னையில் மட்டும் என்ன, வெளியூர்களில் எல்லாம்கூட என் பெயரைச் சொன்னால் அநேகமாக எல்லாருக்கும் தெரிந்திருக்கும். இதோ, தங்க எழுத்துக்கள் பொறித்த இந்தப் புத்தகங்களைப் புரட்டினால் முக்கியமான வழக்குகளில் எல்லாம் வெற்றி பெற்றிருப்பது யார் என்பது தெரியும். நான் வெற்றி பெற்ற பிரபல வழக்குகளைப் பற்றி இன்னமும் பலர் பேசிக்கொண்டிருப்பது உனக்குக்கூட நன்றாகத் தெரிந்திருக்குமே...."

பரமசிவம் இப்படித் தற்பெருமை பேசி உஷா இதுவரையில் கேட்டதே இல்லை. அவர் அடைந்திருக்கும் புகழைப் பற்றி யாருக்குத்தான் தெரியாது?

"எனக்கு எல்லாம் தெரியும், அப்பா!"

"தெரிந்துதான் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாய் போலிருக்கிறது! புகழடைந்ததெல்லாம் போதும்! இனிமேல் இகழ்ச்சியாக இருக்கட்டும் என்று பாடுபடுகிறாய்போலிருக்கிறது!"

இப்பொழுதும் உஷாவுக்கு அவர் எதைக் குறிப்பிட்டுப் பேசுகிறார் என்று புரியவில்லை.


"நம்முடைய அந்தஸ்து என்ன தெரியுமா, உனக்கு?"

உஷா மௌனமாக அவரையே கவனித்துக் கொண்டிருந்தாள். அவர் குரலில் அழுத்தமும் முகத்தில் கடுமையும் கலந்திருந்தன.

"நான் ஒரு சமயம் மேல் சபை அங்கத்தினராக இருந்து, கவர்னரோடு நெருங்கிப் பழகியவன். கவர்னர் மாளிகை விருந்துகளில் எனக்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. என்னைத் தேடி வராத பதவிகள் கிடையாது. நினைத்திருந்தால், ஒரு வார்த்தை சரி என்று சொல்லியிருந்தால் இந்த ஜட்ஜ் பதவி எனக்கு எப்போதோ கிடைத்திருக்கும். ராமசுந்தரம் இன்று ஜட்ஜாக இருப்பதுகூட என்னால்தான். ஆனால் நான் இந்தப் பதவியை விரும்பாமல், துச்சமாக உதறியெறிந்து விட்டேன். இதெல்லாம் தெரியுமா, உனக்கு?"

பரமசிவம் ஒரு கணம் தயங்கிவிட்டு மீண்டும், "சிங்கப்பூர் முத்தையாவை விடப் பெரிய மனிதர் இங்கே யார் இருக்கிறார்கள்? அவர் என் யோசனையைக் கேட்காமல் ஒரு துரும்பையும் அசைப்பதில்லை. அப்படிப்பட்டவர் என்னிடம் முதல் முதல் வரத் தயங்கி, சிபாரிசு பிடித்து என்னிடம் வந்திருக்கிறார்.... என்னிடம் சுலபமாக யாரும் நெருங்கிவிட முடியாது; பழகிவிட முடியாது. தெரியுமா உனக்கு?" என்று படபடவென்று பேசினார்.

பரமசிவம் பேசிய தோரணை உஷாவுக்குச் சிறிது கலக்கத்தைக் கொடுத்தது. மேடையின்மேல் அட்டைக்கு அடியில் மறைத்து வைத்திருந்த கடிதம் ஒன்றை எடுத்து அவளிடம் காட்டி, "இது ஒன்று போதும், என் பெருமையையும் கண்ணியத்தையும் குறைக்க! என் முகத்தில்



கரியைப் பூச இதைவிட வேறு எதுவுமே வேண்டியதில்லை....இந்தக் கடிதம் ஏது என்று தெரிகிறதா?'' என்று வழக்கறிஞர்களுக்கே உரிய முறையில் குரலை மாற்றிக்கொண்டு பேசினார்.

உஷா அதைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனாள். மேஜை இவ்வளவு நேரமும் எதைக் காணோம் என்று அவள் தேடிக் கொண்டிருந்தாளோ, அந்தக் கடிதம் தான் பாரிஸ்டரின் கையில் இருந்தது. பாபு எழுதிய இந்தக் கடிதம் இவருடைய கைக்கு எப்படிப் போய்ச் சேர்ந்தது?


உஷா அதை இரண்டு மூன்று முறை படித்து விட்டாள். இன்னும் கூட ஒரு முறை படித்துப் பார்க்கத்தான் அவள் எண்ணியிருந்தாள். அப்படி ஒன்றும் எழுதத் தகாத விஷயம் எதையும் பாபு எழுதி விடவில்லை. இந்தக் கடிதத்தினால் இழிவோ, மானக்கேடோ யாருக்கும் நேர்ந்து விடாது என்பது நிச்சயம். அது ஒரு புறம் இருக்கட்டும்; முதலில் இது எப்படி இவர் கையில் கிடைத்தது? யார் கொண்டு வந்து கொடுத்திருப்பார்கள்?

"நான் சொல்வது புரிகிறதா?'' என்றார் பரமசிவம், மீண்டும்.

அவர் சொல்வது புரியாமல் என்ன? எல்லாம் அவளுக்குப் புரிந்துதான் இருந்தது. ஆனால் அவர் சொன்னது மட்டும் அவளுக்குச் சரியாகப் படவில்லை.

''இந்தப் பங்களாவின் மண்ணை மிதிக்கக்கூடத் தகுதியில்லாத ஒருவன், உனக்குக் கடிதம் எழுதுவதற்கு எப்படித் துணிந்தான்? கடிதம் எழுதிக் கொள்ளவும், கண்ட இடங்களுக்குக் காரை எடுத்துக்கொண்டு போகவும் வரவுமதான் நீ காலேஜ் படிப்புப் படிக்கிறாயா? இதற்காகத்தான் உன் அம்மாவிடம் எதிர்த்துச் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறாயா? பழகுவதற்கு உனக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் யாரும் கிடைக்கவில்லையா? சேரியிலும் குப்பத்திலும் உன் பெயரும் என் பெயரும் கேவலமாக அடிபட வேண்டுமா? இப்படிச் சந்தி சிரிக்கச் செய்ய வேண்டும் என்று உனக்கு எத்தனை நாட்களாக ஆசை? கேவலம் படிப்புவாசனை இல்லாத வேலைக்காரச் சிறுவன் உனக்குப் புத்தி சொல்லிக் கடிதம் எழுதுவதா? உனக்கு அங்கேயெல்லாம் என்ன வேலை? கண்ணபிரானைக் கல்யாணம் செய்துகொள்ள உனக்குச் சம்மதமில்லை என்பது எனக்குத் தெரியாது; ஆனால் எங்கோ குப்பையில் குடியிருக்கிற ஒருவனுக்கு அது தெரிந்திருக்கிறது! ஆயிரம் ரூபாய்க்கு அந்தக் கண்ணபிரான் செக் கொடுத்ததைப் பற்றி என்னிடம் ஒரு வார்த்தை யாரும் சொல்லவில்லை. ஆனால் கோணியைத் தூக்கிக்கொண்டு திரியும் சோம்பேறி ஒருவனுக்கு இதை யாரோ சொல்லியிருக்கிறார்கள்! கதை எவ்வளவு தூரத்துக்குப் போயிருக்கிறது! பிறருக்கு இதுதெரிந்தால் எவ்வளவு தாழ்வாக நம்மை பற்றி எண்ணிக் கொள்வார்கள்?...''

பரமசிவம் பேச்சை நடுவில் நிறுத்தினார். உஷாவின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகி வடிந்தது. ஒரு தலைப் பட்சமாகச் சொல்லிக் கொண்டே





அம்பத்தூர் ஓம் சாந்தி ஆசிரமத்தில் அக்டோபர் 3ந் தேதியிலிருந்து 11ந்தேதி வரை நவராத்திரி உத்ஸவம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தினசரி காலையில் ஏகாதச ருத்ராபிஷேகாதி அர்ச்சனைகளும், ஆராதனைகளும் ஸ்ரீதேவி மாகாத்மிய பாராயணமும், கடைசி தினத்தன்று சண்டிகா ஹோமமும் நடைபெற்றன. ஸ்ரீ புவனேசுவரி பீடம் மௌன சுவாமிகள் வந்திருந்த பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கினார்கள். சங்கீதக் கச்சேரிகளும், உபன்யாசங்களும் நடந்து இவ்வுத்சவத்தை மேலும் சிறப்புறச் செய்தன.

போவதனால் இன்னும் எவ்வளவோ சொல்லலாமே! உஷா அவரை மறுத்துப் பேசத் தெரியாமல் கண்ணீர் பெருக்கினாள். உண்மை முழுதும் தெரிந்தாலும் அவருக்கு ஒருகாலும் சமாதானம் உண்டாகாது என்று நிச்சயமாகத் தெரிந்தது.

"உன் போக்கு உன் அம்மாவுக்குப் பிடிக்கவில்லை என்றால் உனக்கு ரோசம் வருகிறது; பட்டினி கிடந்து விடுகிறாய்! ஆனால் உனக்குப் பிடித்த பொன்னிக்காவது, குப்பனுக்காவது நீ செய்வதெல்லாம் சம்மதமாக இருக்கிறதா? அம்மாதான் சின்னப் பெண்ணுக்குப் பரிந்து கொண்டு, அவள் சார்பாகவே பேசுகிறாள். ஆனால் அவர்களுக்குக் கூட ஏன் இது பிடிக்கவில்லை?"

போகிறது, இவருடைய கோபமெல்லாம் பொன்னி-குப்பன் மீது திரும்பாமல் இந்த மட்டும் தன்மீதே திரும்பியதே என்று இத்தனைக்கும் நடுவில் உஷா உள்ளூறச் சந்தோஷப் பட்டாள். தந்தை சொல்வதெல்லாம் குற்றம் குறையின்றி நியாயமாகத்தான் தொனித்தது. ஆனால் அவள் பங்கில் மட்டும் நியாயம் இல்லையா? இந்த நியாயத்தை அவர் மனத்தில் படும்படி எடுத்துச் சொல்வது எப்படி? அதற்கான திறமை அவளுக்கு ஏது? சொற்களுக்கு எங்கே போவாள்? பாபு இந்தக் கடிதத்தை எழுதாமல் இருந்திருக்கலாம்; கொடுக்காமலாவது இருந்திருக்கலாம். ஆனால் அதனால் அடைந்த மகிழ்ச்சியை எவ்வாறு விவரிப்பது? இதை எப்படி வெளியே சொல்லிக்கொள்வது? குற்றவாளியைப் போல் அவள் தலையைக் குனிந்துகொண்டு நின்றாள்.

"இப்பொழுது உன்னை நேரிடையாகக் கேட்கிறேன். கண்ணபிரானைக் கல்யாணம் செய்துகொள்வது உனக்குச் சம்மதமா, இல்லையா?" என்று பச்சையாகவே கேட்டு விட்டார் பரமசிவம்.

உஷா திணறிப் போனாள். அவர் கேட்ட வேகத்துக்கு ஏற்ப, "இல்லை!" என்று சொல்லிவிடத்தான் அவளுடைய உள்ளம் துடித்தது. ஆனால் ஏதோ ஒன்று அவளுடைய குரலை ஓங்க விடாமல் அடக்கிவிட்டது. பரிதாபமாக அவரைப் பார்த்துவிட்டு, கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

"இரண்டில் ஒன்றை இப்பொழுதே கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். சொல்லிவிடு!"

உஷா முந்தானைத் தலைப்பினால் பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "இப்படியெல்லாம் என்னைக் கேட்காதீர்கள், அப்பா! கேட்காதீர்கள்!" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் குமுறினாள்.

"இஷ்டமில்லையா?" என்று மேஜை மேல் ஓங்கிக் குத்தினார் பரமசிவம். அந்தக் குரலின் எழுச்சியில் அந்தக் குளிர் சாதன அறையே அதிர்ந்து கொடுத்தது. அந்தத் தளமே அதிர்ந்தது.

விம்மல்களுக்கிடையே உஷா, "என் எண்ணம் என்னவென்பது உங்களுக்குத் தெரியும். அப்புறம் என்னை ஏன் கேட்கிறீர்கள்?" என்று கூறினாள்.

முதல் தடவையாகத் தம் ஆயுளிலேயே விக்கித்துப்போய் நின்றார் பரமசிவம். விடுதலை கிடைக்க வேண்டிய கைதிக்கு மரண தண்டனை விதித்திருப்பதாகக் கேட்டிருந்தால்கூட அவர் இப்படிச் செயலற்றுப் போயிருக்க மாட்டார். நீதி மன்றத்துத் தராசு முன்கூட எதிராகச் சாயத் தயங்கும் அவருக்கு முன்னை, இதைவிடத் தெளிவாக அவளால் எப்படிச் சொல்ல முடியும்? அவர் குரல் ஓங்கியது போலவே தானே அடங்கி, ஒடுங்கி நின்றது.

ராம்தீர்த் யோகாஷ்ரமத்தின் சில செயல்கள்





ராம்தீர்த் பிராமி ஆயில் — ஸ்பெஷல் நெ. 1

கூந்தல் தைலம், மூளைக்கு ஔஷதம், கண்களுக்கும் ஞாபக சக்திக்கும், ஆழ்ந்த நித்திரைக்கும் உடல் வலியைப் போக்குவதிலும், **ராம்தீர்த் பிராமி ஆயில்** யாவருக்கும், எக்காலத்தும் உகந்தது. கிடைத்தற்கரிய பலவித மூலிகைகளினால் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட ராம்தீர்த் பிராமி ஆயில் இப்பொழுது எல்லா இடங்களிலும் புதிய பாட்டிலில் கிடைக்கிறது.

பெரிய பாட்டில் விலை ரூ. 4/-; சிறியது ரூ. 2/-

எங்கும் கிடைக்கும்

பலவித உன்னத மூலிகைகளினும் ராம்தீர்த் பிராமி எண்ணெய் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது

யோகாசன வரைவு படம்

ஆரோக்யமாகவும் திடமாகவும் இருக்க யோகாசனங்களை விவரிக்கும் எமது அழகான ஆசனப் படத்திற்கு எழுதுங்கள். ரூ. 2-50 மணியார்டர் அனுப்பி இப்படத்தைப் பெற்றுக்கொள்ளலாம். வீட்டிலிருந்தே ஆசனங்களைச் சுலபமாகப் பழகலாம்.

யோகாசன வகுப்புகள் காலை 7-30லிருந்து 9-30 மணி வரையிலும், மாலையில் 6-லிருந்து 7-30 மணி வரையிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பிரதி ஞாயிறுதோறும் காலை 10 மணிக்கு யோகாசன சொற்பொழிவுகள் உண்டு.

ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமம்

Phone: 42891 தாதர் - சென்ட்ரல் ரயில்வே - பம்பாய் - 14 Grams: PRANAYAM, Dadar - Bombay

---

ராம்தீர்த் பிராமி டிப்போ: 257, தங்கசாலைத் தெரு, சென்னை - 1


டாடாவின்

தேங்காய் எண்ணெய் ஷாம்பூ தடவி உங்கள் தலையை அடிக்கடி கழுவுங்கள்

- சுத்தமான தேங்காய் எண்ணெய் நிறைந்தது
- தலையிலுள்ள அழுக்கு, தூசி, மற்றும் பிசுக்குகளை அகற்றுகிறது
- கழுவினால் எளிதில் அகன்றுவிடுகிறது
- தலையை சுத்தமாகவும், ஆரோக்கிய மாகவும் வைக்கிறது; முடிக்கு பளபளப்பையும், அழகையும் அளிக்கிறது



தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிட்.



ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷம், மூன்று நிமிஷமும் ஆயிற்று. உஷா கண்களைச் சரியாகத் துடைத்துக் கொண்டாள். "என்னுடைய சம்மதத்தை எதற்காகக் கேட்கிறீர்கள்? உங்கள் விருப்பம் எதுவோ அப்படிச் செய்யுங்கள், அதை நான் மறுத்துப் பேசப் போவதில்லை!" என்று கூறிவிட்டு, அந்த இடத்தை விட்டுச் செல்ல முயன்றாள்.

"இந்தா, இதை உன் கையாலேயே கிழித்துப் போடு! இனிமேல் இப்படிப் பட்ட கடிதம் எதுவும் உனக்கு வராது என்று நினைக்கிறேன். நீயும் கண்ட இடங்களுக்குப் போக மாட்டாய் என்று நினைக்கிறேன்!"

உஷா கடிதத்தைக் கையில் வாங்கிக் கொண்டு, "நீங்கள் பயப்படுகிறபடி எதுவும் இல்லை. ஆனால் சொல்லும் போதும், கேட்கும்போதும் இது பயங்கரமாகத்தான் இருக்கிறது!" என்றாள்.

தந்தையின் அறையை விட்டு வெளிப் பட்டதும் வழியில் சுந்தரி நிற்பதைக் கண்டாள். திடீரென்று அவள் எதிரே போய் நின்று, "என் அறைக்குள் நுழைந்து இந்தக் கடிதத்தை உன்னை யார் எடுக்கச் சொன்னது? அப்பாவிடம் கொண்டுபோய் யார் உன்னைக் கொடுக்கச் சொன்னது?" என்று மிகுந்த கோபத்துடன் கேட்டாள்.

சுந்தரி பயந்து போனாள். "கையில் வைத்துக்கொண்டே நீ தூங்கிப்போய் விட்டாய்! இது கை நழுவிக் காற்றில் பறந்து விழுந்துவிட்டது. அதை எடுத்து வைக்கத்தான் நினைத்தேன்...."

"ஆனால் கண்கள் அதைப் படித்த தாக்கும்! படித்ததும் புத்தி மாறிவிட்டதாக்கும்! கால்கள் அப்பாவின் அறைக்கு நடந்து போயிற்றுக்கும்! அவ்வளவு தானே! இனிமேல் என்னுடைய அறைப் பக்கம் வா, சொல்கிறேன்! கன்னம் புளிக்க அறைந்து விடுகிறேன்!" என்று கூறிவிட்டுத் தன் அறையை நோக்கி விடுவிடென்று சென்றாள்.

அதற்குமேல் பாபுவிடம் சொல்லி விட்டு வந்தபடி அவள் வெளியே தோட்டத்துக்குப் போகவில்லை. தந்தையிடம் கேட்டுக் கொண்டு வந்தபடி பாபுவின் கடிதத்தைக் கிழித்துப் போட்டு விடவுமில்லை.

அத்தியாயம் 10

அந்தச் சிரிப்பு

கண்ணபிரான் உறைந்த சிலைபோல் அப்படியே உட்கார்ந்து விட்டான். ஒரு கையில் சிகரெட்டும் மறு கையில் டெலிபோன் ரிஸிவருமாக உட்கார்ந்தவனுக்கு அதற்குமேல் ஒன்றுமே ஓடவில்லை.

கையிலிருந்த உயர்ந்த சிகரெட்டு புகை விட்டு மெல்லக் கனிந்துகொண்டிருந்தது. காதருகில் இளம் பெண்ணொருத்தியின் இனிய குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. அவன் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டான். அந்த இடம் அப்படி வலித்தது.

"ஹலோ!"

"ஹலோ!"

"ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? நான் பேசுவது காதில் விழவில்லையா? நான் வந்தது உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கிறதா? ஒருகால் பிடிக்கவில்லையோ?"

"ம்...ம்...ம் ..ம்!"

"காதிலே வாங்கிக் கொள்ளவே பிடிக்கவில்லையோ?"

"ஸ்......ஆ!" என்று துள்ளினான் கண்ணபிரான்.

"என்னது?" என்று பதைத்துக் கேட்டாள் கசீலா.

"கையிலே நான் சுட்டுக் கொண்டு விட்டேன்!" என்றான் அவன்.

"அப்படித்தான் சொல்வீர்கள் என்று நினைத்தேன்!"

"நான் அதைச் சொல்லவில்லை, ஷீலா! கையில் வைத்திருந்த சிகரெட் விரலைச் சுட்டுவிட்டது!"

"இப்பொழுது அதுகூட உண்டா?"

"அது வேண்டியிருக்கிறது. முன்பெல்லாம் அதை ஒரு பழக்கமாக வைத்துக் கொள்ளவில்லை......எப்போதாவது குடிப்பதுண்டு இப்போது வேலை அதிகம்...அதனால் வேண்டியிருக்கிறது!"

"ஏன் குரலே மாறிப்போயிருக்கிறது?"

"அப்படி ஒன்றும் இல்லையே!"


"பேச்சே மாறிப் போயிருக்கிறதே!"

"இருக்காதே!"

"என் பெயரைக் கேட்ட பிறகு, குரலில் உற்சாகத்தையே காணோமே—"

"ஷீலா! அங்கே எப்படியோ, என்னவோ! இங்கிருந்து அக்கம் பக்கம் பார்த்துத்தான் பேசவேண்டியிருக்கிறது....அதுதான் பேசத் தயக்கமாக இருக்கிறது... அது. சரி எப்பொழுது வந்தாய்? யாருடன் வந்தாய்?"

அந்தப் பக்கத்திலிருந்து கண்ணபிரானைப் போனில் அழைத்துப் பேசிய கசீலாவுக்கு, அவனுடைய தடுமாற்றம் வேடிக்கையாக இருந்தது. அவன் சிரித்துக்



கொண்டே, ''முதலில் நீங்கள் இங்கே வந்து சேருங்கள். அப்புறம் எல்லாவற்றையும் நிதானமாகச் சொல்கிறேன்!'' என்று கூறினான்.

''அங்கேயா?''

''இல்லாவிட்டால் நானே அங்கே புறப்பட்டு வரட்டுமா?''

''ஊஹூம்: வேண்டாம்; நானே வருகிறேன்!'' என்றான் பரபரப்போடு.

''ஏன்,அங்கே வரக்கூடாதா! தேன்கூட்டுக்கு நான் தினமும் வர வில்லையா?''

''இல்லே, ஷீலா! அதற்கு இல்லே. உனக்கு ஊர் புதிது; இடமெல்லாம் புதிது. நீ தனியாக எப்படி இங்கே வர முடியும்? நானே வருகிறேன். நானே மெதுவாக உன்னை இங்கே அழைத்து வந்து கொள்கிறேன்...''

''உடனே வருகிறீர்களா ?''

''வருகிறேன், இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்துவிடுகிறேன். சரிதானே?''

''அவ்வளவு நேரம் ஆகுமா! இங்கிருந்து நீங்கள் இருக்கும் இடம் அவ்வளவு தூரமா ?''

''தூரம்தான்; ஆனால் அவ்வளவு நேரமாகாது. கொஞ்சம் வேலையிருக்கிறது. அதனால்தான் சொல்கிறேன். ஒரு மணி நேரம் என்ன, இன்னும் சீக்கிரத்திலேயே வரப் பார்க்கிறேனே!''

''பார்க்கிறது என்ன, வந்தே விடுங்கள்! என் கண்களும் நெஞ்சும் எப்படித் துடிக்கின்றன, தெரியுமா?''

கண்ணபிரான் சிரிக்க முயல்வது நன்றாகத் தெரிந்தது. ஆனால் சென்னைக்கு வந்திருந்தபோது டெலிபோனில் பேசும் கண்ணபிரான் எங்கே? இப்போது பேசும் கண்ணபிரான் எங்கே? ஷீலாவுக்கு இது சிறிது ஏமாற்றமாகத்தான் இருந்தது.

''நான் இவ்வளவு தூரம் தைரியமாக வந்து விடுவேன் என்று நீங்கள் எதிர் பார்க்கவேயில்லை, இல்லையா ?''

''ஆமாம்...ஷீலா.''

''நான் வந்ததில் கோபம் இல்லையே.... சந்தோஷமாகத்தானே இருக்கிறது ?''

''ஆமாம்......ஷீலா ''

''உடனே வருகிறீர்களா? என் பெயரைச் சொல்லும்போது மட்டும் மெல்லச் சொல்கிறீர்களே! அப்படிக் கூச்சமாகவா இருக்கிறது !''

''க்கும்...சரி, நான் நேரில் வருகிறேனே!''

கண்ணபிரானின் கையிலிருந்த சிகரெட் புகைக்காமலே முற்றும் கனிந்து எரிந்து போயிற்று. அவன் அதைச் சாம்பல் கிண்ணத்தில் அவித்துத் திணித்துவிட்டு, ரிஸீவரையும் 'டக்' கென வைத்துவிட்டு, மோவாயை வழித்துக் கொண்டான். ஒரு கணம் அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட முடியாதவனைப் போல் தயங்கி நின்றான். ஆனால் எதிரே யாரோ வருவதை யறிந்து, தன்னைச் சமாளித்துக் கொண்டு, உள்ளே போகத் தொடங்கினான். டெலிபோனுக்கு அழைத்த கிழவன், பேசி முடியும் வரையில் வெளியில் இருந்திருப்பதாகத் தான் அவனுக்குப் பட்டது.

'' யாருங்க, தம்பி அது? நாகலிங்கத்து ஐயா வீட்டுலே ஏது பொண்ணு? பெண் குரலா இருந்திச்சே முதல்லே நான் கேக்கறப்போ ?'' என்றான் கிழவன்.

'' அது ஒண்ணும் பெண் குரல் இல்லே, சபாபதி! உனக்குத்தான் பால்யம் திரும்புகிறதுபோலிருக்கு !'' என்று கூறி விட்டுச் சென்றான் கண்ணபிரான்.

அந்தக் கிழவன் சிரிக்கத் தொடங்கினான். வயதானவர்கள் சிரித்தாலே அது இயற்கையான சிரிப்பா, நையாண்டியான சிரிப்பா என்று கலபத்தில் கண்டு பிடித்துவிட முடியுமா? இரண்டும் கலந்து கூட இருக்கும்; சபாபதியின் சிரிப்பு அப்படித்தான் இருந்தது. (தொடரும்)



புதிய ஸ்டாக்
அழகிய புது டிசைன்கள்
ஏராளமாக வந்துள்ளன

பட்டு ஜவுளி வியாபாரம்

பெரிய தெரு (போன் நெ. 58) கும்பகோணம்

ஹெடன்ஸா



DC2:128:TM

மூல நோய்க்கு

எங்கும் கிடைக்கும்

பர்மாவுக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
சுந்தரம் அண்டு கம்பெனி
358, மொகல் தெரு, ரங்கூன்

கிஷோராமிர்தம்

(ஆயுர்வேத கிரைப் வாட்டர்)

குழந்தைகளின்
ஆரோக்கியத்திற்கு மிகச்
சிறந்தவொரு டானிக்

குழந்தைகளின் வியாதிகளுக்குக்
கைகண்ட மருந்து


தயாரிப்பவர்கள்

தி நேஷனல் பார்மஸி

195, வக்கீல் புதுத் தெரு, மதுரை

சார்லி சர்க்கஸ்

ராஜி



அந்த ஊரில் ஒரே கும்மாளம். சிறுவர் சிறுமிகள் எல்லோரும் உற்சாகமாகச் சென்று கொண்டிருந்தார்கள். உற்சாகத்துக்குக் காரணம் அந்த ஊரில் புதிதாக முகாம் போட்ட ஒரு சர்க்கஸ்தான். "சிங்கம் சர்க்கஸ்" என்ற பெயரைக் கேட்டாலே எல்லோருக்கும் ஒரு சந்தோஷத்தை உண்டாக்குமளவுக்கு அந்தச் சர்க்கஸ் அவர்களைக் கவர்ந்திருந்தது. காட்டு விலங்குகளில் சிங்கம், புலி, யானை, ஒட்டகம், குதிரை இன்னும் இதுபோல் அநேக மிருகங்கள் அந்த சர்க்கஸ் ஆட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டன. அவைகளை ஆட்டிவைக்கும் சர்க்கஸ் மாஸ்டர் "சார்லி" மிகவும் கெட்டிக்காரர். மிருகங்களுடன் சகவாசம் செய்து அவைகளின் குணங்களைப் பற்றியும், ஆகாரங்களைப் பற்றியும் நன்கறிந்தவர்.

காட்டிலிருந்து மிருகங்களைப் பிடித்துவந்து அவைகளைப் பழக்குவதிலேயே அவரது முழு நேரமும் சரியாகிவிடும். இப்பொழுது அவர் முகாம் போட்டிருக்கும் ஊரின் அருகிலேயே ஒரு காடு இருந்தது. இங்கு முகாம் போட்ட பிறகுகூட ஒரு சிறுத்தையைப் பிடித்துவந்து அதையடக்கி ஜனங்களுக்கு முன் "நேற்றுப் பிடித்துவந்த சிறுத்தை இது. எப்படி அடக்கியிருக்கிறேன், பாருங்கள்" என்று அறிமுகப்படுத்தி வைப்பார். இவர் பராக்கிரமங்களையெல்லாம் பார்த்து ஆங்காங்கு ஜனங்கள் ஆச்சரியப் படலாயினர். மிருகங்களே ஆச்சரியப்பட்டன என்றால் அவரைப்பற்றி அதிகம் சொல்வானேன்?

அப்படி ஆச்சரியப் பட்ட மிருகம் ஒரு சிங்கம். அதன் பெயர் சிங்கார். "சிங்கார் இங்கே வா!" என்று மாஸ்டர் சொல்லிவிட்டால் போதும். தான் எவ்வளவு பெரிய சிங்கம் என்பதையும் மறந்து பூனை போல் வந்து விடும். அதை ஒரு கர்ஜனை போடச் சொல்லி மாஸ்டர் கட்டளையிட வேண்டியதுதான், அது உடனே கர்ஜிக்க ஆரம்பித்து விடும். அந்தக் கொட்டகையே அதிர்ந்து விடுவதுபோல் அது கர்ஜிக்கும். பிறகு சிங்காரின் கர்ஜனை ஓயும். உடனே இது ஒரு வியாதிபோல் புலி, யானை முதலிய மிருகங்களிடம் பரவி மிருகங்கள் எல்லாம் சேர்ந்து கர்ஜிக்கத் தொடங்கிவிடும். பிறகு அவற்றை அடக்குவது மிகவும் சிரமமாகப் போய் விடும்.

சிங்கார் என்ற சிங்கம் அந்தக் கம்பெனியில் சுமார் இருபது வருடங்களாக இருந்து வருகிறது. அதை அடக்கி ஆளுவது என்பது இலேசான காரியம் அல்ல. அதுவும் அதன் குணம் எந்நேரத்தில் எப்படியிருக்கும் என்



பதே தெரியாது. ரொம்பக் கொடியது. இதயமற்றது. நம்ப முடியாதது என்றெல்லாம் அந்த மாஸ்டர் ஜனங்களுக்குப் பல தடவைகள் விவரித்துச் சொல்வதுண்டு.

ஆனால் சிங்காருக்கும் இதயம் உண்டு என்பதைப் பல வருடங்கள் கழித்து அந்த மாஸ்டர் தெரிந்து கொண்டார். ஏன், அந்த ஊரே தெரிந்துகொண்டது. ஆமாம்! அந்த ஆட்டுக் குட்டியினால்தான் அந்தச் சிங்கத்தின் மனமும் தெரியவந்தது. ஒவ்வொரு நாளும் ஒரு சிறு ஆட்டுக் குட்டியைச் சிங்கத்தின் கூண்டில் விட்டு ஆட்டுக் குட்டியையும் சிங்கத்தையும் ஒரே தட்டில் பால் சாப்பிட வைப்பதும், சிங்கத்தின் வாயைத் திறக்க வைத்து ஆட்டுக் குட்டியை அதனுள் செலுத்தி நிற்கவைப்பதும் எல்லோருக்கும் பரிதாபமான காட்சியாக இருக்கும். குட்டி நடுங்கிக்கொண்டு நிற்பதைப் பார்த்தால் எல்லோருக்கும் பரிதாபமாகத்தான் இருந்தது. அவர்களுக்கு மட்டும் தான் இது பரிதாபமான காட்சியாக இருந்ததா? எல்லாவற்றுக்கும் மேல் "சிங்கார்" என்ற சிங்கத்துக்குத்தான் பரிதாபம் அதிகமாக ஆகிவிட்டது.

இந்த ஆட்டுக்குட்டியிடம் அதற்கென்னமோ அலாதி பச்சாத்தாபம். 'பாவம்! இப்படி அதை நடுங்கவைத்து என்ன சர்க்கஸ் வேண்டியிருக்கிறது? ஒரு சாதுப் பிராணி நடுங்குவது—இதைப் பார்க்கப் பல்லாயிர மக்கள் என்று அடிக்கடி தனக்குத் தானே சொல்லிக்கொள்ளும். சில நாட்கள் ஆட்டுக் குட்டியைச் சிறுத்தையுடன் கூண்டில் விட்டு வேடிக்கை பார்ப்பார், மாஸ்டர் சார்லி. அப்பொழுதெல்லாம் சிங்கார் ரொம்ப உஷாராக இருக்கும். சிறுத்தை எந்த நேரத்தில் அந்த ஆட்டுக் குட்டியை விழுங்கிவிடப் போகிறதோ என்று பயப்பட ஆரம்பித்துவிடும். 'ஆட்டுக் குட்டி இன்று தப்பித்தது'' என்று ஒவ்வொரு நாளும் சொல்லியபடியே இருந்தது சிங்கார். இனமும் இதுமாதிரி ஒரு ஆட்டுக் குட்டியை நடுங்க வைப்பது சிங்காருக்கு வெறுப்பை உண்டாக்கியது. ஆனால் சிங்காரின் கருணை உள்ளம் அந்த ஆட்டுக்குட்டிக்குத் தெரியாது; மாஸ்டருக்கும் தெரிந்துகொள்ளும் சந்தர்ப்பமே இல்லை.

ஒருநாள் இரவு பன்னிரண்டு மணி இருக்கும். சர்க்கஸ் ஆட்டம் முடிந்து எல்லோரும் சென்று இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது. கொட்டகையும் அந்த மைதானமும் ஒரே நிசப்தமாக இருந்தது. திடீரென்று ஏதோ ஒரு குரல் கேட்டது. "வாருங்கள்! வாருங்கள்!! சிங்கார் கூண்டிலில்லை. தப்பிப் போய் விட்டது" என்றது அந்தக் குரல். அவ்வளவுதான்; அங்கே ஒரே பரபரப்பு! அதைக் கண்டுபிடிக்கத் துப்பாக்கியுடன் மாஸ்டர் கிளம்பினார். மற்ற மிருகங்களெல்லாம் கூண்டினுள் இருக்கிறதா என்று மாஸ்டர் சார்லி கேட்டார். "எல்லாம் இருக்கின்றன. அந்த ஆட்டுக் குட்டியையும் காணோம்" என்றான் அந்தப் பழுன் நாகன்.

மாஸ்டர் சார்லி உடனே, "எனக்குச் சிரிக்க இப்பொழுது நேரமில்லை. திரும்பி வந்தவுடன் மறுபடியும் சொல்லு. சிரிக்கிறேன்" என்று சொல்லித் தனக்குள் 'வெகு நாட்களாக அந்த ஆட்டுக் குட்டியின்மேல் குறியாக இருந்த சிங்கார் அதையும் டிபன் பண்ணிப் போய்விட்டதோ என்னமோ? உம்... அந்த ஆட்டுக்குட்டி போனால் இன்னொன்று. ஆனால் அந்தச் சிங்கம் போனால் என் தொழிலே போய்விடுமே. அதன் பெயரை வைத்தல்லவா நான் நிறையச் சம்பாதிக்கிறேன்'' என்று கூறிக்கொண்டு ஏங்கினார். இனிமேல் அதைக் கண்டுபிடிப்பது என்பது முடியாத காரியம் என்று நிச்சயித்துக் கொண்டார். "சிங்கார் தப்பிப்போன விஷயம் ஊருக்குத் தெரியக் கூடாது. தெரிந்தால் சிங்கார் இல்லாமல் ஒருவரும் சர்க்கஸ் பார்க்க வரமாட்டார்கள். அதனால் எல்லோரும் 'கப்சிப்' என்று இருங்கள். நம்மிடம் இன்னும் இரண்டு சிங்கங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்றுதான் சிங்கார் என்று மக்கள் எண்ணிக் கொள்ளட்டும்'' என்று சர்க்கஸ் ஆட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்.

ஆனால் ஜனங்களா ஏமாறுவார்கள்? சிங்காரின் காம்பீர்யத்தைப் பார்த்துப் பழகிப்போனவர்கள். "நிச்சயம் அந்தச் சிங்கம் சிங்காரில்லை. சிங்கார் எங்கே? ஏமாற்றுதே. சிங்காரைக் கொண்டு வா'' என்று பல குரல்கள் கூட்டத்தில் எழுந்தன. நாளுக்கு நாள் கூட்டம் குறைய ஆரம்பித்தது. சிங்கார் தப்பிப் போன விஷயம் எல்லோருக்கும் தெரிந்து விட்டது. இது இப்படி இருக்க, கூண்டை விட்டு வெளியே தப்பி ஓடிய சிங்கார் போகும்போது அந்த ஆட்டுக்குட்டியையும் தன் வாயில் கௌவி எடுத்து ஓடியது. ஆட்டுக்குட்டி நடுங்கி, தான் நிச்சயம் இறக்கப் போகிறோம் என்று நினைத்துக் கொண்டிருந்தது. சிங்கார் வெகுதூரம் ஓடிச் சென்று



அங்கே உள்ள காட்டினுள் மறைந்தது. பெரிய புதர்களைக் கடந்து தன்னுடைய பழைய இருப்பிடத்துக்கு வந்து குட்டியைக் கீழே போட்டது. போட்ட இடத்தில் அப்படியே அசந்து மயங்கிப் படுத்தது ஆட்டுக்குட்டி. அதை விட்டுச் சென்ற சிங்கம் அங்கு தன் வாயில் பலவிதமான தழைகளுடன் ஆட்டுக்குட்டிக்கு ஆகாரம் கொண்டு வந்து போட்டது. அப்பொழுதுதான் அந்த ஆட்டுக் குட்டிக்கு உயிர் வந்தது. சிங்கார் ஆட்டுக் குட்டிக்குத் தனியாக ஒரு சிறு புதர் கண்டுபிடித்து மற்ற மிருகங்கள் அதைத் தீண்டாதபடி ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வந்தது.


சில நாட்கள் மேய்ந்து கொண்டிருக்கும் போது தூரத்தில் பல மிருகங்கள் நின்று கொண்டு ஆட்டுக் குட்டியைப் பல தடவைகள் எச்சரித்தன. ''ஏ! அசட்டு ஆட்டுக் குட்டியே! நீ கொடிய விலங்கின் கையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாய். நீ வளர்ந்த பிறகு உன்னைச் சாப்பிடவே அந்தச் சிங்கார் உன்னை வளர்க்கிறான். சர்க்கஸில் சேர்ந்து இந்த மாதிரியான யோசனைகளை அவன் கற்று வந்திருக்கிறான். ஓடித் தப்பிக் கொள்'' என்றன.

இப்படிக் கொஞ்ச நாட்கள் கழிந்தன. ஒரு நாள் ஆட்டுக்குட்டி தன் புதரினின்றும் வெளியே வந்து எட்டிப் பார்த்தது. அது கண்ட காட்சி அதற்கு நம்பவே முடியவில்லை. சிங்கார் ஒய்யாரமாய்ப் படுத்திருந்தது. இரண்டு சிங்கக் குட்டிகளுக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தது. ஆட்டுக் குட்டி ஓடிப் போய்ச் சிங்கார் இரண்டு குட்டிகளுக்குத் தாயாக இருந்ததைப் பார்த்து சந்தோஷத்தில் குதித்தது. சிங்கக் குட்டிகளும் ஆட்டுக் குட்டியும் ஒரே மாதிரி உற்சாகமாய் வளர்ந்து வந்தன. குட்டிகள் எல்லாம் எப்பொழுதும் ஒன்று சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்தன. ஆட்டுக் குட்டிக்குச் சிறு கொம்பு முளைத்துத் தான் வளர்ந்து கொண்டு வருவதைக் காட்டியது. ஆடாக இல்லாமலும் குட்டியாக இல்லாமலும் அது வளர்ந்தது. அந்தப் பெரிய ஆட்டுக்குட்டி சென்ற இடமெல்லாம் சிங்கக் குட்டிகளும் சென்று கொண்டிருந்தன. அவைகளை எச்சரித்த படியே சிங்காரும் கூடச் சென்று கொண்டிருந்தது.

ஆனால் ஒரு நாள் வெளியில் சென்ற சிங்கார் அதற்குப் பிறகு திரும்பி வரவில்லை. ''டமார்'' என்ற பெரிய சப்தம். அதைத் தொடர்ந்து பல மிருகங்களின் கூச்சல் கேட்டது. பதுங்கிக் கொண்டிருந்த பெரிய ஆட்டுக் குட்டியும், சிங்கக் குட்டிகளும் நடுங்கின. ''ஐயோ! சிங்கார் வரவில்லையே! வெகு நேரம் ஆகி விட்டதே! வெடிச் சத்தம் வேறு கேட்டதே! ஆமாம்! ஆமாம்!! சிங்கார் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார். என்னை விட்டுப் போக அவருக்கு எப்படி மனம் வந்தது? கொடிய விலங்கு என்பவர் உள்ளத்தில் தான் இடம் பெற்றது இத்துடன் முடிந்ததா? எனக்கு அவர் அன்புடன் செய்த உபகாரம் எல்லாவற்றுக்கும் நான் பதில் உபகாரம் செய்யும் நேரம் வருமா?'' என்று காத்திருக்க விடைபெற்றுப் போய் விட்டதே என்று பெரிதாக அழ ஆரம்பித்தது ஆடு. அன்று இரவு முழுதும் காத்திருந்து பார்த்தது. பொழுதும் விடிந்தது. சிங்கார் வரவில்லை.

பெரிய ஆட்டுக்குட்டி தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டு தன் புதரில் ஒன்றும் அறியாமல் படுத்துக் கிடக்கும் பச்சிளஞ் சிங்கக் குட்டிகளிடம் போய் அவைகளைப் பார்த்துக் கண்ணீர் விட்டது. 'என்னுடன் வாருங்கள். நாம் நாட்டுக்குப் போய் வாழலாம்' என்பது போல் அவைகளையும் கூட அழைத்துக் கொண்டு நாட்டை நோக்கி நடந்து சென்றது. சிங்கக் குட்டிகளும் குதித்துக் கொண்டு ஆட்டுக் குட்டியின் பின்னால் நடந்து வந்தன.

காடுகளையெல்லாம் கண நேரத்தில் கடந்து நாட்டை அடைந்த குட்டிகள் சர்க்கஸ் கூடாரத்தை நெருங்கின. ஓயாத ஒரே அதிரும் சிம்ம கர்ஜனை கேட்டு ஆட்டுக் குட்டி திடுக்கிட்டது. சற்று நிதானித்து, 'ஆம்! சிங்கார் சாகவில்லை. சர்க்கஸ்காரர்கள் அதைக் காட்டில் மறுபடியும் பிடித்து விட்டார்கள். இந்தக் கர்ஜனை அதனுடையது தான்!' என்று உற்சாகம் பொங்கச் சிங்கக் குட்டிகளை அழைத்துக் கொண்டு அதன்



கூண்டினருகில் ஓடிற்று. சிங்கார் ஆனந்தத்தால் குதித்தது. எங்கும் ஒரே பரபரப்பு. மாஸ்டர் சார்லி ஓடி வந்து பார்த்தார். சிங்காரின் குட்டிகள் கூண்டின் கம்பிக்குள் நுழைந்து தாயிடம் பால் குடித்தன. ஆட்டுக் குட்டியும் கூண்டில் புகுந்து சிங்கார் மேல் சாய்ந்தது. சிங்காரும் ஆட்டுக் குட்டியை அணைத்துக் கொண்டது.

மறு நாள் சர்க்கஸ் கூடாரத்தில் ஏகக் கூட்டம். சிங்கார் அகப்பட்ட சில நாட்களாக அது சரியாக நடந்து கொள்ளாமல் இருந்ததும், பழைய படி ஆட்டுக்குட்டியுடன் சல்லாபமாக ஆனதையும் பார்த்து மாஸ்டர் உள்பட எல்லோரும் ஆச்சரியப் பட்டார்கள்.

ஆட்டுக் குட்டியும் தனக்குச் சிங்கார் செய்த உபகாரத்துக்கும், அன்புக்கும் அதன் அருமைச் சிங்கக் குட்டிகளை அதனிடம் சேர்த்து விட்டோம் என்று பெருமைப்பட்டுக் கொண்டது. கொடிய விலங்குகளின் வயிற்றில் தான் இடம் பெற முடியும் என்றிருந்த உலகத்தில் அவைகளின் உள்ளத்திலும் இடம் பெற முடியும் என்று நிரூபித்து விட்டது அந்த ஆட்டுக் குட்டி.

மாவட்டச் சிறுகதைப் போட்டி

முதற் பரிசு ரூ. 200 இரண்டாவது பரிசு ரூ. 100

*

★ ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்தை இலக்காகக் கொண்டு இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படும். ஒவ்வொரு மாதமும் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளில் இரண்டு கதைகளுக்குப் பரிசு வழங்கப்படும்.

★ தமிழ்நாட்டின் மாவட்டங்களான கன்யாகுமரி, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு, சென்னை, சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஆகிய பதின்மூன்று மாவட்டங்கள் இந்தப் போட்டியில் இடம் பெறும்.

★ எல்லா மாவட்டங்களைப் பற்றிய கதைப் போட்டிகளிலும் எல்லாத் தமிழ் எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம்.

★ கதைகள் பண்பட்ட தமிழ் நடையில் அந்தந்த மாவட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு, முழுவதும் அந்தப் பிரதேச மணம் கமழ்வதாக இருப்பதோடு சொந்தக் கற்பனையாகவும் இருக்க வேண்டும்.

ஐந்தாவது போட்டி

திருச்சி மாவட்டம்

விதிகள்

1. கதைகள் திருச்சி மாவட்டத்தின் சூழ்நிலை எல்லாவகையிலும் அமையுமாறு எழுதப்பட வேண்டும். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்கள், பழக்க வழக்கம், காவிரி நதிதீர வாழ்வு போன்றவற்றைச் சித்திரிக்கும் கதைகளே இப்போட்டியில் இடம் பெறும்.

2. கதைகள் 'கல்கி' இதழின் ஐந்து பக்கங்களுக்குக் குறையாமல் ஏழு பக்கங்களுக்கு மேற்போகாமல் இருக்க வேண்டும்.

3. ஒரு எழுத்தாளரே ஒன்றுக்கு மேற்பட்டும் கதைகள் அனுப்பலாம்.

4. பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் "கல்கி" ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

5. பரிசு பெறாத கதைகளில் பிரசுரிக்கத் தகுதியுடையவை, உரிய சன்மானம் அளித்துப் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

6. பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படாத கதைகளைத் திரும்பப் பெற, கதைகளோடு உரிய தபால் பில்லைகள் இணைக்க வேண்டும்.

7. கதைகள் சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. திருச்சி மாவட்டப் போட்டிக்கான கதைகள் நவம்பர் 30-ந் தேதிக்குள் 'கல்கி' காரியாலயத்துக்கு வந்துசேர வேண்டும்.

9. போட்டி முடிவு டிசம்பர் மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும்.

10. கதைகளின் உறைகளிலும், தலைப்புக்களிலும் 'கல்கி திருச்சி மாவட்டச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

குறிப்பு:—திருச்சி மாவட்டத்தின் சிறுகதைப் போட்டி முடிவு வெளியாகும் இதழிலேயே அடுத்த மாவட்டச் சிறுகதைப் போட்டிக்குரிய விவரங்கள் அறிவிக்கப்படும்.

ஆசிரியர், கல்கி

கால்கேட்டின் மூலம் பற்கள் சொத்தையாவதைத் தடுப்பதோடு நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தையும் அகற்றுங்கள்!



எனெனில், கால்கேட் பற்பசை சொத்தையையும் துர்நாற்றத்தையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை துரிதமாக ஒழிக்கிறது!

உணவு சாப்பிட்டவுடன் கால்கேட் தரும் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமையில், சாதாரணமானவர்களுக்குச் சொத்தை குறைக்கப்படுகிறது என்பதையும் கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10-க்கு 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், விஞ்ஞான பரீட்சைகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத் தான் உண்டு.

இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் கிடைக்கும் அதிசய நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது!

- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



சிக்கன பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம்—ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



வெண்மையான பற்களைப் பெறவும், வாயில் நறுமணம் கமழவும், உலகிலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

SCB. 2097 TAM.



அத்தியாயம் 14

சோதனையின் ஆரம்பம்

விகாஸின் மரணம் வீணாவைப் படு வேகமாகத் தாக்கி விட்டது. கிட்டத் தட்ட உயிர் பிழைத்து விட்ட அவனை அவள் தன் சொல்லம்பால் கொன்று விட்டாள்! கத்தியால் குத்தப்பட்ட காயத்தைவிடத் தனது மனமாற்றச் செய்தி அவனுக்கு அதிக வேதனையை அளித்து விட்டது என்பதை அவன், "வீணா!" என்று பெருங் குரலில் கத்தி, அதன் காரணமாக உயிரை விட்ட போதுதான் அவளால் அறிந்து கொள்ள முடிந்தது.

பல நாட்களாக விகாஸும் சுந்தரமும் அவளுக்குப் பல விதங்களில் எடுத்தோதி, பல சம்பவங்களைக் கண்கூடாகக் காட்டி, புரட்சி வாழ்வில் மனம் கனியச் செய்தார்கள். சுந்தரமும் அவளும் தம்பதிகளாக இணைந்து அந்தப் புரட்சி வாழ்வில் ஈடுபட்டுப் பிறருக்கு வழிகாட்ட வேண்டும் என்பதற்காகவே சுந்தரத்தின் மீது விழ வேண்டிய கத்திக் குத்தைத் தான் ஏற்றுக் கொண்டான் விகாஸ். ஆனால் அவன் அப்படிக் கத்தியால் குத்தப்பட்டு உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கையில், வீணாவின் மனம் திடீரென்று பின்னடித்ததென்றால் அவனுக்கு எப்படி இருந்திருக்கும்? அந்த அதிர்ச்சியும் ஏமாற்றமும்தான் அவனைத் தன்னை மறந்து உரக்கக் கத்தச் செய்தன; இறுதியில் அந்த அலறலே அவனுக்கு யமனாகவும் ஆகிவிட்டது.

தனது புரட்சி வாழ்வு சமூகத்தில் பெரும் புயலைக் கிளப்பும் என்பது வீணாவுக்குத் தெரியும். ஆனால் அது இப்படி விபரீத உருப் பெறும் என்று அவள் நினைக்கவில்லை. இது வரையில் எத்தனையோ பிரச்னைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி, அவளைப் புரட்சியில் ஈடுபடத் தயங்கச் செய்தன. ஆனால் அவற்றைவிடப் பெரிய பேராபத்துகள் புரட்சி வாழ்வில் ஈடுபடாவிட்டால் தனக்கு ஏற்படக் கூடும் என்பதைக் கண்டு அவள் அப்பிரச்னைகளை ஒதுக்கித் தள்ளினாள். சமூகத்தின் எதிர்ப்புக்களைப் பொறுத்துக் கொள்ளத் துணிந்தாள்; தன் குடும்பத்துக்கு ஏற்படப் போகும் அவமானங்களைப் 'பரவாயில்லை' என்று புறம்படுத்தினாள்; சுந்தரத்தின் பெற்றோர் தன்னைத் தூற்றக் கூடும் என்பது தெரிந்தும் அதைச் சகித்துக் கொள்ள நிச்சயித்தாள்; மாலாவின் வாழ்வு பாழாகும் என்பது வெறும் கட்டுக் கதையென்று அதையும் ஒதுக்கினாள்.

ஆனால் அவற்றைப் போல் இதை ஒதுக்க அவளால் முடியவில்லை. ஏனென்றால் இது உயிர்ப் பிரச்னையாக இருந்தது. அதிலும் அவளுடைய உயிரைப் பாதிக்கக்கூடியதாக இருந்தாலும், 'போனால் போகிறது' என்று விட்டு விடுவாள். ஆனால் இதுவோ மூன்றும் மனிதர்களின் உயிரைப் பலி வாங்குவதாக இருந்தது. ஆதலால்தான் அவள் இத்தனை நாட்கள் கூட்டிச் சேர்த்திருந்த துணிவையெல்லாம் கணத்தில் இழந்து மீண்டும் ஒரு முறை பின்வாங்கினாள். அது அவள் வரையில் சரிதான். பொதுவாகப் பார்க்கப் போனால் மனித உள்ளம் படைத்த எவரிடமிருந்தும் இம்மாதிரி சந்தர்ப்பத்தில் இத்தகைய பின்னடிப்பைத் தான் எதிர்பார்க்க வேண்டும்.

ஆயினும், வீணா அதை அவசரப்பட்டுக் கொண்டு விகாஸிடம் வெளியிட்டு விட்டாள். அவன் முழுவதும் குணமடைந்த பின்னர் தன் மனமாற்றத்தை வெளியிட்டிருந்தால் அப்பொழுது கதையே வேறு விதமாகப் போயிருக்கும். அப்பொழுது விகாஸ் திடகாத்திரமான உடல் நிலையில் இருந்திருப்பான்; ஆதலால் இவளுடைய மனமாற்றம் அவனுக்கு அதிர்ச்சி அளிப்பதாக இருந்த போதிலும், உயிரைக் குடிக்கும் அளவு விபரீதத்தை உண்டு பண்ணியிராது.

எப்படியோ சாக இருந்த விகாஸைப் பிழைப்பூட்டி விட்டோம் என்ற களிப்பினாலோ, அல்லது அவனுடைய மரண நிலை தனக்கு ஒரு புது உண்மையைத் திடீரென்று காட்டியபோது ஏற்பட்ட விழிப்பினாலோ, அவன் பிழைத்துவிட்டாலும் அபாயகரமான கட்டத்தைத் தாண்டிவிடவில்லை என்பதை மறந்து அவள் வார்த்தைகளைக் கொட்டிவிட்டாள். அந்த வார்த்தைகள் கூரிய வேலாகப் பாய்ந்து கணத்தில் அவன் உயிரைக் குடித்து விட்டன.

விகாஸ் இறந்த பிறகுதான் வீணாவுக்கு இவையெல்லாம் விளங்கின. இவை விளங்கிய பிறகு அவள் மனம் சொல்லொண்ணா வேதனை அடைந்தது. பசியால் சாக இருந்த ஒருவனை வீட்டுக்கு அழைத்து வந்து, சோறிட்டுப் பிழைப்பூட்டி விட்டுப் பிறகு தடியால் அடித்துக் கொல்வது போன்ற காரியத்தை அவள் செய்து விட்டாள். ஆதலால் இந்தக் கொலை யாரோ இரண்டு அயோக்கியர்கள் செய்த கொலையன்று. இது வீணாவே செய்தகொலை. இதற்கு அவள்தான் பரிகாரம் செய்ய வேண்டும்; இதற்குரிய தண்டனையை அவள்தான் அனுபவிக்க வேண்டும்.

தண்டனையை அனுபவிக்க வீணா தயாராகவே இருந்தாள். மரணத்துக்கு மரணம்தானே தண்டனை. அந்த மரணத்தை வேறு யாரும் அளிப்பதற்குள் தானே அளித்துக் கொண்டுவிட அவள் சித்தமாகவே இருந்தாள். ஆனால் மரண தண்டனை சட்ட ரீதியில் அவளுக்கு ஏற்றதாக இருக்கலாம்; தர்க்க ரீதியில் அது பொருந்துமா?

இறக்குமுன் விகாஸ் சுந்தரத்திடம் விடுத்துச் சென்ற கோரிக்கையானது வீணாவின் நெஞ்சகத்தில் சுழன்றது. அவளை அவன் "கையாலாகாதவள்; கோழை; அடிக்கடி மனம் மாறக் கூடியவள்" என்றெல்லாம் குற்றம் சாட்டினான். அவை அனைத்தும் உண்மைதானே? அவளுக்காக ஒருவன் உயிரையே கொடுத்திருக்கிறான். அப்படி உயிரைக் கொடுத்தவனுக்கு நன்றிசெலுத்தும் வகையில் அவன் உயிரை ஈந்த பணிக்குத் தன் கடைசி மூச்சு வரையில் பாடுபடாமல், தற்கொலை செய்து கொண்டு தப்பி ஓடப் பார்க்கும் அவளைக் கோழை என்றும், கையாலாகாதவள் என்றும், கணத்துக்குக் கணம் நிறம் மாறும் பச்சோந்தி என்றும் அவன் குறிப்பிட்டதில் தவறு என்ன இருக்கிறது?

அதுதான் போகட்டும்; அவள் உயிரை விட்டு விட்டால் அத்துடன் விகாஸ் எதற்காக உயிரை இழந்தானோ? அந்தப் பிரச்னை தீர்ந்துவிடப் போகிறதா?



விகாஸின் கோரிக்கையில் இறுதிப் பகுதியை இப்பொழுது அவள் நினைத்துக் கொண்டாள். தன் உயிரோடு இந்தப் போராட்டம் தீர்ந்தது என்று அவன் விட்டுவிட்டுப் போய்விடவில்லை. அல்லது வீணாதான் மனம் மாறிவிட்டாளே, இனி இந்தப் போராட்டமெல்லாம் யாருக்காக என்று ஒதுக்கி விடவும் இல்லை. தான் மறைந்தாலும், தனக்குப் பின் போராட்டத்தைத்தொடர்ந்து நடத்தச் சுந்தரத்தை வாரிசாக நியமித்து விட்டுப் போயிருக்கிறான். வீணா இருந்தாலும் சரி, இறந்தாலும் சரி, சுந்தரம் என்னவோ தன் நண்பனின் இறுதிக் கோரிக்கையைக் கண்டிப்பாக நிறைவேற்றத் தான் போகிறான்.

ஆகையால், சுந்தரத்துக்கோ, அல்லது விதவைகளிடம் பரிவு காட்டும் இதர உத்தமர்களுக்கோ, அதன் காரணமாக ஏற்படப் போகும் அபாயங்களை அவளுடைய மரணம் தடுத்து நிறுத்தி விடப் போவதில்லை. சுந்தரம், விகாஸ் போன்றவர்களின் கொதிப்பும், குலசேகரம் போன்றவர்களின் அநுதாபமும் பரிவும் வீணா என்ற ஒருத்திக்காக மட்டும் பிறந்தவைகளல்ல. அவை உலகெங்கிலும் சமூகத்தால் நசுக்கப்பட்டு வரும் ஆயிரம் ஆயிரம் விதவைகளின் பொருட்டு ஏற்பட்டவை. எனவே அவை என்றென்றும் அவர்களிடமிருந்து மாறப் போவதும் இல்லை; அதற்காக அவர்களுக்கு ஏதேனும் அபாயம் ஏற்படுவதாக இருந்தால் அந்த அபாயம் நீங்கிவிடப் போவதும் இல்லை. இறுதியில் வீணா தன்னை நம்பிச் செயல் புரிந்தவர்களை நட்டாற்றில் விட்டதையன்றி வேறு எந்த விதமான பயனும் பெறப் போவதில்லை.

தவிர, இவ்வளவு தூரம் முன்னேறி வந்துவிட்ட பிறகு, பின்வாங்குவதோ அல்லது எது எதையோ நினைத்துக் கொண்டு உயிரை மாய்த்துக் கொள்வதோ விவேகமான செயலாகுமா? அது விவேகமற்ற செயல் மட்டுமில்லை; முதல் தரத் துரோகமும் ஆகும். சுந்தரம் போன்றவர்களுக்குத் துரோகம்; தனக்காக உயிரை இழந்த விகாஸுக்குத் துரோகம். ஏன்? விதவைச் சமூகத்துக்கே அவள் இழைக்கும் மகத்தான துரோகம் ஆகும்.

அதுதான் போகட்டும்; வாழ்வில் அவளுக்கு ஒரு லட்சியம் வேண்டாமா? ஒன்று விதவையாகவே இருந்துவருவதை அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டும்; அல்லது எது நேர்ந்தாலும் சட்டை செய்யாமல் மறு வாழ்வு பெற வேண்டும். ஆனால் அவளோ அங்குமின்றி இங்குமின்றித் தத்தளித்து வருகிறாள். ஒவ்வொரு கட்டத்திலும் மனம் மாறிக் கொண்டே இருக்கிறாள். ஓரடி முன் வைப்பதும், உடனே மூன்றடிகள் பின் வாங்குவதுமாக இருந்து வருகிறாள். இப்படியே இருந்து வந்தால் இதன் முடிவுதான் என்ன?

சிந்திக்கச் சிந்திக்க வீணாவுக்குத் தான் இப்படிக் கிளைக்குக் கிளை தாவிக் கொண்டிருப்பது தவறு என்பது புலனாயிற்று. விகாஸின் மரணத்தைக் கண்டு நான் பீதியடைவது முற்றிலும் பிழையானது. மாறாக அவன் சாவு எனக்கு வெறியை அல்லவா ஊட்டியிருக்கவேண்டும்? "ஏ, கொடுமை நிறைந்த சமூகமே! உனக்கு ஆயிற்று; எனக்கு ஆயிற்று! பார்க்கலாம் ஒரு கை" என்று நான் வீரம் பேசி உயிர் உள்ள வரையில் எங்கள் சமூகத்தை உய்விக்கப் போரிட அல்லவா துணிந்திருக்க வேண்டும்? அதல்லவா விகாஸுக்கு நான் செலுத்தும் நன்றிக் கடன்? அதல்லவா தொடர்ந்து அப்போரில் இறங்கப் போகும் சுந்தரத்துக்கு நான் அளிக்கும் சிறந்த ஒத்துழைப்பு? அதல்லவா எங்கள் அபலை சமூகத்துக்கு நான் ஆற்றும் அருந்தொண்டு?'


கடைசியில் இந்த முடிவைக் கண்ட பிறகுதான் வீணாவின் உள்ளத்துக் குழப்பம் தெளிவடைந்தது. குழப்பம் தெளிந்ததும் அவளுக்கு இது வரையில் இல்லாத ஒரு தனி உறுதியும் ஏற்பட்டு விட்டது. இனி யார் இருந்தாலும், யார் இறந்தாலும் தான் இறக்கும் வரையில் அவள் தன் கொள்கையை மாற்றிக் கொள்ள மாட்டாள். விகாஸின் மறைவால் புதுப் பலம் பெற்று, சுந்தரத்துடன் தொடர்ந்து இணை சேர்ந்து தங்கள் புனிதப் போரை நடத்தத்தான் போகிறாள்.

நடத்தினாள் அவள்; ஆனால்...?

* * *

பாழும் சமூகம் இப்பொழுது சுந்தரத்தைப் பிடித்துக் கொண்டு வாட்ட ஆரம்பித்தது. விகாஸின் மரணத்தை யொட்டியே அவனுக்குத் தொல்லைகள் ஏற்பட்டன. ஆனால் அத்தொல்லைகள் தாமாகப் பிறந்து விடவில்லை. தாணுவதியின் ஆட்கள் மறைமுகமாகப் போட்ட தூண்டுகோலால்தான் அவை பிறந்தன. ஆம், அவர்கள் தாணுவதிக்கு வாக்களித்திருக்கிறார்களே, எப்படியும் சுந்தரத்தையும் வீணாவையும் பிரித்து இவ்வூரிலிருந்தே விரட்டி விடுவதாக. அதை நிறைவேற்ற வேண்டாமா? நிறைவேற்றிவிட்டால் அவர்களுக்குப் படி


அழகுமிக்க தோற்றம்
மெல்லிய சருமத்திற்கு சமனமூட்டவும்,
மிருதுவாகவும் வெண்மையாகவும் திகழச்
செய்வதற்கு ஒரு ஸ்னோ அவசியம். அதுதான்
"'ஹாஸலீன்' ஸ்னோ". உஷ்ணப்
பிரதேசங்களுக்கென தனி முறையில் தயாரிக்கப்
பட்டது "'ஹாஸலீன்' ஸ்னோ"
குளுமையுடன் சுகம் தருகிறது. ஏமாற்றம்
செய்ய முடியாத இதன் பாக்கிங் ஒன்றே
இதன் தூய்மைக்கு உத்தரவாதம்.
HAZELINE SNOW
"'HAZELINE' SNOW"
"'ஹாஸலீன்' ஸ்னோ"
டிரேட் மார்க்
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு



1936-ம் வருஷம் திருவனந்தபுரத்தில் ஹரிஜன ஆலயப் பிரவேச அறிவிப்புக்குப்பின் மகாத்மா காந்தி அங்கு விஜயம் செய்தார். மகாத்மாஜியுடன் திவான் ஸி. பி. யும், காலஞ்சென்ற மகாதேவ தேசாயும், ஸ்ரீமதி அமிர்தகௌரியும் காட்சி யளிக்கின்றனர்.

யளந்து வரும் அந்த மகாராசன் முகத்தில் எங்ஙனம் விழிக்க முடியும்?

விகாஸின் கொலை புங்கனூற்றுக் காலனி முழுவதையுமே ஒரு கலக்குக் கலக்கி விட்டது. குலசேகர முதலியார் இந்த அநியாயத்தைப் பொறுக்க மாட்டாதவராய், விசாரணைக்கு வந்த போலீஸ் அதிகாரிகளிடம் அவர்கள் உடனே தக்க நடவடிக்கைகள் எடுத்துக் குற்றவாளியைக் கண்டுபிடித்துத் தண்டிக்கா விட்டால் தங்களைப் போன்ற அதிகாரிகள் அனை வேலையை அரைகுறையாக விட்டுவிட்டு வேறெங்காவது மூட்டை கட்ட வேண்டியதுதான் என்று மிகக் கடுமையாக எச்சரித்து விட்டார். ஆனால் போலீசார் எவ்வளவு முயன்றும் ஓடி மறைந்துவிட்ட உண்மைக் குற்றவாளிகளின் இருப்பிடத்தை அறிய முடியவில்லை. ஊரே ஒன்றுகூடி அதை அமுக்கி விட்டதாகக் கருதிய அவர்கள் சரமாரியாகப் பலரைச் சந்தேகத்தின் மீது கைது செய்து உள்ளே தள்ளினர். ஒரு வம்புக்கும் போகாத உத்தமர்களான பலர்கூட இதனால் 'கொட்டடி வாசம்' செய்ய வேண்டியதாயிற்று. கடைசியில் பல விசாரணைகளுக்குப் பிறகுங்கூடக் குற்றவாளிகளின் இருப்பிடத்தை அறிய முடியாமற் போய்விடவே, கொலையைத் தூண்டி விட்டவர்களெனச் செந்திவேல் முருகன் கோயில் தர்மகர்த்தாவும், பூசாரியும், அவர்களது குழுவைச் சேர்ந்த வேறு சிலரும் மட்டுமே தண்டனை அடைந்தனர். கைது செய்யப்பட்டிருந்த மீதிப் பேர்கள் எல்லாரும் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். ஆயினும் இந்த விஷயம் காலனி வாசிகளிடையே ஒரு பெருத்த மனக்கசப்பை உண்டுபண்ணி விட்டது. அநாவசியமாக அவர்களில் பலர் கம்பி எண்ண நேரிட்டதல்லவா?

அவர்களுடைய மனக் கசப்பைத் தானுவதியின் ஆட்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். இதற்கெல்லாம் விஜுவும் சுந்தரமும்தான் முதற் காரணம்; அவர்கள் சமூக விதிகளுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டதால்தான் இந்த விபரீதங்கள் நிகழ்ந்தன என்று அவர்கள் மக்கள் மனத்தில் ஒரு விஷ வித்தை ஊன்றி விட்டனர்.

விஜுவும் சுந்தரமும் விகாஸின் சாவுக்குப் பின்னர் விலகி இருந்திருந்தால், காலனிவாசிகள் செந்திவேலு கோஷ்டியாரின் பசப்பலுக்கு அடிமையாகி இருக்க மாட்டார்கள். ஆனால் அவர்கள்தான் இப்பொழுது முன்னிலும் தீவிரமாகியிருந்தார்களே; முன்னிலும் அதிகமாக இழைந்து வந்தார்களே. எனவே, புங்கனூற்றுக் காலனிவாசிகள், "ஐயோ! இன்னும் ஊரில் ஏதாவது தகராறு ஏற்பட்டுவிடக் கூடாதே!" என்று மனம் பதறினர். "ஏற்படத்தான் செய்யும், ஐயா! ஒன்றென்ன? ஆயிரம் கொலைகள் ஏற்பட்டாலும் அதிசயிப்பதற்கில்லை. அவை நிகழாதிருக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. இவர்கள் இருவரையும் பிரிக்க வேண்டும். ஒன்று, அந்த மானங்கெட்டவளை டிஸ்பென்சரியை மூடச் செய்து இவ்வூரிலிருந்து விரட்ட வேண்டும்; அல்லது அந்த இன்ஜினீயர்ப் பயலை இங்கிருந்து வேறு எங்காவது மாற்றச் செய்ய வேண்டும்" என்று தானுவதியின்



ராஜாஜியும், ஸர் சி. பி. ராமசாமி அய்யரும்

ஆட்கள் சமயமறிந்து கிராம மக்களுக்குக் கடுக்காய் கொடுத்தனர்.

காலனிக்காரர்கள் மீண்டும் தங்கள் நிம்மதியை இழக்கத் தயாராக இல்லை; மீண்டும் சிறைவாசம் செய்ய விரும்பவில்லை. ஆதலால், ஊரில் பெரியவர்களான சிலர் ஒன்றுசேர்ந்து. இதற்கு என்ன செய்யலாம் என்பதை ஆலோசிக்க ஊர்க் கூட்டம் ஒன்று கூட்டினர். ஆனால் கூட்டத்தில் பலர் விணுவின் டிஸ்பென்சரியை மூடச் செய்யும் ஆலோசனையை ஏற்கவில்லை. புற வாழ்வில் அவன் எப்படி இருந்தாலும், டாக்டர் என்ற முறையில் ஊர்வாசிகளுக்கு மிகுந்த உதவி அளித்து வந்தமையால், அவனை அங்கிருந்து கிளப்பும் ஆலோசனையைக் கைவிட்டு விட்டு, பிரதம இன்ஜினியரை அணுகித் தங்கள் சங்கடத்தை விளக்கி, சுந்தரத்தை வேறு எங்கேயாவது மாற்றி விடுமாறு கேட்டுக்கொள்ளத் தீர்மானித்தனர்.

அவ்வாறே அவர்கள் ஒரு நாள் குலசேகரத்தைப் பேட்டி கண்டு தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர். விசாலவின் மரணம் காரணமாக இப்படி ஊர் முழுவதுமே விணுவுக்கும் சுந்தரத்துக்கும் எதிராகக் கிளம்பிவிடும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. ஆதலால் அவருக்கு இவ் விஷயம் பெருந் தொல்லையை அளித்தது. ஆயினும் அவர் மூலையிட்டு வளர்த்துச் செழித்தோங்கச் செய்து வந்த செடியல்லவா அவர்கள் இணைப்பு? அச்செடி பலன் தரும் முன்னர், அவரே அதைக் கிள்ளி எறிய உதவலாமா?

"இது தனிப்பட்டவர்களின் சொந்த விஷயம், ஐயா! அரசாங்கத்துக்கும் இதற்கும் எவ்விதச் சம்பந்தமும் இடையாது. நான் இதில் தலையிடவும் முடியாது. தவிர, இன்ஜினியர்களை நியமிப்பதோ, வேலையிலிருந்து தள்ளுவதோ, அல்லது ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு மாற்றுவதோ என் அதிகார எல்லைக்கு மேற்பட்ட காரியங்கள். அவற்றைக் கவனிப்பது சென்னையில் இருக்கும் மராமத்து அலுவலகம். நான் இவ்விஷயத்தில் ஒன்றும் செய்ய இயலாது" என்று கூறி அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

ஆனால், தாணுவடியின் ஆட்கள் விஷயத்தை அத்துடன் ஆறப் போட்டு விடுவார்களா? அவர்கள் உடனே பெரிய மகஜர் ஒன்றைத் தயாரித்தனர். மகஜரில், அணை நிர்மாணத்தால் தாங்கள் வீடு-வாசலை விட்டு வெளியேற நேர்ந்ததோடல்லாமல், வெளியேறிய இடத்திலும் ஓர் இன்ஜினியராலும், கெடுகெட்ட டாக்டர் அம்மாள் ஒருத்தியாலும் ஊர்க் கௌரவத்தையும் மன நிம்மதியையும் இழந்து நிற்பதாகவும், அரசாங்கம் உடனே இவ்விஷயத்தில் தலையிட்டு ஆவன செய்து தாங்கள் நிம்மதியாக வாழ வழி வகுக்க வேண்டும் என்றும் கோரியிருந்தனர். புங்கனூற்றுக் காலனி வாசிகள் அனைவரின் கையொப்பத்தையும் தாங்கிய அந்த மகஜர் மேலதிகாரியின் பார்வைக்கு வந்து சேர்ந்தது.

அப்பொழுது அந்தப்பதவியை வகித்து வந்தவர் ஒரு வயோதிகர். துரதிர்ஷ்டவசமாக அவருடைய அநுபவம் விணு-சுந்தரம் ஆகியோரின் புரட்சிக் கொள்கைக்கு முற்றிலும் எதிரானதாக இருந்தது. அவர் பழங்காலத்துக் கொள்கைகளில் ஊறிப் போனவர். விதவைகள், விதவைகளாக வீட்டுக்குள்ளேதான் அகப்பட்டுக் கிடக்க வேண்டும் என்ற கருத்தை மிகப் பலமாக ஆதரித்து வந்தவர் அவர். ஆதரித்து வந்ததோடு மட்டுமன்றி, தமது வாழ்க்கையில்கூட அதைத் தீவிரமாகக் கடைப்பிடித்து வந்தார். அவருக்கு மூன்றே மூன்று பெண்கள்தாம் சந்ததியார். அவர்கள் மூவரும் வாழ்விழந்தவர்கள். அவர்கள் முகத்தில்கூட அவர் விழிப்பதில்லை யென்றால் அவருடைய கொள்கைத் தீவிரத்தை என்னென்று சொல்வது?

அப்படிப்பட்டவரின் கைக்குப் புங்கனூற்றுக் காலனிக்காரர்களின் புகார் சென்றதும், அவர் துள்ளிக் குதித்தார். "கொண்டுவா அணை ஸ்தலத்து பைல்களை!" என்று உத்தரவு போட்டார். பைல்களைப் புரட்டிப் பார்த்தபோது விணுவுக்கு டிஸ்பென்சரி நடத்த அரசாங்கத்துக்குச் சொந்தமான வீடு ஒன்று வாடகையின்றி அளிக்கப்பட் டிருந்தது


அவர் கவனத்துக்கு வந்தது. அவ்வளவு தான்; உடனே பிரதம இன்ஜினியர் குலசேகரத்துக்கு ஓர் அவசர உத்தரவு பறந்தது. உத்தரவு கிடைத்த இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் வீணு டிஸ்பென்சரி வைத்திருக்கும் இடத்தைக் காலி செய்யச் செய்ய வேண்டும் என்று.

இந்த உத்தரவு குலசேகரத்தை மிகவும் மனம்வருந்தச் செய்ததெனினும், கடமை காரணமாக அவர் அதை நிறைவேற்றித் தான் ஆகவேண்டியதாயிற்று. அவர் வீணுவை வரவழைத்து விஷயத்தைச் சொன்னுர். "யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போல் செய்து விட்டார்கள் அம்மா, இவ்வூர்க்காரர்கள். அதன் பலனை அவர்களே அநுபவித்துக் கொள்ளட்டும். இதற்காக நீ மனம் தளர வேண்டாம். அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்துவிட்ட இந்தப் பயல்களில் யார் இனி உன் கேசவபுரத்து ஆஸ்பத்திரிக்கு வைத்தியம் செய்துகொள்ள வந்தாலும், நீ அவர்களைத் திரும்பிப் பார்க்கக் கூடாது; இதுதான் என் வேண்டுகோள். அதோடு, இந்தச் சம்பவத்தால் நீ மேற்கொள்ள இருக்கும் புரட்சி வாழ்விலிருந்தும் பின்வாங்கி விடாதே. அதற்கு என் உதவிகள் என்றும் உங்களுக்குக் கிட்டும். இறைவன் நியாயவான்; அவர் அருளும் உங்களுக்கு எப்போதும் துணை நிற்கும்" என்று உள்ளம் கனிந்து கூறினுர்.

வீணு இதைக் கேட்டுப் பதற்றமடையவில்லை; வெறி கொள்ளவில்லை. ஒரு தடவை பதற்றமும் வெறியும் கொண்டு ஓர் உத்தம சகோதரனைப் பறிகொடுத்து விட்ட பின்னர் அவள் எந்த விதமான எதிர்ப்பையும் அமைதியுடன் ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவம் பெற்று விட்டாள். உத்தரவுப்படி மறுநாள் டிஸ்பென்சரி இருக்கும் கட்டடத்தைக் காலி செய்து விடுவதாக அவள் உறுதி கூறிவிட்டுப் போய்விட்டாள்.

அன்று இரவு அணை ஸ்தலத்தில் வேலையை முடித்துக்கொண்டு தனது காரோடு டிஸ்பென்சரிக்கு வந்த சுந்தரம் அவளுடைய டிஸ்பென்சரி இன்னும் திறந்திருப்பதையும், வண்டிக்காரன் மாடசாமி அங்கிருந்து சாமான்களை எடுத்து வந்து வண்டியில் ஏற்றிக்கொண்டிருப்பதையும் கண்டு திகைப்படைந்தான். அவன் உள்ளே விரைந்து வந்து, "என்ன வீணு? ஏன் சாமான்களையெல்லாம் அப்புறப்படுத்திக் கொண்டிருக்கிருய்?" என்று கேட்டான்.

"புங்கனூற்றுக் காலனியில் இன்றுடன் என் வைத்திய வேலை முடிந்து விட்டது"



ஸர் சி. பி.யும், பாரதப் பிரதமரும்

என்று சோகப் புன்சிரிப்புடன் பதிலளித்தாள் வீணு.

"என்ன?"

அவள் அவனுக்கு நடந்ததை விளக்கியதும், சுந்தரம் கொதிப்படைந்தான். "முடியாது. இது நடக்கக் கூடாது. இவர்களுக்கு நாம் தோற்று ஓடக் கூடாது. நான் இப்பொழுதே பிரதம இன்ஜினியரிடம் போய்ப் பேசுகிறேன்" என்று கூறிவிட்டு அவன் புறப்பட்டான்.

வீணு அவனைத் தடுத்து, "நாம் புறமுதுகிட்டு ஓடவில்லை, சுந்தர்! நமது குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள எது வந்தாலும் சகித்துக் கொள்ளுவது என்று உறுதி பூண்டோமே, அதுதான் இப்பொழுது நிறைவேற்றப் படுகிறது. தவிர, பிரதம இன்ஜினியர் இவ்விஷயத்தில் நமக்கு எவ்வித உதவியும் செய்ய முடியாது. அவர் மேலிடத்து உத்தரவைத்தான் நிறைவேற்றி யிருக்கிறுர்" என்று அவனைச் சமாதானப் படுத்த முயன்றுள். ஆனல் சுந்தரத்தின் பதற்றம் இதனுல் தணிந்து விடவில்லை. அவன் அவளுடைய சமாதான மொழிகளைக் கேட்டுக்கொண்டு அங்கு நிற்கவும் இல்லை. வேகமாக வெளியே வந்து காரை எடுத்துக்கொண்டு நேரே பிரதம இன்ஜினியரின் வீட்டுக்குச் சென்றுன்.

"இது அநியாயம் ஸார்! எங்களுடைய புரட்சிக்கு எல்லா உதவிகளையும் அளிப்பதாகக் கூறிவிட்டு, நீங்களே வீணுவை இங்கேயிருந்து கிளப்புவது நன்றாக இல்லை" என்று படபடப்பாக இரைந்த அவனை அமைதியுடன் நோக்கினுர் குலசேகரம்.

பிறகு சொன்னுர்: "இது அநியாயந்தான், சுந்தரம்! அதற்கு நானும் உடந்தையாக இருக்க நேரிட்டிருப்பதும் உண்மையே. ஆனல் புரட்சி வாழ்வில் ஈடுபடுவதற்கு முன்பு நான் உங்களுக்கு விடுத்துள்ள எச்சரிக்கைகளையும் சிறிது நினைவு

சிரிக்காதே!

எதை நிறுத்திக் கொல்ல ?

கணவன் : நம் இரண்டு பேரும் அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டு பிறகு சமாதானம் பண்ணிக் கொள்வது எனக்கு வர வரப் பிடிக்கவே இல்லை !

மனைவி : சரி ! அப்படின்னா இனிமேல் சமாதானம் செய்து கொள்வதை நிறுத்திக் கொள்வோம்.

முதலையாளி !

சிப்பந்தி : சம்பள உயர்வு வேண்டும். வேலை ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறது. நான்கு பேரின் வேலையை நானே செய்கிறேன் !

முதலாளி : சம்பள உயர்வு கொடுப்பதற்கில்லை. வேணுமென்றால் நான்கு பேர் என்றீர்களே மிச்சம் மூன்று பேர்கள் யார் என்று சொன்னால் அவர்களை வேலையை விட்டு நீக்கி விடுகிறேன் !

மிருகக் காட்சிச் சாலையில்

சர்க்கஸ் முதலாளி : இந்தப் புலி என் மனைவியை விழுங்கி விட்டது. அன்றிலிருந்து இந்தப் புலி நான் சொன்னபடி கேட்பதில்லை !

தேவை !

"அற்புதமாகப் பேசத் தெரிந்த ஒரு பிரசங்கிக்கு ஒரு மேடையும் கேட்பதற்கு ஜனங்களும் தேவை."

வால் நட்சத்திரம் !

"சார் ! சினிமாவில் இவர் அனுமார் வேஷம் போட்டு நடித்தவர்."

"ஓ, அப்படியா ! இவர் ஒரு வால் நட்சத்திரம் என்று சொல்லுங்கள் !"

முடிவு தெரிந்தது !

வீட்டில் கணவன் மனைவிக்குச் சண்டை நடந்தது. பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லோரும் சுவர் ஓரமாக நின்று வேடிக்கை பார்த்தார்கள். சண்டை முடிந்ததும் அவர்கள் கலையவில்லை. உடனே சண்டையிட்ட தம்பதிகள் தேசிய கீதம் பாடியவுடன் கூட்டம் கலைந்துவிட்டது.

ஏமாளி !

"நல்லவர்களை ஏமாற்றலாமா !"

"பின்னே என்ன செய்வது ? பொல்லாதவர்களை ஏமாற்ற முடியவில்லையே!"



கூர்ந்துகொள், அப்பா! அவ்வாழ்வில் புக முயலுபவர்களுக்குப் பல காலம், பல சோதனைகள், பல திக்கிலிருந்தும் கிளம்பிக் கொண்டே இருக்கும் என்று நான் கூறவில்லையா? அத்தகைய சோதனைகளில் ஒன்றுதான் இது. ஆதலால், இதைக் கண்டு பதற்றமடையாதே. அமைதியாக வருவதை ஏற்றுக்கொண்டு போரைத் தொடர்ந்து நடத்து. மீண்டும் சொல்கிறேன் : நீங்கள் மேற்கொள்ளப் போகும் வாழ்க்கையில் இன்னும் எத்தனையோ கடுமையான சோதனைகளெல்லாம் ஏற்படப் போகின்றன. இது வெறும் ஆரம்பந்தான். எல்லாச் சோதனைகளையுமே நீங்கள் எதிர்த்து வெற்றி காண முடியாது. எதிர்ப்பது சாத்தியமும் இல்லை. கூடியவரையில் உங்கள் கொள்கைக்குப் பங்கம் வராமல் ஒதுக்கக் கூடியவைகளை ஒதுக்கிவிட்டு, உங்கள் வாழ்வை நேரடியாகப் பாதிக்கக் கூடியவைகளை மட்டுமே எதிர்க்க வேண்டும்..." என்று அவர் அவனுக்குப் பலப்பல விதமான புத்திமதிகளை எடுத்துச் சொன்னார். ஆனால் அவனுக்கு இருந்த வேகத்தில் அவையெல்லாம் அவன் காதில் விழவில்லை. அவன் உள்ளத்தில் படவில்லை.

சுமார் ஒரு மணி நேரம் குலசேகரத்தோடு வாதாடிவிட்டுச் சுந்தரம் டிஸ்பென்சரிக்குத் திரும்பியபோது, வீணா சாமான்களை வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டு அவன் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்தான்.

சுந்தரம் வேகத்தோடு அவளிடம் வந்து, "புறப்படு, வீணா ! இனி உனக்கும் இந்தக் காலனியில் வேலை இல்லை; எனக்கும் இல்லை" என்றான்.

வீணா திகைப்புடன் அவன் முகத்தை ஏறிட்டு நோக்கி, "நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள், சுந்தர் ?" என்று கேட்டான்.

"ஆம். நான் வேலையை ராஜினாமாச் செய்து விட்டேன். நீ இல்லாமல் என்னால் இந்த இடத்தில் வேலை செய்யமுடியாது" என்றான் சுந்தரம்.

இதைக் கேட்டதும் வீணாவுக்குத் தலையைக் 'கிர்'ரென்று சுற்றிக் கொண்டு வந்தது. அவன் மயங்கிக் கீழே விழுந்து விடாதிருப்பதற்காக அவளிடம் நெருங்கிச் சென்று பற்றிக் கொண்டான் சுந்தரம். (தொடரும்)

சென்னை: பாரகன், பிரபாத், சரஸ்வதி & நூர்ஜஹான்
மற்றும் தென்னாடெங்கும்



கண் திறந்தது

டைரக்ஷன்· K.V.சீனிவாசன்

BAKTHA

நாராயணன் கம்பெனி தயாரிப்பு



மழைக் காலம் முடிந்தமாதிரிதான்...

புதிய துணிகளை வாங்குவதற்கு இதுவே சமயம்!

பின்னி துணிகளிலிருந்து தைக்கப்பட்ட ஆடைகள் எப்போதும் எடுப்பாகவும் அதிககாலம் நீடித்தும் இருக்கும்.

ஒரு மனிதன் அவன் அணியும் ஆடைகளிலிருந்து மதிப்பிடப் படுகிறான். தளர்ந்துபோன 'ஸூட்'டினாலோ அல்லது அடிக்கடி கிழியும் 'ஷர்ட்'டினாலோ உங்களுக்குக் கிட்டவரும் வாய்ப்புக்களை இழக்க நேரிடலாம். பின்னி துணிகளை வாங்குங்கள். அவை அதிக காலம் நீடிக்கும். பல சலவைகளுக்குப் பிறகும் அவை எடுப்பாகக் காணப்படுகின்றன!



ஹருவா

சுருக்கமில்லாத ஹருவா துணி உற்பத்தி செய்வதற்கு பின்னி கையாளும் முறை பிரசித்திப்பெற்றது.

டஸ்ஸோர்

இலேசாகவும், குளுமையாகவும் இதமாகவுமுள்ள இந்த 'ஸூட்டிங்கு'களை எந்த இடத்திலும் உபயோகிக்கலாம்.

லஸ்டரின்

இந்த சிறந்த 'ஷர்ட்டிங்' பல சலவைகளுக்குப் பிறகும் கூட புதியதாகவே காணப்படுகின்றது.

ட்ரில்

உங்கள் தையற்காரரைக் கேளுங்கள், பின்னியின் ட்ரில்தான் நீங்கள் வாங்கக்கூடியது என்பார்.

பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்

மானேஜிங் ஏஜெண்டுகள்:

பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்.

ஒற்றியூர் உறை உத்தமன்

சம்சாரம் ஒரு பெரிய சாகரம். என்றாலும் அச்சாகரத்தில் புகுந்து குளிக்காதவர்கள் இல்லை. அப்படிப் புகுபவர்களில் அலைகளால் மோதுண்டு சாகரத்திலேயே அமிழ்ந்து விடுகிறவர்கள்தான் அனந்தம். ஏதோ ஒரு சிலரே, இச்சாகரத்தில் நீந்தவும், முக்குளித்து வெளியே வரவும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க, இச்சாகரத்தைக் கடத்தலோ அருமையிலும் அருமை. அதற்குத் தக்கதொரு தோணி வேண்டும். தோணியை வலிக்க நல்ல வலுவான துடுப்பு வேண்டும். இப்படி யெல்லாம் சென்றாலும் சாகரத்திலே பாறைகள் வேறே மறைந்திருக்கும்; கடும் புயல் வேறே அடிக்கும். இதை யெல்லாம் வெற்றி கண்டு வாழ்வின் பேறு பெறுவதற்குத் துணையாயிருப்பது இறை உணர்வு. அந்த இறை உணர்வில் லயித்து, இறை வழிபாட்டில் இணைப்பவர்களே 'மனிதரில் தலையாய மனிதர்' இப்படியெல்லாம் விரித்துச் சொல்வது நானல்ல. சமய குரவரில் நல்ல பழுத்த அனுபவம் உடையவரான அப்பர் அடிகளே சொல்கிறார். அதுவும் கடற்கரையில் உள்ள திருவொற்றியூர் சென்று அங்குள்ள ஆதி மூர்த்தியைக் கண்டு வணங்கியபொழுது சொல்கிறார். ஒற்றியூரை ஒற்றியுள்ள கடலைக் கண்டதும் கடற்கரையில் நின்ற அப்பர் பாடுகிறார்.

மனம் எனும் தோணிபற்றி
மதி எனும் கோலை ஊன்றி
சினம் எனும் சரக்கை ஏற்றி
செறி கடல் ஓடும் போது
மதன் எனும் பாறை தாக்கி
மறியும் போது அறிய ஒண்ணாது
உனை உனும் உணர்வை நல்காய்
ஒற்றியூர் உடைய கோவே.

என்று. ஆம்! இறை உணர்வு மக்களுக்கு எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்திருக்கிறார் அவர். ஆனால் அந்த உணர்வைப் பெறுவதற்கும் அவன் அருளையே நாடுகிறார்.

இறைவனை உன்னுதற்கு அப்பர் அருள் வேண்டி நின்றார். இறைவனையே உண்டு சுவைத்து ருசி கண்டவராக நிற்கிறார் பட்டினத்தடிகள். திருவெண்காட்டிலே செல்வச் சீமானாகப் பிறந்து வளர்ந்து, இறையனும் மருதவாணனையே மகனாகப் பெற்று, அம்மகன் 'காதற்ற ஊசியும் வாராதுகாண் உன் கடை வழிக்கே' என்று உணர்த்த, அதனால், மாடு மனை, மக்கள் சுற்றம் எல்லாம் துறந்து, பல இடங்களில் அலைந்து கடைசியில் ஒற்றியூர் கடற்கரை வந்து சேர்கிறார். அங்கு மூலைத் திருந்த பேய்க்கரும்பும் இனிப்பதை உணர்கிறார். காணும் பொருளில் எல்லாம் இறைவனைக் காணும் பேறு பெற்ற அவர், அந்தக் கரும்பிலும் இறைவனையே காணுகிறார். 'கனியினும் கட்டிபட்ட கரும்பினும் இனியனாக இருப்பவன் இடை மருதன்' என்பதை விடக் கரும்பையே கடவுளாகக் காணவும், அந்தக் கரும்பையே சுவைக்கவும் பேறு பெறுகிறார். தாம் பெற்ற அனுபவத்தையே எடுத்துச் சொல்கிறார்.

கண்டம் கரியதாய்
கண் மூன்று உடையதாய்
அண்டத்தைப் போல
அழகியதாய் - தொண்டர்
உடல் உருகத் தித்திக்கும்
ஓங்கு புகழ் ஒற்றிக்
கடல் அருகே நிற்கும் கரும்பு

என்பதுதான் பட்டினத்தார் அனுபவம்: அந்தக் கரும்பைச் சுவைக்க விரும்புபவர் எல்லோரும் சென்று தொழவேண்டிய தலமே திரு ஒற்றியூர்.

இந்தத் திரு ஒற்றியூர் சென்னைக்கு வடக்கே ஆறு, ஏழு மைல் தொலைவில் உள்ள ஒரு சிறிய ஊர். கடற்கரையை அடுத்திருக்கிறது. சென்னையின் ஒரு பகுதியான வண்ணாரப் பேட்டையைக் கடந்து காரில் சென்றால் இங்குள்ள கோயில் வாயில் வந்து சேரலாம். கோயிலுக்கு வடபுறம் பெரியதொரு தெப்பக் குளம் இருக்கிறது. குளம் இருக்கிறதே ஒழிய அதில் தண்ணீர் இருப்பது அருமை. குளக் கரையில் தெற்கு நோக்கிய ஒரு பெட்டிக் கடை. அந்தக் கடையை அடுத்து ஒரு சின்னஞ் சிறு சிலை. அதைக் கரும்பேந்திய பட்டினத் தாரோ என்று எண்ணத் தோன்றும். இல்லை, அது காந்திஜியின் சிலை யென்பார்கள். (ஐயகோ! காந்திஜியின் ஜாதக விசேஷமே அப்படி. எவ்வளவு பிரபல சிற்பி உருவாக்கினாலும் அவர் சரியாக உருவாவதே இல்லை. காரணம் அவர்களால் அவரது உள்ளத்தில் வீசிய உண்மை ஒளியை உணர முடிவதில்லை; அவ்வளவுதான்; சிற்பியின் திறமைக்குப் பழுது சொல்லுதல் கூடாது.) காந்திஜியானாலும் பட்டினத்தடிகளானாலும் இருவரும் வணக்கத்துக்கு உரியவர்கள்தாமே. ஆதலால் அவரை வணங்கிவிட்டு, இனி கோயிலுக்குள் போகலாம். கோயிலினுள் சென்றதும் நமக்கு முன் எதிர் நிற்பது துவஜ ஸ்தம்பமும், நந்தி மண்டபமும் அல்ல. அவை யெல்லாம் ஒரு மகிழ மரத்துக்குப் பிரதான இடம் கொடுத்துவிட்டு, தென்புறமாக ஒதுங்கி நிற்கும். இது என்ன இந்த இடத்தில் இந்த மகிழடிக்கு இவ்வளவு மகத்துவம் என்று எண்ணுவோம் நாம். அதற்கு விளக்கம் பெறுவோம் அங்குள்ள அர்ச்சகரிடம். உக்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

களுக்குத் தெரியாதா? இங்கு மாசி மகத்தில் நடக்கும் மகிழடி சேவையைப் பற்றி என்று விவரிப்பார். அவர் விவரிக்கும் சரிதத்தின் முழு விவரமும் தெரிவிக்கப் பெரிய புராணம் பாடிய சேக்கிழார் விரைந்து வருவார்.

வன் தொண்டராம் சுந்தரரை இறைவன் திருவெண்ணெய் நல்லூரிலே தடுத்து ஆட்கொள்கிறார். அதன்பின் அவர் திருவாரூர் சென்று அங்குள்ள பாவையாரை மணக்கிறார். பின்னர் பல தலங்கள் சென்று இறைவனைப் பாடி வணங்கிவிட்டுத் திருவொற்றியூர் வருகிறார். அங்கு இவருக்காகவே பிறந்து வளர்கிறாள் ஒரு பெண், சங்கிலி என்ற பெயரோடு. கோயிலில் அவளைக் கண்டு காதலிக்கிறார் சுந்தரர். இவர் அப்படி ஒன்றும் பிரமாத ஏக பத்தினி விரதர் அல்ல. இது அவரது தோழராம் இறைவனுக்குமே தெரியும். ஆதலால், தம் தோழராம் ஆதிமூர்த்தியின் அருளை நாடுகிறார்; சங்கிலியை மணக்க. அவரும் சங்கிலியிடம் சென்று, 'சால என்பால் அன்புடையவனை சுந்தரன் உன்னை இரக்கின்றான், நீ அவனை மனத்தால் அணைவாய் மகிழ்ந்து' என்கிறார். அவளும் சம்மதிக்கிறாள். ஆனால் நிபந்தனை விதிக்கின்றாள், 'தன்னை ஒருகாலும் பிரியேன்' என்று சுந்தரர் சத்தியம் செய்ய வேண்டும் என்று. காரிய சித்தியிலேயே கண்ணாய் இருக்கும் சுந்தரரோ அதற்கும் சரி என்கிறார். இறைவனோடு மிக்க உரிமை கொண்டாடும் சுந்தரர் இதற்கும் ஒரு வழி கண்டு பிடிக்கின்றார். இறைவனிடமே 'ஐயனே! நான் இந்த சத்தியத்தில் நிலைத்து நிற்கப் போவதில்லை. ஆதலால் நான் சங்கிலியுடன் உன் சந்நிதிக்குச் சத்தியம் செய்ய வரும்போது, நீ கோயிலினுள் இராதே. கோயில் பிராகாரத்தில் உள்ள மகிழ மரத்தடிக்குச் சென்றுவிடு. அப்படிச் சென்றுவிட்டால் என் சத்தியத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய அவசியம் இருக்காதல்லவா' என்கிறார். இழுத்த இழுப்புக்கெல்லாம் இறங்கும் இறைவனும் சரி என்கிறார். ஆனால் ஒரு சிறு குறும்பு மாத்திரம் செய்கிறார். அன்றிரவே சங்கிலியின் கனவில் தோன்றி ''நங்கையே! நாளை ஆரூரன் ஆன் உரைக்க உன்னையும் அழைத்துக்கொண்டு என் சந்நிதிக்கு வருவான். நீ சந்நிதியில் சத்தியம் செய்யவேண்டாம், பக்கத்தில் உள்ள




மகிழடி

கொங்கலார் பூ மகிழின் கீழ் சத்தியம் செய்தால் போதும் என்று சொல்லு' என்று கூறி மறைகிறார். அவளும் மறுநாட் காலை அப்படியே சொல்கிறாள். என்ன செய்வார், இந்த முனைப்பாடிப் புரவலனும் சுந்தரர். இறைவன் செய்யும் திருவிளையாட்டை நினைந்து, 'மூவாத திரு மகிழை முக்காலும் வலம் வந்து மேவாது இங்கு யான் அகலேன்' என்று சத்தியம் செய்து கொடுக்கிறார், சங்கிலிக்கு. அன்று மகிழடிக்கு வந்த ஆதி புரீசுவரர் அங்கேயே நிலைத்து விடுகிறார் அன்று முதல். அதனால் இந்த மகிழ மரத்துக்கே ஒரு சாந்நித்யம், அதனையே இறைவன் திருவுரு என்று வழிபாடு நடக்கிறது. மகிழடி சேவை இன்றும் பெரியதொரு திருநாளாகவே கொண்டாடப்படுகிறது. எவ்வளவு அரிய உண்மையை அழகான ஒரு கற்பனை விளக்குகிறது. கல்லிலும், புல்லிலும், மண்ணிலும், மரத்திலும் இறைவன் என்றுமே நிலைத்திருக்கிறான் என்ற அரிய உண்மையை விளக்க எழுந்த கதையாக இந்த மகிழடி சேவையைக் கொண்டால் எத்தனை இன்பம் நமது உள்ளத்துக்கு. சத்தியம் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஒன்றும் நமக்கு இல்லாவிட்டாலும் நாமும் இந்த மகிழ மரத்தை மூன்று சுற்றுச் சுற்றிவணங்கிவிட்டு மேல் நடக்கலாம்.

இந்த மகிழ மரத்தை ஒரு சுற்றுச் சுற்று முன்பே நம் கண் முன் ஓர் அழகிய வடிவம் தோன்றும். அழகிய சிற்பம் என்பதை விட, அபூர்வம் என்பதிலேயே அதில் ஒரு கவர்ச்சி. பிரதான கோயிலின் கோஷ்ட விக்கிரகமாக வடக்கு நோக்கி இருப்பவர் ஏகபாத திரிமூர்த்தி. தமிழ் நாட்டிலே இச் சிற்ப வடிவம் இரண்டே இரண்டு இடத்தில்தான். ஒன்று திருவானைக்காவில், மற்றொன்று திருவொற்றியூரில். திருவானைக்காவில் உள்ளதை விடப் பெரியவராக, அழகுடையவராக இருப்பவரே திரு ஒற்றியூரில் உள்ள ஏகபாத திரிமூர்த்தி. பிரமனும் விஷ்ணுவும் சிவனிடத்தே அடக்கம் என்னும் சிவபரத்துவத்தை விளக்க எழுந்த திரு உருவே இது. மான் மழுவேந்தி நிற்கும் சிவனுக்கு ஒரே திருப்பாதம். அவர் உருவில் இருந்து கிளைத்து எழும், பிரமன், விஷ்ணுவுக்குமே ஒவ்வொரு திருப்பாதமே. யோக நிலையில் சிவன் நின்றால் கூப்பிய கையராய் மற்றவர் இருவரும் நிற்கிறார்கள். எல்லாம் ஒரே கல்லில் மூன்றடி உயரத்தில் சிற்ப உலகிலேயே ஓர் அதிசய உருவாக இருக்கிறது. இந்த அபூர்வ வடிவைக் காண்பது உங்களுக்கு எளிதாக இருக்கிறது பக்கத்தில் உள்ள படத்தின் மூலம்.

மகிழடியில் உள்ள ஆதி மூர்த்தியையும் அதனை அடுத்த கோஷ்ட விக்கிரகமாக எழுந்தருளியிருக்கும் ஏகபாத திருமூர்த்தியையும் வணங்கிவிட்டு இனி பிரதான கோயிலினுள் நுழையலாம். இக் கோயிலில் உள்ள லிங்கம் புற்று வடிவமாக இருக்கிறது. இவரையே படம்பக்கநாதர் என்கிறார்கள். பழைய பெயர் ஆதிபுரீசுவரர். அவர்தான் இன்று மகிழடிக்கு வந்து கோயில் கொண்டுவிட்டாரே! இந்த ஆதிமூர்த்தியாம் படம்பக்கநாதரையே தேவாரம் பாடிய மூவரும் பாடித் துதித்திருக்கிறார்கள். 'விழிதரும்


SUDHA
சுதா வனஸ்பதி
கவர்ன்மென்ட் ஹைட்ரோஜனேஷன் பாக்டரி
கள்ளிக்கோட்டை—கேரளா



ஏகபாத திரிமூர்த்தி

நீரும் மண்ணும் விசும்பொடு அனல் காலும் ஆகி, அளிதரு பேரருளாளர் அரனுகிய ஆதி மூர்த்தி' என்று சம்பந்தரும், 'உள்ளத்துள் ஒளியும் ஆகும் ஒற்றி யூர் உடையகோ' என்று அப்பரும் பாடியவரையே, 'பத்தும் ஒலியும் பயிலும் பாவை சிந்தை கவர்வார் செந்தீ வண்ணர்' என்று சுந்தரர் பாடுகிறார். இந்த ஆதிமூர்த்தியின் அருமைத் துணைவியாம் வடிவுடை அம்மைக்குத் தனிச் சந்நிதி. அது கோயில் வடகிழக்கு மூலையில் இருக்கிறது. இது தவிர புதுப்பிக்கப்பட்ட கோயில் (ஆம்! அழகற்ற திருவுருவங்களாலும் இரும்புக் கம்பியும் கிராதிகளாலும் உருவானது) ஒன்று கோயிலின் மேலப் பிராகாரத்தில் இருக்கிறது. கோயிலுக்குள்ளேயே வடக்கு நோக்கிய காளியம்மையும் அவள் முன் ஒரு பலிபீடமும் இருக்கின்றன. பலி கொடுப்பதெல்லாம் இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று அறிகிறோம். அங்கு தரும் குங்குமப் பிரசாதத்தையும் பெற்றுக்கொண்டு திரும்பலாம் வந்த வழி நோக்கி.

இத்தலம் சம்பந்தர் காலமாகிய கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்தே பிரசித்தியடைந்திருக்கிறது. கோயிலில் திருவிளக்குத் தொண்டு செய்த கலிய நாயனாரது அவதாரஸ்தலம் இது. பல சோழ மன்னர்கள் இக் கோயிலைக் கட்டவும், இக் கோயிலில் வழிபாடுகள் நடக்கவும் போதிய நிலபுலன்களை மான்யமாக விட்டிருக்கிறார்கள். கோயிலில் பல உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றன. அவைகளை யெல்லாம் நடத்தி வைக்கச் சோழ மன்னர்களே இவ்வூருக்கு வந்திருக்கிறார்கள். இரண்டாம் ராஜராஜன், தான் பட்டத்துக்கு வந்த ஒன்பதாம் ஆண்டிலே இக் கோயிலில் நடந்த பங்குனி உத்தர உத்சவத்துக்கு நேரில் வந்திருந்தான் என்று கோயிலின் இரண்டாவது பிராகாரத்தின் கிழக்குச் சுவரில் உள்ள கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இவனுக்குப் பின்னால் பட்டத்துக்கு வந்த மூன்றும் குலோத்துங்கனும் இங்கு வந்து ராஜ ராஜன் திரு மண்டபத்திலிருந்து ஆனி உற்சவம் பார்த்தான் என்றும் அங்கு ஒரு தர்பாரே நடத்தினான் என்றும் வரலாறு. இப்படி யெல்லாம் சோழ மன்னர்களால் பாராட்டப்பட்ட இக் கோயில் ஒரு பெரிய கலைக் கழகமாகவே விளங்கியிருக்கிறது அந்நாளில். இலக்கணம், தர்க்கம், கலை, ஞானம் எல்லாம் இங்கே கற்பிக்கப்பட்டிருக்கின்றன. ராஜேந்திர சோழன் பெயராலும், குலோத்துங்க சோழன் பெயராலும் ஏற்பட்ட மடங்களில் எல்லாம் நல்ல உணவு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படித் தமிழ் பரப்பவும் கலை வளர்க்கவும் ஒரு நல்ல கலைப் பள்ளியாகவே இருந்திருக்கிறது இத்தலம்.

இத்தனை விஷயங்கள் தெரிந்தாலும் இன்னும் ஒரு குறை வாசகர்களுக்கு இருக்கவே செய்யும். திரு ஒற்றியூர் என்றால் பட்டினத்தார் ஞாபகத்துக்கு வருகிறாரே அவருடைய ஞாபகச் சின்னம் ஒன்றும் இல்லையா இங்கே என்று கேட்கத் தோன்றும். ஓ, அதுவா! பட்டினத்தார் சமாதியையா கேட்கிறீர்கள் என்று சொல்லி ஊரில் உள்ளவர்கள், கடற்கரைப் பக்கம் கையைக் காட்டுவார்கள். நாம் அங்கு சென்றால் செல்லும் வழியிலே வலக் கைப்பக்கம் ஒரே சமாதிக் கூட்டங்கள் தென்படும். அங்கு சென்றால் நகரக் கொட்டகையும் கள்ளிக்கோட்டை ஓடும் வேய்ந்த ஒரு சிறு கட்டிடம் தெரியும். அங்கு தான் பட்டினத்தார் மாடு மேய்க்கும் பையன்களுடன் விளையாடி, சாலுக்குள் மறைந்து சமாதி அடைந்தார் என்பதை விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம். கடல் அருகே நிற்கும் கரும்பைச் சுவைத்த அவரது திரு உருவம் செப்புச் சிலைவடிவில் இருக்கும் கரும்பேந்திய கையராய் அவர் நிற்பார் அங்கே. அவரைத் தொழுதுவிட்டு வெளியே வந்து வலது பக்கம் நோக்கினால் அங்கு ஒருகட்டிடம். கட்டிட வாயிலில் உள்ள போர்டைப் பார்த்தால் அதிசயிப்போம். காரணம் அது வட்டார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைந்த, மகப்பேறு மருத்துவ இல்லம் ஆகும். 'பார் அனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் யாரும் துறத்தல் அரிது அரிது' என்று பறைசாற்றும் பட்டினத்தார் சமாதியின் பக்கத்திலோ மகப்பேறு மருத்துவ இல்லம் என்று வியப்போம். அதை அங்கு நிறுவிய அன்பர்களின் கலாரசனையைக் கண்டு சிரிப்போம். ஒரே ஒரு சமாதானம்—பிறந்த பின் தானே துறக்கும் எண்ணம். ஆதலால் பிறவியும் துறவும் அடுத்தடுத்து வருவது வாழ்வில் சகஜந்தான் என்று தேறிக் கொள்ளலாம்.

மேலான வாழ்க்கையை நடத்த விரும்பினால் இதைப் படித்துப் பாருங்கள்



இன்றைய உலகில் மேலான வாழ்க்கை நடத்த எவ்வளவோ வசதிகள் இருக்கின்றன. ஆனால் எவ்வளவோ பேர்கள் பழங்கால மூடக்கொள்கைகளைக் கடைப்பிடித்துக்கொண்டு இந்த வசதிகளையும் வாய்ப்புகளையும் பயன்படுத்தாமல் வீணாக்கிக்கொள்ளுகிறார்கள்.

உதாரணத்திற்கு உணவின் விஷயத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். திடகாத்திரமாகவும் ஆரோக்கியத்துடனும் இருக்க ஒவ்வொருவருக்கும் சாதாரணத்துக்கு குறைந்த பக்ஷம் இரண்டு அவுன்ஸாவது கொழுப்புச் சத்து தேவைப்படுகிறது என்று விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர். இந்தக் கொழுப்பு வனஸ்பதி மூலம் எளிதில் கிடைக்கும். இருந்தும், பலபேர்கள் வனஸ்பதியில் சமையல் செய்ய அச்சப்படுகிறார்கள். இந்த சுத்தமான தாவரக்கொழுப்பு ஏதோ இந்தியாவில் மட்டுமே தயாரிக்கப்படுகிறதுஎன்பது இவர்கள் எண்ணம். ஆனால் உண்மை என்னவென்றால் உலகெங்கும் ஆரோக்கியமான வாழ்க்கை நடத்துபவர்கள் சமையலுக்கு வனஸ்பதியையே உபயோகிக்கிறார்கள். டென்மார்க், ஹாலந்து, அமெரிக்கா போன்ற வெண்ணெய் ஏராளமாக உற்பத்தியாகும் மேல்நாடுகளில்கூட வெண்ணெயைவிட அதிக அளவில் வனஸ்பதி போன்ற கொழுப்புகளையே உபயோகிக்கிறார்கள். ஏனென்றால் வனஸ்பதி போன்ற தாவரக்கொழுப்புகள், பால்க் கொழுப்புகளைப் போலவே போஷாக்கு வாய்ந்தவை, ஆரோக்கியமளிப்பவை, மற்றும் சிக்கனமானவை என்று அவர்களுக்குத் தெரியும்.

சுத்தமும் போஷாக்கானது — முக்கிய விட்டமின் சேர்ந்தது

வனஸ்பதி, கடலை எண்ணெய் மற்றும் கல்லெண்ணெயிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இந்த எண்ணெய்களை சுகாதாரத் தேவைப்படி சுத்தமான நவீன தொழிற்சாலைகளில் கடுமையான கட்டுப்பாடுகளின்கீழ் சுத்தம்செய்து வனஸ்பதி தயாரிக்கப்படுகிறது. ஆகவே அது தூய்மையாகவும் போஷாக்கு வாய்ந்ததாகவும் உங்களுக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம். மேலும், ஒவ்வொரு அவுன்ஸ் வனஸ்பதியிலும் 700 இன்டர்நேஷனல் யூனிட் விட்டமின் 'ஏ' சேர்க்கப்பட்டுள்ளது. விட்டமின் 'ஏ' மிளிரும் சரும ஆரோக்கியத்திற்கும் கூர்மையான பார்வைக்கும் இன்றியமையாதது.

மேலான வாழ்க்கை நடத்துபவர்கள் சமையலுக்கு வனஸ்பதியையே உபயோகிக்கிறார்கள். மேலான வாழ்க்கை நடத்த விரும்பும் நீங்களும் வனஸ்பதியை உபயோகிக்கத் தொடங்கலாமே!

வனஸ்பதி — இல்லாளுக்கு வரப்பிரசாதம்

தி வனஸ்பதி மான்யுபாக்சரேர்ஸ் அஸோஸியேஷன் ஆப் இந்தியா ஸ்தாபனத்தினரால் வெளியிடப்பட்டது

மன்னிப்பு

ஸ்ரீவத்ஸன்

இரவு மணி பத்து இருக்கும். பக்கத்துக் கிராமங்களுக்குப் போய் விட்டு ரயில்வே லைன் கரை வழியாகவே ஊரை நோக்கித் திரும்பி வந்து கொண்டிருந்தார் பிரபாகரன்.

எதிரே சென்னை செல்லும் திருவனந்தபுரம் பாஸஞ்சர் அதற்கு முதல் ஸ்டேஷனில் நிற்காததால் வேகமாக ஜங்ஷனை நோக்கி வந்து கொண்டிருந்தது. நான்கு தப்படி போனால் கிட்டத்தட்டக் கால் மைல் நீளமுள்ள ரயில்வேபாலம். கீழே ஒரு காட்டாறு ஓடிக் கொண்டிருக்கிறது. பாலத்தை இப்போது கடந்தால் உயிருக்கு ஆபத்து என்று அவர் பாலத்தைக் கடக்காமல் சற்று ஒதுங்கிப் போய் நின்று கொண்டார்.

ஒதுங்கி நின்றவர் இஞ்சினின் வெளிச்சத்தில் யாரோ பாலத்தின்மீது நடந்து போய்க் கொண்டிருந்து திடீரென்று பாலத்தின்மீது இருப்புப் பாதையில் தலையை வைத்துப் படுத்துக் கொள்வதைப் பார்த்தார்.

அவர் வெகு வேகமாகப் பாலத்தின்மீது ஓடினார். இன்னும் சிறிது நேரம் சென்றால் ரயில் அவரையும் அந்த நபரையும் அரைத்து விடும். கிட்ட நெருங்கிப் பார்த்தார். பதினேழு, பதினெட்டு வயது உள்ள வாலிபன்.

அந்த ஆளைக் கையைப் பிடித்து இழுத்தார். அவனோ, "என்னை விடுங்கள். நான் தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன். நீங்கள் யார் தடுக்க?" என்று கூறித் திமிறினான்.

அவனுடன் அச்சமயம் தர்க்கம் செய்தோ, புத்திமதி சொல்லியோ அவனை அழைத்துவர முடியாது எனக் கண்ட அவர் அவன் கையை விடாப்பிடியாய்ப் பிடித்துத் தரதரவென்று தம் பலம் முழுவதையும் செலுத்தி அவனைப் பாலத்தின்மீதிருந்துஅப்புறப்படுத்திவிட்டார்.

அடுத்த மூன்றாவது நிமிடம் ரயில் பாலத்தைக் கடந்து ஜங்ஷனை நோக்கி வேகமாகச் சென்று விட்டது.

பிரபாகரன் அந்தப் பையனின் பிடியைத் தளர்த்தினார்.

"தம்பி! பார்த்தால் சின்னப் பையனாக இருக்கிறாய். ஏன் தற்கொலை செய்து கொள்ளப் பார்த்தாய்? நீ யார், உனக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தைச் சொல். நான் போக்க முயற்சி செய்கிறேன்" என்றார்.

அவன் கோரமாகச் சிரித்தான்.

"வீட்டில் மனஸ்தாபமா?"

"உங்களுக்கு ஏன் இந்த வீண் சிரமம்? என்னை விடுங்கள்!"

"முடியாது. நீ யார், ஏன் தற்கொலை முயற்சியில் இறங்கினாய் என்பதையெல்லாம் தெரிந்து கொண்டு உன்னை உன் வீட்டில் கொண்டு விட்ட பிறகுதான் எனக்கு நிம்மதி உண்டாகும்" என்றார் பிரபாகரன்.

அவர்கள் ஜங்ஷனை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

அந்தப் பையன் இலேசில் வாயைத் திறக்கவில்லை. அவரும்விடவில்லை. பிளாட்பாரத்தில் கிடந்த பெஞ்சியில் உட்கார்ந்தார்கள்.

"சொல்லப்பா, உனக்கு வேண்டிய உதவியைச் செய்கிறேன்."

"உங்களால் முடியுமா, சார்!"

"எப்படியும் செய்து வைக்க முடியும்."

"என்னைஇன்று மத்தியானம் ஸ்கூலிலிருந்துடிஸ்மிஸ் செய்து விட்டார் ஹெட்மாஸ்டர்."

"எந்த வகுப்பில் வாசிக்கிறாய்?"

"பத்தாவது வகுப்பில். பணம் கட்டி விட்டேன். அடுத்த மாதம் பரீட்சை. எங்கள் குடும்பம் ரொம்பவும் ஏழை. நான் படிக்கப் பாசாகி, நானு காசும் சம்பாதித்தால்தான் என் குடும்பம் ஜீவிக்க முடியும். வீட்டில் என் விதவைத் தாயாரும் குண்டும் கண்டுமாக இரண்டு மூன்று தம்பிகளும் இருக்கிறோம்."

"இவ்வளவு தூரம் குடும்பப் பொறுப்பு தெரிந்த பையனை நீ தலைமை ஆசிரியர் உன்னை டிஸ்மிஸ் செய்யும்படி ஏன் நடந்து கொண்டாய்?"

அவன் பதில் பேசவில்லை.

"என்ன தம்பி! என்ன தப்பு செய்தாய்?"

"........."

"ஏன் பதில் பேசமாட்டேன் என்கிறாய். ஏதாவது காதல் சமாசாரமா?"

"காதல் சமாசாரம் இல்லை, சார்! அசட்டுத்தனமாக ஒரு பெண்ணிடம் நடந்து கொண்டேன்."

"காதல் கடிதம் போட்டாயா?"

"இல்லை, சார்! தினமும் பள்ளிக்கூடத்துக்குப் போகும்போது வழியில் சந்தித்து அந்தப் பெண்ணுடன் பேச ஆரம்பித்தேன். சத்தியமாகத் தப்பாக நடக்கணும் என்று எண்ணமில்லை, சார்! இன்று தலைமையாசிரியரிடம் சொல்லிவிட்டாள். என்னாலே பள்ளிக்கூடமே கெட்டுவிடும், பள்ளியின் பெயரைக் கெடுத்து விடுவேன் என்று சொல்லி என்னைப் பள்ளியிலிருந்து நீக்கி விட்டார்."

"அட பாவமே, சின்னப் பையன் ஏழைக் குடும்பப் பையன், பொறுப்பு உணர வேண்டியவன் ஏனப்பா இப்படி நடந்துகொண்டாய்?"

"இப்படி யெல்லாம் நடக்கும் என்று தெரிந்தால் அந்தப் பெண் இருக்கும் திக்கு நோக்கிப் பார்த்திருக்க மாட்டேன்."

"தலைமையாசிரியரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாயா?"

"அவர் காலைக்கூடப் பிடித்துக் கொண்டு கெஞ்சினேன். பரீட்சை எழுத ஒரு மாதமே இருக்கிறது. இந்தத் தடவை மன்னியுங்கள் என்றும் சொன்னேன். அவர் முடியாது

என்று சொல்லிவிட்டார். வீட்டில் அம்மாவுக்குத் தெரிந்தால் உயிரையே விட்டுவிடுவாள். நான் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்று உயிரைக் கொடுத்து இட்டிலிக்கு மாவரைத்துக் கலியாண வீட்டில் எடுபிடி வேலை செய்து சம்பாதிக்கிறாள். பத்தாவது பாஸ் செய்தால் நாற்பது ரூபாய்க்கு ஒரு வேலை கிடைக்காமலா போகும்? நம் கஷ்டம் விடியாதா என்று மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறாள். நானோ டிஸ்மிஸ் செய்யப்பட்டு விட்டேன். எப்படி ஸார் அம்மாவின் முகத்தில் விழிப்பேன்? அதனால்தான் தற்கொலை செய்துகொள்ள முயன்றேன்!''

''பயப்படாதே! உன்னை மறுபடியும் பள்ளியில் சேர்த்துக் கொண்டு பத்தாவது பரீட்சை எழுத நான் உதவி செய்கிறேன். பாவம், ஏதோ அசட்டுத்தனமாக நடந்து கொண்டு விட்டாய்.''

''ஹெட்மாஸ்டர் ரொம்பவும் கண்டிப்பானவர் ஆயிற்றே, ஸார்!''

''பரவாயில்லை நான் டிப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ். அவரிடம் சொன்னால் தட்ட மாட்டார்.''

''நாளைக் காலை எட்டு மணிக்கு என் வீட்டுக்கு வா. இருவரும் ஹெட்மாஸ்டர் வீட்டுக்கே போகலாம்.''

''வீடு எங்கே ஸார் இருக்கு?''

''பெரிய தெருவிலே கடைசி மாடி வீடு. அங்கே வந்து டிப்டி இன்ஸ்பெக்டர் பிரபாகரன் என்று சொல். உன் வீடு எங்கே!''

''நான் டவுனில் இல்லை, ஸார்! பக்கத்துக் கிராமத்திலிருந்து வருகிறேன். நாளைக்கு எட்டு மணிக்கு வந்து விடட்டுமா, ஸார்!''

பிரபாகரன் அப்பொழுது பத்தாவது படித்துக் கொண்டிருந்தான். பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன்தான். அதே வகுப்பில் கிரிஜா என்ற பெண்ணும் படித்துக் கொண்டிருந்தாள். நல்ல அழகி. ஏழைப்பெண். அவள் படித்துப் பாஸ் செய்து ஒரு வேலைக்கு வந்தால்தான் குடும்பம் தலைதூக்க முடியும்.

அவள் பேரில் பிரபாகரனுக்கு ஒரு கண். வலியப் போய் அவளுடன் பேசுவான். அவன் பணக்காரப் பிள்ளை என்று அவள் பயப்பட்டாள். அவனுடைய அட்டகாசம் சொல்லி முடியாது.

ஒரு நாள் அவள் ஹெட்மாஸ்டரிடம் போய்ச் சொல்லி விட்டாள். அவர் பிரபாகரனைக் கூப்பிட்டுக் கேட்டார். அவனை எதுவும் செய்யத் தைரியமில்லை. ஆயினும் புத்திமதி சொல்லலாம் என்று கூப்பிட்டார்.

அவனோ அவர் எதிரிலேயே அவளை ''நீ என்னுடன் உறவாடிக் கொண்டே நல்லவள் போல் ஹெட்மாஸ்டரிடம் கோள் சொல்லி விட்டாயே. உனக்குப் பணமுடை என்னும் போதெல்லாம் என்னிடம் பணம் வாங்கவில்லையா?'' என்று ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டான்.

அவள் ''அடப்பாவி! உன்னை நிமிர்ந்துகூடப் பார்த்ததில்லையே நான். ஏன் அபாண்டமாய்ப் பழி சுமத்துகிறாய்?'' என்று கேட்டு விட்டு 'விடுவிடு' எனப்போய் விட்டாள். போனவள் மறுபடியும் ஸ்கூலில் படிக்க வரவே இல்லை. படிப்பை நிறுத்தி விட்டாள்.



ஒரு மாதம் சென்ற பிறகு அவனே நேரில் அந்தப் பெண் வீட்டுக்குப் போனான்.

ஆனால் அவளும் அவள் தாயாரும் ஊரை விட்டே போய் விட்டார்கள் என்பது அங்கே போன பின் தெரிய வந்தது.

இரண்டு மாதங்கள் சென்ற பிறகு அவனுக்கு ஒரு கடிதம் வந்தது.

"ஏதோ பத்தாவது வரையில் படித்து ஓர் உத்தியோகத்துக்கு வரலாம் என்று இருந்த என் ஆசையில் மண்ணைப்போட்டு விட்டீர்கள்; வாழ்க்கை உங்களுக்கு ஒரு விளையாட்டுப் பொம்மை. எங்களுக்கோ உயிருள்ள பொருள். என் பேரில் அபாண்டப் பழி சுமத்திய பிறகு வயிறு வளர்ப்பைவிட மானம் பெரிது என்று படிப்பை நிறுத்தி விட்டேன். இல்லாவிட்டால் என்ன விபரீதம் விளைந்திருக்குமோ? உங்கள் மனம் குளிர்ந்ததா?"

கடிதம் கிரிஜாதான் எழுதியிருந்தாள். விலாசமோ, தபாலில் சேர்த்த ஊரோ தெரியவில்லை.

அதன் பிறகு வருடங்கள் ஓடிவிட்டன.

பிரபாகரன் எல்.டி. படித்துப் பாஸ் செய்து டிப்டி இன்ஸ்பெக்டராகிப் பல குழந்தைகளுக்குத் தகப்பனார் ஆனார்.

மூன்று மாதங்களுக்கு முன்புதான் அவர் அந்தத் தாலுக்காவுக்கு மாற்றப்பட்டு வந்தார். அவருடன் படித்தவர்தான் ஸ்கூல் ஹெட்மாஸ்டர்.

வீணாக ஒரு பெண் பேரில் அபாண்டப் பழி சுமத்தி அவளைப் பள்ளியை விட்டு நிற்கும்படி செய்த தம்முடைய தவறான செய்கை அவர் மனத்தில் உறுத்திக் கொண்டேயிருந்தது.

தாம் அந்தக் காலத்தில் நடந்து கொண்ட விதம், திமிர் பிடித்த செய்கையின் விளைவு இவைகளையும் இந்தப் பையனின் அசட்டுத்தனமான செய்கையும் அவன் படும் அவஸ்தையும் ஒப்பிட்டு எண்ணிப் பார்த்துக் கொண்டே வீடு போய்ச் சேர்ந்தார்.

மறுநாள் பொழுது விடிந்தது.

சொன்னபடி வந்துவிட்டான் பையன். அவனை அழைத்து அறையில் உட்கார வைத்து விட்டு மாற்றுடை தரித்துக் கொண்டார் பிரபாகரன்.

அதே சமயம் காலையில் ஆறு மணி டையல் கிளாசுக்குப் போய்விட்டு வீடு திரும்பிய அவர் பெண் வனஜா "என்னப்பா ராத்திரிதானே வந்தீர்கள்? மறுபடியும் பயணமா?" என்று கேட்டாள்.

"காம்ப் இல்லையம்மா. ஹெட்மாஸ்டரைப் பார்க்க வேண்டும். பாவம்! நேற்று ஒரு பையனை அனாவசியமாய் டிஸ்மிஸ் செய்து விட்டாராம். அவரிடம் சொல்லி அவனை மறுபடியும் சேர்த்துக் கொள்ளச் சொல்ல வேண்டும். ஆமாம், உன் ஸ்கூல்தானே அவனும்? உன் கிளாஸ் மாணவன் ஒருவனைத்தானே டிஸ்மிஸ் செய்தாராம்! உனக்குத் தெரியாதா?" என்றார். பிறகு அறையில் காத்துக் கொண்டிருந்த பையனைக் கூப்பிட்டு, "சரி, சரி, புறப்படு தம்பி! நாழிகை ஆகி விட்டது" என்றார். பையன் வெளியே வந்தான். அவளைப் பார்த்ததும் அவன் ஸ்தம்பித்து நின்று "அப்பா!" என்று ஏதோ பேச ஆரம்பித்தாள். வார்த்தை வரவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. அச் சமயம் அந்தப் பையன் அவர் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "சார்! நான் மகா பாபி, சார்! இந்த நேரம் வரை தாங்கள் யார் என்று அறியவில்லை. மகா பாபி நான். உங்கள் பெண்ணிடம்தான் நான் தாறுமாறாக நடந்து கொண்டேன் என்பது எனக்கு இப்போதுதான் தெரிந்தது. இந்த டவுனிலிருந்து ஸ்கூலுக்கு வருகிறாள் என்பது மட்டும் தெரியுமே ஒழிய அவள் உங்கள் பெண் என்பது தெரியாது. இவ்வளவு நல்ல குணமுள்ள உங்கள் பெண்ணிடமே நான் இப்படி நடந்து கொண்டதற்கு எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுக்கலாம், சார்!" என்று கதறினான்.

அவர் திடுக்கிட்டார். அவர் பெண்ணும் திடுக்கிட்டாள்.

வாக்கு கொடுத்ததை நிறைவேற்றுவதா, வேண்டாமா என்று அவர் யோசிக்கவில்லை.

அதற்குள் அவள், "எனக்கு வாக்கு கொடுத்து விட்டோமே எனத் தயங்காதீர்கள், சார்! உங்கள் மனத்தையும் உங்கள் பெண் மனத்தையும் புண்படுத்திய எனக்கு உதவி செய்வது மகா பாபம்" என்றான்.

"பரவாயில்லை, தம்பி! குற்றம் செய்து விட்டுத் தவறை உணர்பவனே மனிதன். என் மகள் என்பதற்காகப் பாசம் என் கண்களை மறைக்க முடியாது. உனக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவேன். வனஜா இவனை மன்னித்து விடு, அம்மா!" என்றார்.

"பாவம். நான் அவசரப்பட்டு ஹெட்மாஸ்டரிடம் சொல்லி இவனை டிஸ்மிஸ் செய்து விடும்படி செய்துவிட்டேன். நேற்று இரவு முழுதும் வருத்தப்பட்டேன். தூக்கமே வரவில்லை. நான் அவனை டிஸ்மிஸ் செய்யச் சொன்னதற்குப் பிராயசித்தமாக நீங்கள் அவனை மறுபடியும் பள்ளியில் சேர்த்து விடுங்கள்" என்றாள் அவள்.

அவரும் அவளும் ஹெட்மாஸ்டர் வீட்டை நோக்கிப் புறப்பட்டார்கள்.

பிரபாகரன் ஒன்றை மட்டும் இன்னும் அறியவில்லை. அறிந்திருந்தால் தாம் செய்யும் பிராயச்சித்தத்தின் விசேஷம் இன்னும் அதிகம் என்று தெரிந்து கொண்டிருப்பார்.


அது என்ன தெரியுமா?

எந்தக் கிரிஜாவின் பேரில் அவதூறு கூறி அவளாகவே ஸ்கூலை விட்டு நிற்கும்படி செய்தாரோ, அதே கிரிஜாவின் மகன்தான் அவன் என்பது அவருக்குத் தெரியாது.

கிரிஜாவுக்கு இது தெரிந்தால் 'அப்பன் என் பள்ளி வாழ்வில் மண் போட்டான். அவன் பெண் என் பையனின் பள்ளி வாழ்வில் மண்போட்டாள்' என்று திட்டுவாளா அல்லது பிரபாகரன் தனக்குச் செய்த தீங்குக்குப் பிராயச்சித்தம் செய்து விட்டான் என்று மகிழ்வாளா, தெரியாது!







டி. வி. எஸ் — இந்தியாவிலேயே மிகப்பெரிய பாடி நிர்மாணிப்பாளர்கள்


ஒவ்வொரு நாளும் இரண்டு பாடிகள் கட்டி முடிக்கப்படுகின்றன

தேசவளத் திட்டங்கள் முன்னேற வேண்டுமானால் போக்குவரத்து வசதிகளும் பெருக வேண்டும். - ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மக்களையும் அவசியப் பண்டங்களையும் ஏற்றிச் செல்ல துரிதமான போக்குவரத்து சாதனங்கள் வேண்டும். இதற்கு பஸ், லாரி, வான், கொண்டு குவிக்கும் டம்பர் முதலியன மிகமிக வேண்டும்.

வாகனங்களுக்கு பாடிகள் நிர்மாணிக்கும் துறையில் டி. வி. எஸ். இந்தியாவிலேயே மிகப் பெரிய ஸ்தாபனம் — ஆண்டுதோறும் 700 பாடிகள் — ஒரு நாளைக்கு இரண்டு பாடிகள் வீதம் கட்டி முடிக்கப்படுகிறது. உல்லாசப் பிரயாண கோச்சுகள், நகரங்களின் சேவைக்கு வசதியான பஸ்கள், பளு வேலைக்கு டிரக்குகள், டம்பர்கள், பிக் அப் வான்கள் — இவை டி. வி. எஸ்ஸில் நிர்மாணிக்கப்படுகின்றன.

டி. வி. எஸ்ஸைப் போன்று திட்டமுடன் செயல் புரியும் ஒரு ஸ்தாபனத்தினால் தான் குறித்த காலத்திற்குள் பாடிகளை நிர்மாணித்து அளிக்க முடியும். அதாவது மூன்றே வாரத்தில் பாடி பூர்த்தியாகிறது. டி.வி.எஸ்ஸில் தயாராகும் பஸ் பாடிகளின் அமைப்பே விசேஷமானதாகும். இஷ்டமானபோது திருத்தி அமைக்கத் தகுந்த பாடியாகவும் சுலபமாகக் கழற்றிப் பழுது பார்க்கக்கூடிய முறையிலேயும் அவை அமைக்கப்படுகின்றன. டி.வி.எஸ். இன்ஜினியரிங் இலாகாவின் இடைவிடாத ஆராய்ச்சியின் பயனாக பாடிகளின் தோற்றமும் உறுதியும் எப்போதும் நவீனமாகவும் உயர்வாகவும் விளங்குகிறது.

நகர பஸ்களுக்கு முன்புறம் சரிவான புயல் தாங்கி கண்ணாடி அமைத்திருப்பதால் ட்ரைவருக்கு தரையில் ஏழடி தூரத்திலுள்ள ஒரு சிறு பொருளையும் கூட பார்க்க முடிகிறது.



சன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை.

புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர்.

TVS/753

டாக்டர் நிர்மலா ஸ்ரீனிவாஸன் அப்பொழுதுதான் ஒரு பெரிய ஆபரேஷன் செய்து விட்டுத் தன் அறையில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தாள். மிகவும் நுட்பமான இதய ஆபரேஷன் அது. அதிலும் ஒன்பது வயதுப் பையன். தன் கையில் திறமை இருக்கிறது என்றாலும், அவள் மனம் சற்றுக் கலங்கி விட்டது. அவளுக்கு ஒரு தம்பி. இதே ஒன்பது வயதில் இதயக் கோளாறினால் சிகிச்சை செய்ய வசதியில்லாததால் அவன் இறந்து விட்டிருந்தான். அது நினைவுக்கு வந்து அவளுக்குச் சற்றுத் தடுமாற்றத்தைத் தந்தது. நல்ல வேளை! மனத்தை ஒத்துக் கை நடுங்கவில்லை. கை தன் போக்கில் அதிகச் சுறுசுறுப்புடன் குறிதவறாத தீர்மானத்துடன் பணி புரிந்து ஒரு குடும்பத்தின் வேதனையைக் குறைத்து சந்தோஷத்தையளித்தது.

மனிதை



அந்த நெருக்கடியைச் சமாளித்து விட்ட ஒரு நிம்மதி இப்பொழுது அவளைக் களைப்புறச் செய்து விட்டது. ஓய்ச்சலுடன் சாய்வு நாற்காலியில் கிடந்தாள் அவள். அப்பொழுது அறையின் கதவு திறக்கப்படுவதைத் தன் மூடிய இமைகளில் படிந்த ஒளியிலிருந்து அவள் உணர்ந்தாள். ஆனால் இமைகூடப் பளுவாகத் திறக்க முடியாமல் அழுந்தி மூடிக் கிடந்தது. மின் விசிறியை யாரோ இயக்கி விட்டனர் போலும்! அவளுக்கு அது இதமாக இருந்தது. கண்ணைத் திறவாமலேயே 'சுந்தரி!' என்று அவள் அழைத்தாள். மெதுவாக. ''நான் தான் டாக்டர்!'' என்று பதில் அளித்துக் கொண்டே அருகில் வந்தாள் நர்ஸ் சுந்தரி.

''ஒன்றுமில்லை. யாரையும் என்னைக் கூப்பிட விடாதே. கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துக் கொள்கிறேன்.''

''சரி'' என்று கூறிவிட்டு அங்கிருந்து சுந்தரி மறைந்தாள்.

நிர்மலா காலை நன்றாக நீட்டிக் கொண்டு படுத்தாள். தன்னையறியாமல் அவள் உறங்கி விட்டிருக்க வேண்டும். அவள் கண்விழித்து நோக்கியபோது மாலை ஐந்தடித்து விட்டிருந்தது. உடனே அவள் பரபரப்புடன் எழுந்து அடுத்திருந்த சிறு அறையில் போய் முகம் கழுவித் தலை சீவிக் கொண்டு தன் வீடு நோக்கிக் கிளம்பினாள். ஜனக் கூட்டம் அதிகமாக இருந்த தெரு வழியாகச் செல்லாமல் சற்றுத் தள்ளிப் பெரிய பாட்டை வழியாக நடந்து சென்றாள் நிர்மலா.

அநுத்தமா



அவன் பத்தடி நடந்திருக்க மாட்டாள்—ஏன் வந்தோம் என்று கலங்கும்படி நேர்ந்து விட்டது. ஒரு வீட்டின் முன்னிலேயில் அவர்கள் கார் நிற்பதைக் கண்டாள் அவள். அதிலேயே ஏறிச் சென்று விடலாமே என்ற எண்ணத்தில் அவள் விரைந்து காரின் அருகில் சென்று கதவைத் திறந்து கொண்டு பின் பக்க இருக்கையில் அமர்ந்தாள். அவள் கணவன் ஸ்ரீனிவாஸனும் ஒரு டாக்டர் _ான். தன்னுடைய கேக எதற்காகவோ வந்திருப்பான் என்று நினைத்து அவனுக்காகக் காக்கத் தயாராக இருந்தாள் அவள். அப்பொழுது அவள் அகஸ்மாத்தாகப் பார்த்த போது ஒரு மகிழ மரத்தடியில் ஸ்ரீனிவாஸன் நிற்பது தெரிந்தது. சென்று. தான் வந்திருப்பதைக் கணவனுக்குத் தெரியப்படுத்தலாம் என்று இறங்கின அவள் ஸ்தம்பித்து நின்று விட்டாள். ஸ்ரீனிவாஸன் நகர்ந்ததும் அவன் பின்னால் ஒரு பெண் இருப்பதும் அவள் கலகலவென்று சிரிப்பதும் கண்டு திடுக்கிட்டு அவள் உடல் வியர்த்து விட்டது. வைத்தியத் தொழில் புரியும் அவர்கள் பல ஆண்களுடனும், பெண்களுடனும் பழக வேண்டியிருப்பது சகஜமே. ஆனால் இந்தப் பெண்ணை ஸ்ரீனிவாஸன் கன்னத்தில் தட்டிப் பேசியது தான் அவளை உலுக்கி விட்டது. அவள் சட்டென்று மறைந்து கொஞ்சம் தூரம் போய் விட்டு, அப்பொழுதுதான் வருபவள் போலக் காரின் அருகில் வந்து நின்றாள். அதே சமயம் அவள் கணவனும் வண்டியினிடம் வந்தான். ஒரு கணம் அவன் முகம் வெளிறிப்போய் விட்டது.

'' எப்போ வந்தாய், நிர்மல்? இந்தப் ப'கம் எங்கே வந்தாய்?'' என்று கேட்டான் ஸ்ரீனிவாஸன் பிரயாசையுடன்.

நிர்மலா கலகலவென்று சிரித்தாள். வெகு சாதாரணமாகப் பதில் அளித்தாள். ''பஜார் தெரு ஆனாலும் கூட்டமாக இருக்கிறதே என்று இந்த வழி வந்தேன். வந்தது நல்லதாயிற்று. மீதி வழியும் நடக்காமல் கார் கிடைத்தது'' என்றாள் அவள்.

' அது சரிதான். நீ பேசாமல் ஒரு சைக்கிள் ரிக்ஷா வைத்துக் கொள்வதுதானே? நிம்மதியாக வீடு போய்ச் சேர்ந்திருக்கலாம்'' என்றான் அவன்.

'ரிக்ஷா வைத்துக் கொண்டு நேரே போகாமல் இங்கே ஏன் வந்து தொலைந்தாய்?' என்று கேட்காமல் கேட்கிறானே என்று நிர்மலாவின் மனம் கொதித்தது. அவள் கழுத்தை யாரோ இறுக்கி உயிரைப் பிழிந்து எடுப்பது போல் பிரமை





தட்டியது. கண்களிலிருந்து சினத்தோடு கூடிய விசனக் கண்ணீர் நிரம்பத் ததும்பி நின்றது. பேசத் தைரியமற்று அவள் மௌனமாக இருந்தாள். தான் நிதானமிழந்திருப்பதைக் கணவன் அறியாமல் இருக்கக் குனிந்து கொண்டே இருந்தாள். கார் சென்று கொண்டிருந்தது.

''ஏன் ஒன்றும் பேச மாட்டேனென்கிறாய்?'' என்று மெதுவாகக் கேட்டான் ஸ்ரீனிவாஸன்.

'குற்றமுள்ள நெஞ்சு பேசுகிறதோ?' நிர்மலா மென்று விழுங்கினாள்.

''இன்று ஆபரேஷன் நாளாக்கும்!''

''ஆமாம். இன்று என்னவோ மிகவும் ஓய்ச்சலாக இருக்கிறது'' என்றாள் நிர்மலா.

''பேசாமல் சாய்ந்து கொள். இதோ ஒரு நிமிஷத்தில் வீடு போய்ச் சேர்ந்து விடலாம்'' என்றான் ஸ்ரீனிவாஸன். கணவனின் கனிவு சொட்டும் பேச்சைக் கேட்டதும் நிர்மலாவுக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. ஓய்வு எடுத்துக் கொள்ளும் பாவனையில் கணவன் இருக்கும் இடத்துக்கு எதிர்ப்புறமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு அவள் கண்ணை மூடிக் கொண்டாள். ஒரு முத்துக் கண்ணீர் வெடித்து வெளி வந்து கன்னத்தில் உருண்டது. மெதுவாகத் துடைத்துக் கொண்டாள்.

வீடு சென்றதும் முகத்தைக் கழுவிக் கொண்டு சற்றுச் சமாளித்த பிறகுதான் நிர்மலா கணவன் முன் வந்தாள். அவனும் அவளிடம் பேச முன் வரவில்லை. தன் பிள்ளை ரகுவுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது இருந்த நிலையில் நிர்மலாவாலும் பேச முடியவில்லை. அதனால் கைக் குழந்தையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு சீராட்ட ஆரம்பித்தாள்.

அவள் மனம்மட்டும் வெகு வேகமாக வேலை செய்தது. அவள் இளம் பிராயத்து ஆசைகள் முதல் இன்றைய நிகழ்ச்சிகள் வரை அவள் மனக்கண் முன் வந்து கூத்தாடின.

அவள் தகப்பனாரும் ஒரு டாக்டர்தாம். அவர் இஷ்டப்படி இவளும் வைத்தியம் பயின்று நல்ல உயர்ந்த, கைதேர்ந்த டாக்டர் என்று பெயர் எடுத்து விட்டாள். ஸ்ரீனிவாஸன் அவளை விரும்பி மணந்து கொண்டான். வைத்திய விடுதி நடத்தி வந்த அவன் தனக்கு ஒத்தாசையாகப் பெண் வேண்டும் என்று தேடி நிர்மலாவைக் கேட்டு மணந்து கொண்டான். கல்யாணமே வேண்டாம். மணவாழ்க்கை தன் அபிவிருத்திக்குக் குறுக்கே நிற்கும் என்று பிடிவாதமாக இருந்த நிர்மலாவும் ஸ்ரீனிவாஸனைக் கண்டதும், அவனுடன் பழகியதும் தன் கொள்கையை மாற்றிக் கொண்டாள். தம்பதிகள் இருவரும் வெளி நாடுகள் சென்று பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றுத் திரும்பினர்.

உரம் அறிந்த நட்பு, பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் தன்மை, நல்ல வருவாய், இரண்டு குழந்தைகள்—சுகமும் மகிழ்ச்சியும் நிலவ எல்லாம் வந்து அவளை அடைந்தன. ஆனந்தத்தின் உச்சத்தில் இருப்பதாக அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போது இன்று....

நிர்மலா தன் சிந்தனைகளைத் துடைத்துக் களைந்து விட்டு, தன் கணவனைத் தேடிச் சென்றாள். அவள் முன் பக்கம் வருவதற்கும் ஒரு கார் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. யாரோ நோயாளிகள் இறங்குவதும் தெரிந்தது. நிர்மலா சட்டென்று மறைவாக நின்று கொண்டாள். ஸ்ரீனிவாஸன் முன் பக்க அறையில் இருந்தான். காரில் வந்தவர்கள் என்னவோ சொன்னார்கள். நிர்மலா அசங்காமல் என்ன நடக்கிறது என்று பார்த்தாள். விருட்டென்று எழுந்து உள்ளே வந்து விட்டான் ஸ்ரீனிவாஸன். நிர்மலா தன் கணவன் முகத்தை மறைவிலிருந்தே கவனித்தாள். அவள் கண்களைக் கண்ணீர் மறைத்தது. ஸ்ரீனிவாஸனின் முகம் மிகமிகக் கோரமாக மாறியிருந்தது. பொறாமை, அசூயை, எரிச்சல், வெறுப்பு யாவும் பயங்கரக் கலவையாக முகத்தை மூடிவிட்டுக் கொண்டு நின்றன.

இதய நோய்களுக்கு நிர்மலாதான் தன்வந்திரி என்கிற மாதிரி அவள் பெயர் நிலைபெற்று விட்டது. எங்கெங்கிருந்தோ அவளைத் தேடிக் குழுமினார்கள், நோயாளிகள். ஸ்ரீனிவாஸனும் நல்ல கைராசிக்கார வைத்தியன்தான். ஆனால் சற்று முன்கோபியானதால் நோயாளிகளின் நச்சுக் கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதில் சொல்ல மாட்டான். நிர்மலா எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருப்பாள். இதனால் நிர்மலாவுக்கு வந்த அளவு கேஸ்கள் அவனுக்கு வரவில்லை. மேலும் இதய ஆபரேஷனில் கை தேர்ந்தவள் என்ற பெயரினால் ஓரிருவர் ஸ்ரீனிவாஸனை அறிமுகப் படுத்தும் போது ''நிர்மலா ஸ்ரீனிவாஸனின் கணவர் ஸ்ரீனிவாஸன்'' என்று வேறு கூறத் தொடங்கினர். இதெல்லாம் சொட்டுச் சொட்டாகச் சேர்ந்து அவன் இதயக் கிண்ணம் நிறைய நஞ்சாக மாறியது போலும்.

நிர்மலா வெளியே எட்டிப் பார்த்தாள். வந்த கார் போய் விட்டது. அது யாருடையது என்பதை அவள் அறிவாள். அந்த ஊரில் கிஷன்லால் ஸேட் என்ற ஒரு பணக்காரர் இருந்தார். அவருடைய ஒரே பையனுக்கு இதயக் கோளாறு. அவர் அவனை வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்றே வைத்தியம் செய்யத் தயாராக இருந்தார். நிர்மலாவின் புகழைக் கேட்டு அவளைத் தேடி வந்தனர். இன்று தனக்கு, தன் திறமைக்கு, இதைவிட மேலான வெகுமானம் கிடைப்பது அரிது. அவர்கள் போய் விட்டார்கள்.

நிர்மலா தன் அறைக்குச் சென்று படுக்கையில் படுத்தாள். என்றுமில்லாத சோர்வு அவளைக் கப்பிக்கொண்டது. அவளுக்குள்ளே வைத்திய நிபுணி நிர்மலா, இல்லாள் நிர்மலாவுடன் நின்று சவால் விட்டுச் சண்டைக்கு இழுத்தாள். இவர்கள் சச்சரவு அவளை மிகவும் பலவீனப்படுத்தியது போலும்! அவள் கண்களை மூடிக்கொண்டாள்.

நிர்மலாவின் தலை மிகவும் வலித்தது. அவள் வலியைப் பொறுப்பதற்காகத் தலையை அழுத்திப் பிடித்துக்கொண்டு படுத்திருந்தாள். பிஞ்சு உடம்பு ஒன்று அவள் மீது உராய்ந்தது. அவள் கண்களைத் திறக்கவில்லை. கையை மட்டும் நீட்டித் தன் மகனை அருகில் இழுத்துக்கொண்டாள். அவள் கண்களிலிருந்து பீறிட்டு வர இருந்த நீரை இமைகளினால் அடைத்திருந்தாள். அதை வெளியிட முடியாமல் கண்களை இறுக மூடியிருந்தாள்.



தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
தராசு மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
உத்திரவாதமுள்ளவை
எப்பொழுதும் பிரகாசத்துடன் நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & ஸன்ஸ்
122, கன்ஸரா சால், பம்பாய் 2.



GTV-59-9-C.TM
EVEREST

அதன் பிறகு ஒரு முரட்டுக் கை அவள் நெற்றியைத் தொட்டது. தன் அருகில் கணவன் அமருவது தெரிந்தது. ஆயினும் அவள் நகரவேயில்லை.

"நிர்மல்! இப்பொழுது சேகர் போனில் பேசினான்..."

"உம்" என்றாள் நிர்மலா, திரும்பாமலேயே.

"இன்று நீ ஆபரேஷன் செய்தது அவன் மனைவியின் கருப் பையாம். உனக்கு நன்றி தெரிவித்தான்..."

"சரி!"

"நிர்மலா! ஏன் எப்படியோ இருக்கிறாய்?"

அவன் குரலில் குற்றமுள்ள நெஞ்சு கடுகளவு எட்டிப் பார்த்ததோ?

"ஒன்றுமில்லை. இன்று என்னவோ மிகவும் ஓய்ச்சலாக இருக்கிறது" என்று குரல் அடைக்கப் பதில் சொன்னாள் அவள்.

"ஏன்?"

ஒன்றும் பதில் இல்லை. தன் குழந்தையை அணைத்துக்கொண்டு பேசாமல் இருந்தாள் அவன் மனைவி.

"அம்மா அழறா" என்றது குழந்தை.

ஸ்ரீனிவாஸன் மனைவியை நிமிர்த்தினான். மனைவி உண்மையில் கண்ணீர் பெருக்குவதைக் கண்டு அவன் மனத்தில் சஞ்சலமுண்டாகியது போலும்! அவன் முகமே கவலையுடன் மாறிவிட்டது. அவளுக்கோ அவமானமாக இருந்தது. விவேகமில்லாத பெண்களைப் போல் நாம் கண்ணீர் உகுத்து விட்டோமே என்று வெட்கினாள் அவள்.

"நிர்மலா, ஏன்..."

"ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்" என்றாள் நிர்மலா.

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன். உன் நிலைமையில் நான்கு மணி நேரம் நின்று வேலை செய்ய முடியுமா?" என்றான் அவள் கணவன்.

அவனுடைய கனிவும் கரிசனமும்தான் நிர்மலாவுக்கு அப்போது தெரிந்தன. சற்று முன் தோன்றிய வருத்தமெல்லாம் எங்கு மறைந்ததோ தெரியவில்லை.

"நாம் எங்காவது ஊருக்குப் போகலாமா? சிகிச்சை நிலையத்தை யாரிடம் ஒப்படைக்கலாம்?" — மெதுவாகக் கேட்டாள் மனைவி.

அந்தக் கேள்வியைக் கேட்டு முடிப்பதற்குள் அவள் நா வறண்டுவிட்டது.

ஸ்ரீனிவாஸன் உதட்டைப் பிதுக்கிய வண்ணம் சிறிது நேரம் யோசித்தான். நிர்மலா கவலையுடன் அவனையே பார்த்தாள். ஸ்ரீனிவாஸன் குனிந்து தன் பெண்ணைக் கையில் தூக்கிக் கொண்டான். "சித்ரா! அம்மா மாமாவின் ஊருக்குப் போகட்டும். நாம் இரண்டு பேரும் இங்கேயே இருக்கலாமா?"

"நான்போகமாட்டேன், மாமா ஊருக்கு!" என்றாள் பெண்.

"என் கண்ணே!" என்றான் தந்தை, அவளை அணைத்துக்கொண்டு.

இப்பொழுது கணவனிடம் குழந்தையை விட்டு விட்டுப் போகலாமா என்று ஒரு கணம் யோசித்தாள் நிர்மலா. உடனே அவள் தெளிந்து விட்டாள்.

மறுநாளே அவள் தன் அண்ணன் இருக்கும் பெங்களூருக்குக் கிளம்பிவிட்டாள்.



மனைவி: புது தினுசா இந்த வருஷம் என்ன புடவை வந்திருக்கு?

புருஷன்: இரண்டு தினுசு: ஒண்ணு உனக்குப் பிடிக்காதது.... இன்னொண்ணு நம்மாலே வாங்க முடியாதது

இரண்டு மாதங்கள் சென்றன. அவள் திரும்பி வந்ததுமே சிகிச்சை இல்லத்துக்குச் சென்றாள். அதைக் கணவன் நன்றாகத்தான் நடத்தியிருக்கிறான் என்பதைக் கவனித்தாள். அவனிடம் வைத்தியம் செய்துகொள்ளும் நபர்கள் குறைய இருப்பதும் தெரிந்தது. இரண்டே இரண்டு பிரசவக் கேஸ் மட்டும் இருந்தது. விசாரித்ததில் தன் தோழி ஒருத்தி வந்து பார்த்துப் போவதாகத் தெரிந்தது. ஒரு விநாடி அவளுக்கு ஏமாற்றமாகக் கூட இருந்தது. தான் இல்லாததனால் ஒன்றும் கெட்டுவிடவில்லை என்று நினைக்க ஒரு தினுசாகத்தான் இருந்தது!

அவள் பகல் உணவுக்குப் பிறகு குழந்தை சித்ராவுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். ஸ்ரீனிவாசன் அருகில் வந்து உட்கார்ந்தான். நிர்மலா தன் கணவனின் முகத்தை அளந்தாள். வெகு நாட்களாகக் காணக் கிடைக்காமல் இருந்த ஓர் அமைதி அவன் முகத்தில் இருப்பதைக் கண்டாள். உடலிலும் பேச்சிலும் ஒரு தெம்பு இருந்தது.

"எப்படி இருந்தது விடுமுறை? உடம்பு எப்படி இருக்கிறது?" என்று பரிவோடு கேட்டான் அவன்.

"நரம்புத் தளர்ச்சி வந்துவிட்டது போல் தோன்றுகிறது. இனிமேல் கொஞ்ச நாட்களுக்குத் தொழில் பார்க்க முடியாது என்று தான் நினைக்கிறேன்."

"சும்மா இரு. அதெல்லாம் ஒன்றுமிராது. நரம்பாவது தளர்ச்சியாவது? யார் இந்தக் கட்டுக் கதையையெல்லாம் சொல்லித் தந்து விட்டார்கள்? டாக்டர் நிர்மலாவின் கை ஆபரேஷனுக்காக எத்தனை பேர்கள் இதயத்தையே உடைத்துக்கொண்டு இருக்கிறார்கள் தெரியுமா?" என்றான் ஸ்ரீனிவாசன்.

பிரிவின் கூடவே பழைய பெருமையும் இறையிட்டதோ? நிர்மலா சிறிது நேரம் பதில் அளிக்கவில்லை.

''கட்டோ கதையோ தெரியாது. மனசில் தைரியமில்லாமல் என்ன வேலை செய்ய முடியும்? கொஞ்ச நாட்கள் வரை ஓய்வுதான் எடுக்கலாம் என்று பார்க்கிறேன்'' என்றாள்.

''மனப் பிரமை!'' என்றான் ஸ்ரீனிவாசன் ஏளனமாக.

''இருக்கலாம்'' என்றாள் நிர்மலா. அவள் எதை நினைத்துக் கொண்டாளோ!

ஸ்ரீனிவாசனே ஒத்துக்கொள்ளும்படி ஆகிவிட்டது. நிர்மலாவுக்கு மாசம் ஆக, ஆகப் பலவீனம் தோன்றலாயிற்று. அவள் வைத்திய இல்லத்தின் பக்கமே செல்வதை விட்டுவிட்டாள்! குழந்தையைக் கவனிப்பது, வீட்டைக் கவனிப்பது, மற்றப்படி படுத்திருப்பது — இப்படியே காலத்தைத் தள்ளினாள்.

இந்தச் சமயத்தில் ஸ்ரீனிவாசனே அவர்கள் சிகிச்சை இல்லத்தை நடத்தும்படி ஆகிவிட்டது. அவள் என்ன செய்தாள் என்றே நிர்மலா கேட்டுக்கொள்ளவில்லை. அவள் ஊதியம் நின்றுவிட்டபடியால் ஸ்ரீனிவாசனே அதிகம் உழைக்கும்படி நேர்ந்தது.

எப்பொழுதாவது யாராவது நிர்மலாவைத் தேடி வந்தால் அன்று ஸ்ரீனிவாசன் மிகவும் வருத்தமடைவான். ''நிர்மல்! நீ ஒரே ஒரு சின்ன ஆபரேஷன் செய்து பாரேன்'' என்பான்.

''கை நடுங்குகிறது'' என்பாள் அவள்.

இரண்டு வருடங்கள் சென்றன.

ஒரு தடவை அவன் ஓர் உறவினர் கல்யாணத்துக்காக வெளியூர் சென்றிருந்தான். கல்யாணத்தன்று மாலைக் கச்சேரி கேட்டுக்கொண்டே ஆனந்தமாக இருந்த அந்த நேரத்தில் அவனைப் போனில் கூப்பிடுவதாகச் செய்தி வந்தது. வந்த சங்கதியைக் கேட்டு அவன் மிகவும் கலங்கிவிட்டான். அவன் பெண் சித்ரா மேல் மாடியிலிருந்து தவறிக் கீழே விழுந்து கால் எலும்பு முறிந்து இருப்பதாகவும் கண்ணுக்கு அருகே நெற்றியில் கிழித்திருப்பதாகவும் கூறியதும் அவன் தவித்துப் போய் விட்டான்.

நிர்மலாவுக்கு வேறு நரம்புக் கோளாறு. என்ன தவிக்கிறாளோ!' என்று பதறி ஓடிவந்து சேர்ந்தான். மனம் ஓடுகிற வேகம் ரயில் ஓடவில்லையே! அவன் தன் இல்லம் வந்து சேரும்போது இரவாகி விட்டது. குழந்தை படுக்கையில் கிடந்தாள். கால், தலையில் கட்டுப் போட்டிருந்தனர். கண்ணை மறைத்துக்கொண்டு ஒரு தலைப்பாகை கிடந்தது. ஸ்ரீனிவாசனால் அந்தக் காட்சியைக் காணச் சகிக்கவில்லை. அவன் நிர்மலாவைப் பதற்றத்துடன் பார்த்தான்.

அவள் அமைதியாகக் குழந்தையின் அருகில் அமர்ந்திருந்தாள். — ''தூங்குகிறாள். இன்னும் சரியாக மயக்கம் தெளியவில்லை என்று நினைக்கிறேன்'' என்று கூறிவிட்டு அவனை அருகில் இருக்கும்படி கூறிவிட்டு அவள் மற்றக் குழந்தைகளைக் கவனிக்கச் சென்றாள்.

அவர்கள் நண்பர்கள் இருவர் இவர்களைப் போலவே வைத்தியத் தம்பதிகள். அவர்கள் கூட உதவிக்கு வந்திருந்தனர். நண்பர் விவரிக்க விவரிக்க ஸ்ரீனிவாசன் குழந்தையின் விபத்தைப் பற்றிக் கேட்டு மிகவும் கஷ்டப்பட்டான். ''என்னவோ அப்பா, ஆண்டவன் புண்ணியத்தில் குழந்தை தப்பினாளே, என் குடலே நடுங்குகிறது!'' என்றான் ஸ்ரீனிவாசன்.

''ஆண்டவன் கருணை மட்டும் இல்லையப்பா! உன் மனைவியின் தாய்ப் பாசமும் கூடக் கொண்டது. அவள் தருணம் தவறாமல் தைரியமாக எவ்வளவு நுட்பமான தொகு தையல் போட்டிருக்கிறாள்! நெருக்கடியான இடம், எக்கச் சக்கமான காயம்! அவள் வெகு அழகாகச் செய்து முடித்துவிட்டாள் — நாங்கள் வந்து காலைப் பார்ப்பதற்கு ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றோம். அவ்வளவுதான்'' என்றான் நண்பன்.

ஸ்ரீனிவாசனால் தன் செவிகளையே நம்ப முடியவில்லை. நிர்மலாவாவது நுட்பமான சிகிச்சை செய்யவாவது! அவன் தன் மனைவியைத் தேடிச் சென்றான். அவள் மொட்டை மாடியில் குழந்தையைத் தட்டிக்கொண்டே உட்கார்ந்திருந்தாள். வேகமாக நடந்து சென்ற அவன் நிர்மலா தனியாக இல்லை என்பதை அறிந்து சற்றுத் தயங்கி நின்றான். தன் தோழியிடம் பேசிக் கொண்டிருந்த நிர்மலா அவன் வரவைக் கவனிக்கவில்லை.

''கடுகு சிறுத்தாலும் காரம் போகாதல்லவா?'' என்று நிர்மலாவின் குரல் கேட்டது.

''அதெல்லாம் வீண் பேச்சு! இன்று உன் கை சென்ற நேர்த்தியைப் பார்த்துக்கொண்டு தானே இருந்தேன்? நரம்பாவது தளர்ச்சியாவது! நீ வேண்டுமென்றே வேஷம் போடுகிறாய்'' என்று அடித்துப் பேசினாள் தோழி.

''கைத் திறமை அல்ல அது. தாயின் மனவேகம்—அவ்வளவுதான்'' என்றாள் நிர்மலா.

''மண்ணாங்கட்டி வேகம்—போடீ! எனக்கு என்ன கண் குருடா, நான் பச்சைக் குழந்தையா? உன்னை இப்பொழுதுதான் தெரியுமா? சரிதானடி! எனக்குக் காது குத்துகிறாய் நீ.''

''சாந்தி! என் திறமையும் புகழுந்தான் முக்கியமா? என் கணவரின் மன அமைதியும், தன்னம்பிக்கையும் சந்தோஷமும் முக்கியமல்லவா? என் குடும்பத்தில் சந்தோஷமும் நிறைவும் இருப்பதைக் காட்டிலும்...'' என்று ஆவேசம் வந்தவள் போல் அடுக்கினாள் நிர்மலா.

''அதற்காக? கையில் வந்த அரிய வித்தையை அடியோடு விட்டு விடுவார்களா? வேலை விட்டுப் பின்னையும் நீ காப்பாற்றியிருக்க முடியாதா? அவர்கள் மேனாட்டுக்குப் போகும்படி இருக்காதல்லவா?''

''என் கணவரின் அன்புதான் எனக்குப் பெரிதாக இருந்தது. அவர் ஏதோ சொல்லி அனுப்பிவிட்டார் போலும். பிறகு ஒரு நாள் அந்த சேட்ஜியைப் பார்த்தேன். அவர் ஒரு தினுசாகக் குரோதமாகப் பேசியதிலிருந்து அறிந்துகொண்டேன். என் கணவர் விருப்பத்துக்கு மாறாக ஒன்றும் செய்ய எனக்கு இஷ்டமில்லை'' என்று பதிலளித்தாள் நிர்மலா.

ஸ்ரீனிவாசன் வியப்புத் தாங்காமல் தன்னை மறந்து நின்று கொண்டிருந்தான். அவர்கள் பேச்சு அவன் மனத்தின் இடுக்குகளிலெல்லாம் வெளிச்சத்தை வீசியது போலும். வந்த


ஒரு புத்திசாலியான மனைவி தன் கணவனின்
துணிமணிகளை
தேர்ந்து வாங்குவதில் உதவி செய்கிறுள்
நியூ ஷோராக் பாப்லின்கள்
வெண்மை, கலர் மற்றும் கோடிட்ட ரகங்கள்
பிளாடிக்னம் டச் • ஸில்வர் டச்
டெஸர்ட் • மதுகுஞ்ச்
குஞ்ஜாலின்
SANFORIZED



'' இந்தப் புடவையைப் போய் வாங்கிண்டு வந்திருக்கிறீர்களே! இது 'பட்' 'பட்'னு போயிடுமே! பட்டுப் புடவை வாங்கக் கூடாதோ?''

'' பட்டுப் புடவை வாங்கினும் பணம் 'பட்' 'பட்'னு போயிடுமே!''

கவடு தெரியாமல் அவன் இரும்பி விட்டான். நான்கு மாதங்கள் கழிந்து தீபாவளி வந்தது. மாடி வராந்தாவில் நின்று கொண்டு தன் இரு குழந்தைகளுக்கும் பட்டாசு வெடித்துக் காட்டிக்கொண்டிருந்தான் ஸ்ரீனிவாஸன். நிர்மலா அப்பொழுது ஒரு கையில் பட்சணத் தட்டுடன் அங்கு வந்தாள். அவள் உடலில் புதுப் புடவை சலசலக்க அருகில் வந்து நின்று கொண்டாள்.

'' எங்கே போயிருந்தாய், நிர்மலா?''

'' இல்லத்துக்குத்தான். உங்கள் நோயாளிகள் ஒவ்வொருவரும் இந்தப் புடவையை எப்படித்தான் புகழ்ந்தார்கள் என்கிறீர்கள்? உங்கள் பரிசு பிரமாதம்!'' என்று ஆனந்த மிகுதியுடன் பேசினாள் அவள்.

'' நிர்மலா! இன்றைக்கு நான் உன்னிடம் ஒரு பரிசு கேட்கப் போகிறேன். தருவாயா?'' என்று திடீரென்று ஸ்ரீனிவாஸன் கேட்கவும் நிர்மலா ஒன்றும் புரியாதவளாக விழித்தாள்.

'' சொல், நிர்மலா!''

' நான் என்ன பரிசு கொடுக்க முடியும், அன்பைத் தவிர?'' என்றாள் அவள்.

'' உண்மையாகத்தானே?''

''உண்மையாகத்தான்.''

'' நீ மீண்டும் உன் வைத்தியத் தொழிலைத் தொடங்கி நடத்த வேண்டும். இதுதான் நீ எனக்கு அளிக்கக்கூடிய அன்புப் பரிசு'' என்று கூறி அவள் கையைப் பற்றிக் கொண்டான்.

'' உங்கள் விருப்பம் அவ்வாறானால் அப்படியே ஆகட்டும்'' என்று மெதுவாக மொழிந்தாள் அவள். ஆயினும் பேச்சில் திடமுமில்லை; கண்களில் தெளிவும் இல்லை.

அவள் முகத்தை நிமிர்த்தினான் ஸ்ரீனிவாஸன். '' ஏன் இந்தக் கலக்கம், நிர்மலா? நம்மிடையே ஒரு திரை இருக்கலாமா? மனம் விட்டுப் பேசேன்'' என்றான் அவன்.

'' சாந்தியும் அவள் கணவரும் ஏதாவது சொன்னார்களா?'' என்று தட்டுத் தடுமாறிப் பேசினாள் நிர்மலா.

'' நான் எப்படி இருந்தேன் என்பதையெல்லாம் மறந்துவிடு, நிர்மலா! எனக்கே அந்தக் காலத்தை நினைத்தால் வெட்கமாக இருக்கிறது.''

'' அதற்கு நானும்தான் காரணமாக இருந்திருக்கலாம்'' என்றாள் நிர்மலா.

''வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிடுமே என்று பயப்படுகிறாயா? பழைய ஸ்ரீனிவாசன் மறைந்து விட்டான்—பயப்படாதே. அதுவும் நடுவில் வந்த குணம்தானே?''

'' உங்களுக்கு மனம் நோகும்படியும், நாம் எதிர்பாராத விதமாக நடந்து கொள்ளும்படியும் என் குணமும் என் நடத்தையுந்தானே தூண்டியிருக்க வேண்டும்?''

'' அதெல்லாம் ஒன்றுமில்லை. நீ மேன்மேலும் அபிவிருத்தி அடைந்து புகழ் பெற்றதும், எல்லோரும் என்னைத் தனியாக ஒரு நபராக மதிப்பதாக இல்லை என்று தோன்றிவிட்டது. இதய நிபுணி நிர்மலாவின் கணவன் ஸ்ரீனிவாஸன் என்ற பதவி எனக்குக் கசந்தது. டாக்டர் ஸ்ரீனிவாசன் என்றால் நான் என்று புரியாமல் டாக்டர் ஸ்ரீமதி ஸ்ரீனிவாஸன்தானே என்ற அளவுக்கு வந்ததும் பொறாமை மிகுந்தது. அதிலிருந்து தாழ்வு மனப்பான்மை பிறந்தது. நீ எனக்கு மதிப்புக் கொடுக்கவில்லை என்று வேறு ஒரு குருட்டுத்தனம் தோன்றியது. அந்தக் கோபத்தில் ஒரு பெண்ணின்மீது அன்பு செலுத்தினேன். முன்பு ஒரு நாள் நீ காரில் ஏறி வந்தாயே அன்றுகூட அந்த நர்ஸ்கூடத்தான் இருந்தேன். அதை நீ பார்த்து விட்டாயோ என்ற அவமானம், உன்மீது அர்த்தமற்ற ஆத்திரமாக மாறிவிட்டது. வைத்தியத்துக்கு வந்த வேலை உதாசீனமாகப் பேசி அனுப்பி விட்டேன்...''

பழையதைப் பற்றி என்ன இப்பொழுது? விட்டுத் தள்ளுங்கள்.''

'' நீ ஏன் எப்படி....நரம்புத் தளர்ச்சி என்பது....''

'' முழுவதும் பொய் அல்ல. முதலில் சிறிது தடுமாற்றம் இருந்தது. பிறகு அதையே சாக்காக வைத்துக்கொண்டு நானே நிறுத்திக் கொண்டேன்.''

'' நீ செய்தது குடும்பத் தலைவிக்கு அழகு தான். ஆனால் சமூக நலத்துக்கு நாம் இருவரும் தீங்கு செய்து விட்டோம். அதற்கு நான்தான் காரணம். மன்னிக்க முடியாத குற்றம் அது.''

'' நான்தான் இப்பொழுது...''

'' நீ மீண்டும் பழையபடி ஆனால்தான் நான் நிம்மதி பெறுவேன்'' என்றான் ஸ்ரீனிவாஸன்.

நெடுநாட்களுக்குப் பிறகு பரஸ்பரம் அந்த இரண்டு ஜோடிக் கண்களின் உறவில் தூயமான அன்பும் தெளிவும் பளிச்சிட்டன. வெளியே தீபாவளியின் ஒளி அவர்கள் இதய மகிழ்ச்சியின் சாயையைப் போல் எங்கும் பிரகாசித்தது.

Printed and Published by R Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras 10
Managing Editor, T Sadasivam


பளபளப்பான
நீண்ட கரும்
கூந்தலழகுக்கு...
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட் ஹேர் ஆயில்
இப்பொழுது அழகான இப் புதுமாதிரி சீசாவில்
ரோஜா அல்லது மல்லிகை
மணத்துடன் கிடைக்கிறது.
ERASMIC PERFUMED COCONUT HAIR OIL
ECHO. 4A—50 TM
லண்டனிலுள்ள இராஸ்மிக் கோ. லிட்., சார்பாக
இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

